
R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
10a Upper Tooting Road , London SW17 7PG
Telephone: 02087724920
Conveyancing Services:
Residential , Commercial Conveyancing ,
Notarial Services:
Notarisation & Legalisation of Documents
Power of Attorneys,
SENTHURAN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor

A Freely Circulated Monthly
# புதினம்
PUTHINAM
FEBRUARY 2018
மலர் 22
இதழ் 1

LINGA & CO
LEGAL ADVISORS AND IMMIGRATION SPECIALISTS

V.P.Lingajothy
LLB (Hons), MSc, Dip Fms, Acilex
Principal, Immigration Specialist
46 HIGH STREET COLLIERS WOOD
LONDON SW19 2BY
TEL: (020) 8544 9285 FAX: (020) 8542 9530
EMAIL : LJLEGALADVISORS@YAHOO.CO.UK
OISC

லண்டனில் முதலாவது தமிழர் நகை மாளிகை
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
WESTERN
Jewellers
Tooting Branch:
230 Upper Tooting Road,
London Sw17 7EW
Tel : 02087673445
Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road,
Wembley, MiddX HAO 4YA
Tel : 02089030909



THARANI
JEWELLERY
அதி குறைந்த வட்டி வீதத்தில்
அடைவு பிடிக்கும் நகை மாளிகை
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ.
Tel: 020 8902 7111, 020 8902 6777

# தேர்(தல்) திருவிழா

'ஜனநாயகத்தை நிலைநாட்ட......நிரந்தரத் தீர்வினைப் பெற்றுத்தர......ஒற்றுமையை வெளிப்படுத்த ......'என்று பலதரப்பட்ட முழக்கங்கள் கேட்கத் தொடங்கியுள்ளன.

அதே மண்ணில் பல போராட்டங்களும் நடக்கிறது.

அதைப்பற்றி துளியளவும் கவலையில்லாமல், ரஜனிகாந்த் சொல்வதுபோல் ' போராடுவதற்கு ஒரு கூட்டம் இருக்கு.. நம்ம வேலை அதிகார பதவிகளை கைப்பற்றுவதுதான்' என்றவாறு எதையும் கண்டு கொள்ளாமல் கூட்டமைப்பினர் மேடைகளில் முழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

'தம்மைத் தெரிவு செய்தால், மரத்தை வேரோடு சாய்ப்போம்' என்று முன்னைய தேர்தல்களில் முழங்கியவர்களே மறுபடியும் மக்கள் முன் வருகிறார்கள். பேரினவாத மரம் வல்லரசுகளின் துணையோடு அப்படியேதான் நிமிர்ந்து நிற்கிறது.

ஆட்சி மாற்றத்தினை விரும்பிய இந்தியா- அமெரிக்காவிற்காகப் போராடிக்களைத்த கூட்டமைப்பினர், இப்போது தீர்வுத் திட்டத்திற்காகப் போராட வருகிறார்கள்.

உத்தேச வரைபில் வட -கிழக்கு இணைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை.

இறைமை பகிரப்படும் என்று யாரும் கூறவில்லை.

தமிழ் இறைமை என்கிற வார்த்தையே இல்லை கண்டியளோ...!.

மாகாணசபையை மீறி சிறு அசைவும் நிகழாது.

'கிடைப்பதை பெற்று அடுத்த கட்டத்திற்காகப் போராடுவோம்' என்பார்கள்.

இப்படித்தான் 80 இல் மாவட்ட சபையைப் பெற்றார்கள்.

நிர்வாக ரீதியிலான மாகாணங்களின் தற்காலிக இணைப்பினை, உயர் நீதிமன்றம் விழுங்கிவிட்டது.

இந்தியாவும் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தது.

கவனித்தீர்களா.....' மீளப்பெறமுடியாத அதிகாரம்' என்கிற புதிய விடயமொன்றினை சுமந்திரன் சொல்ல ஆரம்பித்துள்ளார்.

மூன்றிலொரு பெரும்பான்மை அல்லது சர்வசன வாக்கெடுப்பின் ஊடாக அரசியலைப்பினையே மாற்றலாம் என்பதுதான் இலங்கையின் வரலாறு.

ஆனால் இந்த தீர்வுக்கு கதையை தொடர்கதையாக வைத்தே, 'தொடர்ந்து எம்பியாக அரசியலில் நிலைத்து நிற்பது எப்படி ?' என்கிற இராஜதந்திர வித்தையை இவர்கள் கற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டும் உண்மை.

'வாக்குப் போட்டால் சுதந்திரம் கிடைக்கும்' என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் இருக்கும்வரை, இவர்களின் குதிரைச் சவாரி வெற்றிகரமாக நடைபெறும்.

இப்போதுள்ள அரசியல் சூழலில் ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

இந்தியா அமெரிக்காவின் பிராந்திய நலனிற்காக, கூட்டமைப்பு அரசியல் செய்வது போல் தெரிகிறது.

சரத் பொன்சேகாவிற்கு வாக்களிக்கச் சொன்னது முதல், கடந்த ஆட்சிமாற்றம் வரை இவர்களின் 'நிபந்தனையற்ற' வல்லரசு விசுவாசம் புரிகிறது.

வாக்களிக்கும் தமிழ் மக்கள் மீது அக்கறை இருப்பது போல் தெரியவில்லை.

அதைச் சமாளிக்கவே ' தீர்வு' என்கிற மந்திரக் கோலை இவர்கள் கையில் கொடுத்திருக்கிறது சிங்களமும் மேற்குலகமும்.

பண்டா- செல்வா ஒப்பந்தத்திலிருந்து இற்றைவரை பல நல்லிணக்க அரசியல் முன்னெடுப்புகளை பார்த்து வந்த தமிழ் மக்கள் இந்த ரணில் -சம்பந்தன் ஒப்பந்தத்தையும் பார்க்கத்தான் போகிறார்கள். ■


MATRIX CONSTRUCTIONS
MATRIX CONSTRUCTIONS
14, Whytecliffe Road, Purley, CR82AU


Loft Conversion, Extensions &
Renovations and conservatories
New Build
Structural repairs and & alterations
Bathroom, Kitchens and basements
Landscaping driveways and patios
Decorations
Maintenance
அனைத்து வீட்டு நிர்மாண, திருத்த வேலைகளுக்கு எம்மை நாடுங்கள்
Call:
079 1010 1022

செல்வராஜா கோல்டு ஹவுஸ்
Tooting Broadway


16வது ஆண்டு நிறைவை முன்னிட்டு
தாலிக்கொடி செய்வோருக்கு
கூறை, பட்டு புடவை 40% கழிவில்!
162 B, MITCHAM ROAD, LONDON SW17 9NJ
TEL: 020 87673795

LycaFly
call us 24X7
0207 132 32 32
Colombo பயணமா?
எங்குமில்லாத சிறப்பு சலுகை.
PLUS
FREE LYCAMOBILE TOP-UP
*T&Cs Apply - Top-up offer excludes on selected airlines


தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448



Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
ஒருவருட
இணைப்புச் சந்தா
£69
SET TOP BOX
INCLUDED
புதுப்பித்தல்
£49
14 மாதங்கள்
LycaTV App ஐ
Download செய்து
பார்வையிடலாம்
ஒரு மாதச் சந்தா
£4.99
மட்டுமே
Google play
App Store
tv
Roku
AirPlay
chromecast
Samsung SMART TV
LG Smart TV
androidtv
amazon fireTV
kindle fire
XBOX
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
விஜய்
ZEE தமிழ்
KTV
HD
Lyca TV Classic
1000க்கும் அதிகமான TAMIL திரைப்படங்கள்
SUBSCRIBE NOW!
0207 132 2727
FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCAMEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCAMEDIA LTD, THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THERE-OF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.
www.lycatv.tv

இனமானன்

# விடுதலைப்புலிகள் பற்றிப் பேசுவதற்கு சுமந்திரனுக்கு என்ன அருகதையுண்டு?



இந்த மாதம் கனடா வந்த இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், இங்குள்ள கூட்டமைப்புக் கிளையின் கூட்டத்தில் ஆற்றிய உரை தொடர்பாக வாதப் பிரதிவாதங்களும், கருத்துப் பரிமாற்றங்களும் இப்போது பல மட்டங்களில் வீச்சுப் பெற்று வருகிறது.

2013ம் ஆண்டு நடைபெற்ற வடமாகாண சபைத் தேர்தலுக்கும், 2015ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலுக்கும் தமிழரசுக் கட்சியின் கனடாக் கிளையினர் சேர்த்து வழங்கிய நிதியுதவிக்கு நன்றி தெரிவித்ததுடன் இவரது உரை ஆரம்பமாகியது.

தங்கள் கட்சிக்கு எதிராகப் போட்டியிட்டவர்களுக்கு கனடியத் தமிழர்கள் வழங்கிய ஆதரவையும் நெஞ்சிருத்தி மறவாது இக்கூட்டத்தில் சுமந்திரன் குறிப்பிட்டார்.

இதன் வழியாக, கனடாவில் தமிழரசுக் கட்சிக்கு எதிரான பலம் பொருந்திய மக்களணி இருக்கிறது என்பதை சுமந்திரன் புரிந்து கொண்டதையும் அறியமுடிந்தது.

2015ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியினருக்கு நிதி சேகரிக்க மாகாணசபை உறுப்பினர்களைக் கனடா செல்லுமாறு தாங்கள் கேட்டபோது, இது உங்கள் தேர்தல் என்பதால் நீங்களே சென்று சேகரியுங்கள் என்று அவர்கள் தெரிவித்ததாக சுமந்திரன் கூறியது, உட்கட்சிக்குள் இவர்களுக்குள் இருக்கும் விரிசலை வெளிக்காட்டியது.

அடுத்த மாதம் 10ம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல், அண்மையில் வெளியான அரசமைப்பு வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை எனும் இரண்டையும் மையப்படுத்தியதாக தன் உரையை சுமந்திரன் நிகழ்த்தினார்.

ஒரு சட்டத்தரணி என்ற வகையில் சொல்ல வேண்டியவைகளை, அவை யதார்த்தத்துக்குப் புறம்பாக இருந்தபோதிலும் - நம்பும் வகையில் சோடனை செய்து பேசும் ஆற்றல் இவரிடம் இருப்பதை நன்கறிய முடிந்தது.

உண்மை வீட்டின் வாசலை விட்டுப் புறப்படும் முன்னர், பொய் உலகம் சுற்றி வந்துவிடும் என்பதுபோல, ஒரு பொய்யை மறைப்பதற்கு மீண்டும் மீண்டும் பொய்களைக் கூறவேண்டிய நிலைக்கு சுமந்திரன் ஆளானார் என்பதை அவரது உரை அம்மணமாகக் காட்டியது.

தமிழரசுக் கட்சி உருவான காலம், சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்த நேரம், தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கி தனிநாட்டுக் கோரிக்கையை நிலைநிறுத்திய வட்டுக்கோட்டை தீர்மானக் காலம், தமிழ் இளையோர் ஆயுதமேந்தி மண்ணையும் மக்களையும் காப்பாற்றிய போர்க்காலம், முள்ளிவாய்க்கால் இனவழிப்புக் காலம் உட்பட தமிழரின் வரலாற்று ரீதியான எந்தவேளையிலும் சுமந்திரன் என்ற பெயரை எவரும் கேள்விப்பட்டதில்லை.

தமிழ் மக்களின் சாத்வீக ஆயுதப் போராட்ட காலங்களில் இந்தச் சுமந்திரன் எங்கிருந்தார், என்ன செய்தார் என்பது எவருக்குமே தெரியாது.

முள்ளிவாய்க்காலில் தமிழரின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னர் திடீரென தமிழரசுக்குள் நுழைந்து, கூட்டமைப்பின் பின்கதவால் புகுந்து, நியமன எம்.பியாகிய இவர், இப்போது தாமே தமிழரின் தன்னிகரில்லாத் தலைவராகவும், பேச்சாளராகவும், எல்லாமாகவும் காட்சி தருவதும், தமக்கே எல்லாம் தெரிந்ததுபோல காட்டிக்கொள்வதும் தமிழினத்தின் சாபக்கேடு.

இதற்கு உதாரணமாக இவரது கனடிய உரையின் சில பகுதிகளை மட்டும் பார்ப்போம்.

அண்மையில் நாடு கடந்த அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் ருத்திரகுமார் விடுத்த சவாலால் இவர் மனம் வாடியிருப்பது தெரிகிறது.

விடுதலைப் புலிகளிடமோ அல்லது வேறு எவரிடமோ கேள்வி கேட்காதவர்கள் தம்மிடம் மட்டும் எதற்காகக் கேள்வி கேட்க வேண்டுமென இவர் கேட்டுள்ளார்.

இதற்குக் காரணம் என்ன தெரியுமா? அரசியலமைப்பு வழிகாட்டுக் குழுவில் தாம் மட்டுமே பல முன்மொழிவுகளைக் கொண்டு வந்ததாகவும் இடைக்கால அறிக்கையில் தமிழர் தீர்வுக்கான எல்லாம் இருப்பதாகவும் தாம் பிதற்றி வருவதை ஒருமுறை சுமந்திரன் நினைப்பின், இக்கேள்வி ஏன் வருகிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

கூட்டமைப்பின் சம்பந்தனோ அல்லது அதன் மற்றைய எம்.பிக்களோ இடைக்கால அறிக்கை பற்றியும் அதன் எதிர்காலம் பற்றியும் வாய் திறக்க மறுத்திருக்கும் நிலையில், மிகப்பிரசங்கித்தனமாக தமிழ் மக்களை வார்த்தை ஜாலங்களால் ஏமாற்ற முனைந்தால் சவால்களுக்கும் கேள்விகளுக்கும் முகம் கொடுக்க நேரிடும்தானே.

ஆங்கிலத்தில் *Unitary* என்றால் ஒற்றையாட்சி என்பது எல்லோருக்கும் தெரியும். இதே ஒற்றையாட்சிதான் தமிழருக்கான சம உரிமைகளைப் பறித்து இரண்டாம்தரப் பிரஜைகளாக்கியது.

இந்த ஒற்றையாட்சியை 'ஏக்கிய ராஜ்ய' என்று சிங்களம் சொல்கிறது. இதற்கு சுமந்திரன் வழங்கும் வியாக்கியானம் பிரிக்கப்படாத, பிரிக்க முடியாத, ஒருமித்த ஆட்சி என்பது.

சிங்களத் தலைவர்களான மைத்திரி, ரணில், மகிந்த ஆகியோரில் ஒருவர்கூட இதுவரை வழங்காத வியாக்கியானத்தை சிங்களவர் அல்லாத சுமந்திரன் தமிழர்களுக்குக் கொடுக்க வேண்டிய நிலைமை ஏன் உருவானது?

சிங்களத் தலைவர்களுக்குப் புரியாத சிங்களம் இவருக்குப் புரிகிறதா?

ஒற்றையாட்சியின் தமிழ்ப் பதம் ஒருமித்தநாடு என்றால், இலங்கை சிங்கள நாடு என்பதும், பௌத்த நாடு என்பதும் மீள உறுதியளிக்கப்படுகிறது.

**சந்திரிகாவுக்கு ஒரு கதிர்காமர்**

**மைத்திரி-ரணிலுக்கு ஒரு சுமந்திரன்!**

இங்குதான் பிரச்சனையே எழுகிறது.

ஒற்றையாட்சியின் கருத்து இப்போது மாறியுள்ளதாகவும், பிரித்தானியாவில் ஸ்கொட்லாந்தும் அயர்லாந்தும் பிரிந்து போவதற்கு இடமிருப்பதால், இலங்கையிலும் அதற்கு இடமுண்டு என்பது சுமந்திரனின் கற்பனையுலகச் சொப்பனம்.

எந்தவேளையிலும் நாடு பிளவுபட அனுமதிக்கப்பட மாட்டாது என்று நாளாந்தம் கூறிவரும் மைத்திரியும் ரணிலும், வடக்கு கிழக்கு இணைப்புக்கோ, சமஷ்டிக்கோ இடம் கிடையாது என்று அழுத்திச் சொல்லி வருகின்றனர்.

உண்மைநிலை இப்படியிருக்க, விரும்பினால் இரண்டு மாகாணங்கள் இணைய இடமுண்டு என்பதும், புதிய அரசியலமைப்பு விதிகளை திருத்தவோ மாற்றவோ மீளப்பெறவோ முடியாதெனவும் சுமந்திரன் சொல்வது அப்பட்டமான ஏமாற்று.

ஒரு தமிழராக இருந்து கொண்டு, தமிழினத்துக்குக் காது குத்த சுமந்திரன் முனையக்கூடாது. சட்டம், அரசியலமைப்பு என்பவை காலத்துக்குக் காலம் மாற்றத்துக்குட்படுபவை. இலங்கையில் 1972, மற்றும் 1978ம் ஆண்டுகளில் புதிய அரசியலமைப்புகள் உருவாக்கப்பட்டதுபோல, இன்னும் பல தடவைகள் இவைகள் புதிதாக எழுதப்படும் சாத்தியங்கள் உண்டு.

இதைப் புரிந்து கொண்ட சுமந்திரன் இடைக்கால அறிக்கையை ஒரு பைபிளாக அல்லது குறி சொல்லும் சோதிடப் புத்தகமாகக் கருதுவது, தமிழருக்கு விமோசனத்தை வழங்காது.

விடுதலைப் புலிகளின் நோர்வே பேச்சுவார்த்தை பற்றியும், ஒஸ்லோ கோட்பாடு பற்றியும் விளங்கியும் விளங்காதவராக அல்லது எதுவுமே விளங்காதவராகச் சுமந்திரன் கருத்துக் கூறுவது முட்டாள்தனமானது.

விடுதலைப் புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு, ஒற்றையாட்சிக்குள் தீர்வுபெற சம்மதப்பட்டே இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக சுமந்திரன் கூறுவது அவரது அறியாமையின் வெளிப்பாடு.

தனிநாட்டை எவ்வாறு பிரித்தெடுப்பது, எங்கே எல்லைக்கோடு வரைவது என்று விடுதலைப் புலிகள் ஒருபோதும் பேசவில்லையென்பது இவரது குதர்க்கமான கருத்து.

ஒரு நாட்டுக்குள் எப்படித் தீர்வைப்பெற முடியதுமென்பது பற்றி ஆராயலாம் என்பதே ஒஸ்லோ கோட்பாடு.

இதனை ஒருபோதும் விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. இலங்கை அரசும் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனாலேயே ஒஸ்லோ கோட்பாடு செயற்பாடற்றுப் போனது.

தனிநாட்டுக் கோரிக்கைக்கு கடந்த தேர்தல்களில் தமிழர் தமக்கு ஆணை தரவில்லையென்றும், ஒற்றையாட்சிக்குள் சமஷ்டிக்கே ஆணை தந்ததாகவும் சுமந்திரன் கூறுவது, அவரால் திட்டமிட்டு அவிழ்த்து விடப்படும் பொய்யுரை.

கூட்டமைப்பை வன்னித் தலைமை உருவாக்கியபோது எங்கிருந்தார் என்று தெரியாத இவர், தமிழ் மக்களின் விடுதலை வரலாற்றை திசைதிருப்ப முனைவது சிங்களத்துக்கு வீசும் சாமரை.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் தனிநாட்டுக் கோரிக்கை என்பதுவும், 1977ம் ஆண்டுத் தேர்தலில் தனிநாட்டுக் கோரிக்கைக்கே மக்கள் வாக்களித்து தமிழர்களை அதிகாரத்துடன் நாடாளுமன்றம் அனுப்பினார்கள் என்பதையும் அவ்வேளையில் அரசியல் அரிச்சுவடிகூடத் தெரியாதிருந்த சுமந்திரனுக்கு இப்போது எல்லாமே முரணாகத் தெரிகிறது.

கூட்டமைப்பு உருவான காலத்தில் அதே தனிநாட்டுக் கோரிக்கைதான் அதன் அடிப்படை அம்சமாக இருந்தது.

2009ன் பின்னர் சுமந்திரன் நுழைந்த கூட்டமைப்பு அதனைக் கைவிட்டிருந்தது என்பதை அறிந்திராத தமிழ் மக்கள், வன்னித்தலைமை நீட்டிய விரலை மதித்து

20ம் பக்கம் பார்க்க

# புதினம்
PUTHINAM

லண்டன் தமிழர்களின்
அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:
ஈ.கே.ராஜகோபால்
E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே-அவுட்
9551395516

அலுவலக முகவரி:
PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk

'ஈழகேசரி' வெளியீட்டு நிறுவனத்துக்காக 21 ஆண்டுகளாக வெளிவரும் இலவச இதழ். தபாலில் பெற விரும்புவோர் முத்திரைச் செலவான £25 பவுண்களை மட்டும் Puthinam என்ற பெயருக்கு காசோலையாக அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.



அன்புடன் அழைக்கிறோம்

## லண்டனில் நூல் வெளியீட்டுவிழா




ஈழத் தமிழ் பத்திரிகையாளர்களுக்கு முன்னோடி
**கலாநிதி பொன் பாலசுந்தரம்**
அவர்களின்

## இலண்டனில் தமிழர் திருமணங்கள்

**(இந்து சமயசாரத் திருமண சம்பிரதாயங்கள் பற்றிய தமிழ், ஆங்கில விபர இணைப்புடன்)**

21.04.2018 சனிக்கிழமை
5.00 Pm - 9.30 Pm
WOODCOTE HIGH SCHOOL
MEADOW RISE, COULSDON
CROYDON CR5 2EH

தமிழ் உறவுகள் படிக்க வேண்டிய சாதனை - நூல்

வாழ்வோடும், நமது மண்ணோடும், இனப்பெருக்கத்தோடும் மரபு, சம்பிரதாயங்களை உள்ளடக்கிய உணர்ச்சிப் படைப்பு.

கல்வியில் முன்னேறி, வாழ்வில் மேலோங்கி, இனப்பெருமைக்கு ஒளிபரப்பும் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் திருமணத்தில் தடுமாறும் நிலையை இனமானத் தமிழர்களுக்கு எடுத்துக்காட்டும் படைப்பு.

தொடர்புகளுக்கு: 02087730047



# MATHEMATICS TUITION



Qualified Teacher of Mathematics and currently teaching in a secondary school in London with 7 years + teaching experience

- I have graduated from the University of Cambridge and the University of London and hold a BSc in Mathematics, an MSc in Medical Statistics and a Master of Education.
- GCSE Mathematics Tuition £20 per hour
- A-Level Mathematics and Further Mathematics £30 per hour

**Please contact Deepz on**

**020 8550 0908 / 07710174210**



## SAIVA HINDU PRIEST/ MINISTER OF HINDU RELIGION WITH NO PASTORAL ROLE

The Shree Ghanapathy Temple,
Wimbledon, UK,

*requires*
**a Saiva Hindu Priest**
(application reference SGT0003)

*Further details can be found at*
www.ghanapathy.co.uk.
Alternatively,please contact the Temple directly via email
enquiries@ghanapathy.com

or via telephone on
+44 (0)20 8542 7482.



## OM SAKTHI ASTROLOGY CENTRE

Skilled in: Astrology Hand Reading, Numerology, Horoscope Reading, Face Reading



**SIVA RAM GURUJI**

EXPERT IN:
PALM, FACE, PHOTO, PATRA
NAME AND DATE OF BRITH
READING KNOW YOUR PAST,
PRESENT & FUTURE



TO GET PERMANENT SOLUTIONS TO ALL YOUR PROBLEMS SUCH AS:

BLACK MAGIC, EVIL SPIRITS, JADOO, VOODOO, WITCHCRAFT OBEAH, EVIL EYE POWER, CURSE, JEALOUSY, HEALTH, LOVE MARRIAGE, FAMILY PROBLEMS, LOTTERY, JOB MONEY, EDUCATION COURT CASES, SEXUAL PROB., CHILDREN PROB., REUNITES LOVERS, ETC.,

**SPECIALIST IN BRINGING BACK LOVED ONES**

ONE STOP, 218 HIGH STREET NORTH
EAST HAM, LONDON - E6 2JA


**Contact: 07404 101 443 / 07404 197618**
India Number: (0091) 98480 53506



# விமலின் பக்கம்

தை மாதம் பிறந்து வாரங்கள் சில ஓடி மறைந்து விட்டன. தங்கள் புதல்வியருக்கு இனிமேலாவது ஒரு 'வழி பிறக்கும்' என்று பெற்றோருக்கு நம்பிக்கை ஊட்டுவதும்இந்தத் தை மாதம்தான். பெண் குழந்தை பிறந்ததும் தொட்டில் மற்றும் நப்கின், சிறியவளானதும் அழகான சட்டைகள், பெரியவளானதும் பாவாடைகள், நகைகள் அனைத்தும் தங்கள் விருப்பப்படியே வாங்கி வாங்கி அவளுக்கு அழகூட்டி ரசித்த பெற்றோர், திருமண வயதை எட்டும் தமது மகளுக்கு பொருத்தமான மணமகனையும் தாமே தெரிவு செய்வதில் வியப்பென்ன இருக்கிறது?

காலம் காலமாக எமது சமூகத்தில் இருந்து வரும் இந்த "பேசிச் செய்யும் திருமணங்கள்" இன்றைய மேற்குலக சமூகத்தால் 'அரேஞ்ட் மறீஜஸ்' என்று நகைப்பது எம்மவர் சிலரை கூச்சமடைய வைத்திருக்கலாம். ஆனால், விக்டோரியா மகாராணியின்




ஆட்சிக் காலத்தில் பிரிட்டிஷ் குடும்பங்களில் பெற்றோரே தத்தம் புதல்வியருக்கு மணமகனைத் தேடிக் கண்டு பிடித்து அரேஞ்ட் மறீஜ் செய்திருக்கிறார்கள்.

இன்றைய மேனாட்டு சமூகத்தினர் விக்டோரியா மகாராணி காலத்து திருமண முறைகளை வெறுப்பது மட்டுமல்ல, திருமணம் என்பது ஆயுள் முழுவதும் நீடிக்கும் ஒருகட்டாய உடன்படிக்கை அல்ல என்றும் வாதாடுகிறார்கள்.

எமது காரை மாற்றுவது போல - எமது வீட்டை மாற்றுவது போல எமது மனைவியையும்/கணவரையும் 5 அல்லது 10 வருடங்களில் மாற்ற வேண்டும் என்ற புது விதிசமைத்துள்ளார்கள் இந்த புதுயுகத்தின் புதுமைச் சிற்பிகள்!

"என்ன? - உங்களுக்குத் திருமணமாகி 25 ஆண்டுகள் நிறைந்து விட்டனவா? ஒரே முகத்தை பார்த்துக் கொண்டிருக்கும் உங்களுக்குப் போரடிக்கவில்லையா?" என்றும் கேட்கிறார்கள் இந்த சிற்றிசன் குஞ்சுகள்.

திருமணம் என்பது ஒருவனும் ஒருத்தியும் மட்டுமே தீர்மானித்து முடிவு செய்யும் ஓர் உடன்படிக்கை பெற்றோருக்கும் மற்றோருக்கும் இதில் இடமேயில்லை என்றும் வாதிடுகிறது இந்த நவநாகரிக சமூகத்தின் இளைய தலைமுறை.

ஆனால், எங்கள் சமூகத்தில் 'திருமணம்' என்பது பெற்றோரும் பெரியவர்களும் கூடி நிச்சயிக்கும் ஒரு விஷயம். இதனால்தான் திருமண அழைப்பிதழ்களில்...



"இன்னாரை இன்னாருக்குத் திருமணம் செய்து வைக்க பெற்றோரும் பெரியவர்களும் தீர்மானித்திருப்பதால்....." என்று குறிப்பிடப்படுகிறது.

காலம் காலமாகக் காப்பாற்றப்பட்டு கடைப்பிடிக்கப்பட்டு வந்த இந்த வழக்கத்தை 'பத்தாம் பசலி' பழக்கம் என்று கேலி செய்து உதறித் தள்ளும் இன்றைய படித்த மேனாடுவாழ் இளைய தலைமுறையினர் 'மணமகன் - மணமகள் தேவை' என்ற விளம்பரங்களை வெறுக்கிறார்கள். தமது புகைப்படங்களை வேறு அங்கிள்களுக்கு ஆன்ரிகளுக்கு அனுப்புவது தெரிந்தால் வீட்டில் பெரும் கலவரங்களையே உருவாக்குகிறார்கள். "நான் என்ன சூப்பர் மார்க்கெட் விற்பனைப் பொருளா?" என்று கேட்கிறார்கள். புரியாத புதிர்போல் தோன்றும் இந்த மேனாடு வாழ் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் இப்படி கல்யாணப் பேச்சுக்களை எதிர்க்கும்போது பெற்றோர் கதிகலங்கி இடிந்துபோய் உட்கார்ந்து விடுகிறார்கள்.

தாங்கள் பெற்ற செல்வம் ஒருவேளை 'காதலில் விழுந்து விட்டதோ' என்ற அச்சம்தான் அவர்களுக்கு முதலில் ஏற்படுகிறது. மூத்த தலைமுறையினர் மத்தியில் 'காதல்' என்பது ஒரு கெட்ட வார்த்தை. எத்தனை சினிமாப் படங்களில் காதலர்களை அடித்து உதைத்து வெட்டிக் கொல்லும் வெறித்தனத்தைப் பார்த்திருக்கிறோம்.

தமிழ்நாட்டின் பொள்ளாச்சி பொறியியல் கல்லூரியில் படித்து வந்த 22 வயதான ஷங்கர் 21 வயதான தன் சகா கௌசல்யாவைக் காதலித்து வந்தார். ஷங்கர் ஒரு தலீத்(தாழ்த்தப்பட்ட இனத்தவன்), கௌசல்யா தமிழ்நாட்டில் உயர்ந்த இனமான தேவர் இனத்தவள். இருவரும் 2015-ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார்கள். சாதிவெறியினால் வெகுண்டெழுந்த சின்னச்சாமி(கௌசல்யாவின் தந்தை) கூலிப்படையை வைத்து ஷங்கரை வெட்டிக் கொன்றார். 2016-ல் ஆரம்பித்த இந்த ஆணவக் கொலை வழக்கில் மணமகள் கௌசல்யாவே முக்கிய சாட்சி. தன் பெற்றோர், மாமனார் உட்பட பலருக்கு எதிராக அவள் சாட்சியம் வழங்கினாள்.



கடந்த மாதம் டிசம்பர் 12-ம் திகதி திருப்பூர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. தந்தை சின்னச்சாமிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. மற்றவர்களுக்கு ஆயுள் தண்டனைவிதிக்கப்பட்டது.

இந்தியாவையே அதிர வைத்த இந்த ஷங்கர் போன்றவர்களின் சாதி ஆணவக் கொலைகள் மேனாட்டு தமிழர் குடும்பங்களில் இதுவரை நடந்தது கிடையாது. இனிமேலும்நடக்காமல் தவிர்க்க பெற்றோர் பெரும் பாடு படுகிறார்கள்.

மகள் காதலிப்பவள் வெள்ளை இனத்தவனாக கலப்பு இனத்தவனாக இருந்தால் அதை விரக்தியுடன் ஏற்கும் பெற்றோர், பையன் இலங்கைத் தமிழனாக



இருந்து விட்டால், "பெடியன் எவடம்? ஆர் பகுதி?" என்ற புலன் விசாரணைகளில் இறங்கி விடுகிறார்கள். தமது மாப்பிள்ளை ஷங்கரைப் போல தலித்தாக இருந்து விட்டால் தமது நண்பர்கள்,உறவினர்கள் மத்தியில் தாம் தலைகவிழ வேண்டியிருக்குமே என்ற அச்சமே இதற்குக் காரணம்.

மேனாட்டில் இன்றைய இளைய தலைமுறை யுவதிகளும் இளைஞர்களும் பெற்றோரின் உழைப்பினால் பல்கலைக்கழகம் சென்று மருத்துவராக விஞ்ஞானியாக உயர்பதவிகளைப் பெற்று வருகிறார்கள்.

படிப்பும் பட்டமும் ஊக்கமும் திறமையும் இருந்தால் பிரிட்டனில் உயர் பதவிகள் தேடி வரும். "நீ தெமிலா? நீ கொட்டியாவா? போய் பின்வரிசையில் நில்" என்று சொல்வதற்கு இங்கு மஹிந்த போன்ற துவேஷவாதிகள் கிடையாது.

கை நிறைய சம்பளம் வாங்கும் எங்கள் யுவதிகள், இளைஞர்கள் பெரிய கார், நீண்ட விடுமுறை என்று வாழ்க்கையை இன்பகரமாகக் கழிக்கும்போது பெற்றோர் 'திருமணம்'என்று பேச்செடுத்தால் சலிப்பு வராதா என்ன?

என் சுதந்திரத்தைப் பறிக்க, என் இன்ப வாழ்க்கையைக் கேள்வி கேட்க 'கணவன்' என்ற பெயரில் ஒரு கங்காணி கண்காணிப்பவன் எனக்குத் தேவையா? அவனையும் அவனது பொறாமை கொண்ட அம்மா, சகோதரிகளையும் நான் சகித்துக் கொள்ள வேண்டுமா?

நான் என் எதிர்காலத்தை என் நண்பர்கள் தோழியருடனேயே ஜாலியாகக் கழித்து வருகிறேன் என்று விரும்பும் பல நூறு யுவதிகள், இளைஞர்கள் இதை தமது பெற்றோரிடம் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் அரை மனதுடன், பெற்றோர் பார்த்த வரனுடனே தம்மை இணைத்துக் கொள்கிறார்கள்.

இரண்டு, மூன்று வருடங்களிலேயே உறவு சலித்துப்போய் நீதிமன்றத்தை நாடி விவாகரத்தும் கேட்கிறார்கள்.

பிரிட்டிஷ் பல்கலைக்கழகங்களில் உயர் கல்வி கற்று

தொடர்ச்சி 27ம் பக்கத்தில்


SkyWings Ltd.
Your Travel Is Our Passion...
23 YEARS
Talk to our Specialist in TAMIL
0208 672 9111
COLOMBO SPECIALS
HURRY
BOOK NOW
LIMITED SEATS AVAILABLE
40kg
Direct Flight
From £474
SriLankan Airlines
JULY / AUGUST
SPECIALS
QATAR AIRWAYS القطرية
From £690
SECURE YOUR BOOKING BY PAYING A £150 DEPOSIT
Worldwide Specials
MELBOURNE fr £598
AUKLAND fr £607
NEW YORK fr £324
SYDNEY fr £590
TORONTO fr £312
CHENNAI fr £387
TRICHY fr £427
DELHI fr £397
KUALA LUMPUR fr £412
SINGAPORE fr £419
119, Tooting High Street London, SW17 0SY | T: +44 (0) 20 8672 9111
* Above fares are subject to availablility. T&Cs Apply.
IATA
ATOL PROTECTED

# ரஜினி | கமல் | வைரமுத்து | விஜயேந்திரர்...

# தமிழகத்தில் நடக்கும் கூத்துகள்









ஜெயலலிதா மறைவு அதை யொட்டிய அரசியல் மாற்றங்கள் மற்றும் நீட் தேர்வு, என மக்கள் பிரச்னைகளில் ஆரம்பித்து, தற்போது நடிகர்களின் அரசியல் பிரவேச அறிவுப்புகள் வரை தொடர்ந்து செய்திகளால் பரபரத்துக் கொண்டேயிருக்கிறது தமிழகம். சமீபமாய் தமிழகத்தை தடதடக்க வைத்துக் கொண்டிருக்கும் இந்தச் செய்தி நிலவரங்கள் குறித்தும் அதன் பின்னணிகள் குறித்தும் கீழே காண்போம்.

மக்கள் செல்வாக்குப் பெற்ற அதிமுக தலைமை யார்? என்ற கேள்விக்கு விடை தேடும் களமாகப் பார்க்கப்பட்ட ஆர்.கே. நகர் தேர்தல் முடிவுகள் நாடு முழுவதும் பலத்த அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன. சசிகலாவின் டி.டி.வி தினகரன் இமாலய வெற்றி, அவரது புதுக்கட்சி, தமிழக சுற்றுப் பயணம் என் அவர் பயணிக்க இருப்பதாக வெளிவரும் செய்திகள் எதிர்த்தரப்பை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளன.

## ரஜினி அரசியல் பிரவேசம்

'வருவாரா, வரமாட்டாரா...' என்று 20 வருடங்களுக்கும் மேலாக எதிர்பார்ப்புகளை மட்டுமே ஏற்படுத்திக் கொண்டிருந்த நடிகர் ரஜினிகாந்த், தனது அரசியல் பிரவேச அறிவிப்பை கடந்த ஆண்டின் கடைசி நாளில் அறிவித்தார். 'ஆன்மிக அரசியல்' 'காவலர் படை' மற்றும் 'போராட்டங்கள்' குறித்த ரஜினியின் அறிவிப்பு ஆகியவை பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளன. 'பி.ஜே.பி பின்னணியில் வருகிறார். ரஜினி, "தமிழரல்லாத ரஜினி தமிழர்களை ஆள்வதற்கு ஆசைப்படக் கூடாது" என்று அவரது அரசியல் பிரவேசத்துக்கு எதிராக காரணங்களும் சொல்லப்படுகின்றன. ஆனால், தன்னைப் பற்றிய செய்திகளுக்கு மட்டுமல்ல... தமிழகப் பிரச்னைகள் குறித்தும் கூட எந்தவித நிலைப்பாடோ, கருத்தோ தெரிவிக்காமல், வழக்கம்போல் மௌனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார் ரஜினிகாந்த்; ஆனாலும் அதிர்ந்து கொண்டிருக்கிறது தமிழகம்!

## கமல் அரசியல் பிரவேசம்

ரஜினியின் அறிவிப்புக்கு முன்பே, தமிழக அரசியலுக்குள் தான் வந்து விட்டதாக அறிவிப்பு செய்த நடிகர் கமல்ஹாசன், அடுத்தடுத்து அதற்காக முன்னேற்பாடுகளிலும் கவனம் செலுத்தத் தொடங்கிவிட்டார். ஆளும் கட்சிக்கு எதிரான அவரது விமர்சனங்கள் தினசரி செய்திகளாயின. பிப்ரவரி 21 ஆம் தேதி தனது அரசியல் கட்சிப் பெயரை அறிவிக்கப்போவதாகச் சொல்லியிருக்கும் கமல்ஹாசன், தனது அரசியல் பயணத்தில் முதற்கட்டமாக கிராமங்களைத் தத்தெடுக்கவிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். 'நாளை நமதே' என்ற பெயரில் மக்களைச் சந்திக்கவும் தயாராகிவிட்டார் உலக நாயகன்!

## ஆளுநர் ஆய்வு

தமிழக அரசியலில், சமீபகாலமாக மத்திய பி.ஜே.பி அரசின் தலையீடு அதிகரித்துள்ளதாக குற்றச்சாட்டு வைக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், தமிழக ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள பன்வாரிலால் புரோகித், தமிழகத்தின் முக்கிய நகரங்களுக்கு விசிட் செய்து ஆட்சி அதிகாரத்தில் உள்ள அதிகாரிகளோடு ஆலோசனை செய்த விவகாரம் பலத்த சர்ச்சையை ஏற்படுத்தி வருகிறது. ஆனாலும் ஆளுநரின் ஆய்வு தொடர்கிறது. 'மரபு மீறுகிறார் ஆளுநர்' எனச் சொல்லி கறுப்புக்கொடி ஏந்தி எதிர்ப்புத் தெரிவிக்கிறது எதிர்க்கட்சியான தி.மு.க



ஆனால், ஆளுநரின் செயல்பாடுகளுக்கு 'பச்சைக் கொடி' காட்டி வரவேற்கிறது அ.தி.மு.க.!

அதிரடியாகப் பேருந்துக் கட்டணத்தை உயர்த்தி அறிவித்த தமிழக அரசு, 'போக்குவரத்து ஊழியர்களின் ஊதிய உயர்வுகளைச் சமாளிக்க கட்டண உயர்வு அவசியம்' என்பதையும் காரணமாகச் சொல்லி ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்க, கட்டண உயர்வினைத் தாக்குப்பிடிக்க முடியாத பொதுமக்கள் அரசுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்திக் கொண்டேயிருக்கிறார்கள்.

## ஆண்டாள் சர்ச்சை

தமிழுக்குத் தொண்டு செய்த ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள் குறித்து, ஒரு நாளிதழில் கவிஞர் வைரமுத்து எழுதியிருந்த கட்டுரை பலத்த சர்ச்சையைக் கிளப்பியது. இதைத் தொடர்ந்து, 'ஆண்டாளை அசிங்கப்படுத்திவிட்ட வைரமுத்து மன்னிப்பு கேட்க வேண்டும்' என்று இந்து அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்தன. இதையடுத்து வைரமுத்து தனது வருத்தத்தினைப் பதிவு செய்தார். ஆனாலும் வைரமுத்துவுக்கு எதிராகப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. 'வைரமுத்து பேசியதில் தவறிருப்பதாகத் தெரியவில்லை' என உயர்நீதிமன்றம் கருத்துத் தெரிவித்துள்ளது. ஆனாலும், இந்த அமைப்புகளுக்கும் தமிழார்வலர்களுக்கும் இடையே தொடர்ந்து பற்றி எரிகிறது இவ்விவகாரம்.

## விஜயேந்திரரின் தியானமும் சர்ச்சையும்

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற, காஞ்சி இளைய மடாதிபதி விஜயேந்திரர், தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலின்போது எழுந்து நின்று மரியாதை செலுத்தவில்லை. மாறாக அதே நிகழ்ச்சியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டபோது, எழுந்து நின்று மரியாதை செலுத்தினார். அவரது இந்தச் செயல்பாடு, பொதுமக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் ஆர்வலர்களும், அரசியல் தலைவர்களும் தங்களது கண்டனங்களைப் பதிவு செய்திருப்பதோடு விஜயேந்திரர் மன்னிப்பு கோரவேண்டும் என்ற கோரிக்கையோடு போராட்டங்களையும் நடத்தி வருகின்றனர். 'தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் ஒலிக்கப்பட்டபோது, விஜயேந்திரர் தியான நிலையில் இருந்ததால், எழுந்த நிற்கவில்லை' என விளக்கம் சொல்லியிருக்கிறது காஞ்சி மடம்!

'காரணம் இல்லாமல் காரியம் இல்லை' என்பார்கள். தமிழகத்தை ஒருவித படபடப்புக்குள்ளேயே வைத்திருக்கும் இப்பிரச்னைகளுக்குப் பின்னேயும் பலதரப்பட்ட 'அரசியல் கணக்குகள்' ஒளிந்து கிடக்கின்றன என்று கருத்துத் தெரிவிக்கின்றனர் அரசியல் விமர்சகர்கள். எது எப்படியோ.... எல்லாச் செயல்பாடுகளையும் தீர ஆராய்ந்து, பகுத்தறிவோடு சிந்திப்பார்களா தமிழக மக்கள்? ■



# வாசகர் கடிதம்

### பெருமைக்கு உரியவர்கள்

பொப் இசை ஏ.ஈ.மனோகரன் மறைவு மனதுக்குப் பெருத்த வருத்தத்தை அளிக்கிறது. அவரது பாடல் என் காதுகளுக்குள் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. பொப்பிசை என்றால் இன்னொருக யாழ்ப்பாணத்தவர் என் மனக்கண்ணில் வருகிறார். அவர்தான் நல்ல கருத்துக்களைச் சொன்ன பண்பாளர். 'சின்னமாமியே' என்றும், 'கள்ளுக்கடைப் பக்கம் போகாதே!' என்பது போன்ற பல கருத்துள்ள பாடல்களைத் தானே இயற்றிப் படையவர். அவுஸ்திரேலியா மெல்போனில் வாழும் அவர் லண்டனுக்கும் வந்திருக்கிறார். எப்படியானாலும் இருவரும் புகழுக்குரியவர்கள். ஈழத்தவர்களுக்குப் பெருமை தேடித் தருபவர்கள்.

*ஆர். இராஜசிங்கம் Hayes*

### 'புதினம்' வரவேண்டும்

டிசம்பரில் 'புதினம்' வரவே இல்லை என்பதும் ஒரு கவலை. என்ன விஷயங்கள் வருகின்றன என்பதைப் பற்றி கவலை வரவேண்டும் அதுவே எங்கள் சந்தோஷம்.'

*து. சண்முகநாதன் Wimbledon*

### அனுபவம்

பத்திரிகை என்றால் எப்படி இருக்க வேண்டும் என்பதை 'புதினம்' இதழிலிருந்து படிக்க வேண்டும். ஒவ்வொரு பக்கத்திலும் வெளியிடப்படும் ஆக்கங்களும், வடிவமைப்பும் எடுத்துக்காட்டு. அனுபவம் தான் முக்கிய காரணம்.

*எஸ்.எம்.மணியம் Wembley*

### மிக்க நன்றி

கடந்த இதழில் நல்ல காரியம் செய்திருக்கிறீர்கள்! மிக்க நன்றி ஆசிரியரே! இரண்டு பக்கத்தை சினிமாவுக்கு ஒதுக்கி வந்த நீங்கள் ஒரு பக்கத்தை மட்டும் சினிமாவுக்கு ஒதுக்கியிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இதே போன்று தொடருங்கள்.

*கு. செல்வநாயகம் Kingston*

# திருக்கைலாய யாத்திரை 2018

வாழும் போதே திருக்கைலாயம் சென்று வர! புனித மானசரோவர் ஏரியில் நீராட,ஓர் அரிய வாய்ப்பை வழங்குகிறது

## Sainica Travels









## ➢ பயணத் திகதி 22.05.2018 முதல் 08.06.2018 வரை

- தரமான தங்குமிட வசதிகள் மூன்று நேர சைவ உணவு மற்றும் தொலைக்காட்சி பொருத்திய குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனம்.
- புனித மானசரோவர் ஏரி மற்றும் திருக்கைலாய மலையில் பூஜை, யாகம் மற்றும் ஆராத்தி செய்வதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.
- திருக்கைலாய மலையை வலம்வர (பரிக்ரமா) விரும்புபவர்களுக்கு உரிய வசதிகள் யாக் (Yak), குதிரைகள் (Horses/Pony) மற்றும் சுமை தூக்குபவர்கள் (Porters) ஒழுங்கு செய்துதரப்படும்.
- Nepal Visa மற்றும் Tibet Permit இலவசமாக பெற்றுத்தரப்படும்.
- உங்கள் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்ய எமது நிறுவன முகவர் ஒருவர் UK இல் இருந்தே முழு சுற்றுலாவிலும் உங்களுடன் பயணிப்பார்.

தொடர்புகளுக்கு : **Sainica Travels**
தொலைபேசி :
07342150501/07957597024
Email: info@sainicatravels.com
www.sainicatravels.com
Facebook.com/Sainicatravels

பயணிக்கும் இடங்கள்

**(1) நேபால் – காத்மண்டு (Nepal – Kathmandu)**

- பசுபதிநாத் ஆலயம்.
- சுயம்புநாத் ஆலயம்.
- போதநாத் பௌத்த கோவில்.
- Bhaktapur Durbar Square.
- காத்மண்டு Sightseeing.
- Shopping at தமெழ் மார்க்கெட் (Thamel market).

**(2) திபெத் – சீனா (Tibet – China)**

- திருக்கைலாய பர்வதம்.
- பிரம்மபுத்ரா நதி.
- இராவணன் தவம் செய்த இடம்.
- கௌரிகுண்ட் - பார்வதி சரோவர்.
- Tibet – Saga City (சகா நகரம்)
- கைலாஷ் பரிக்ரமா அல்லது கோரா (திருக்கைலாய மலையை வலம்வருதல்).
- புராணங்களில் கடவுளர் மற்றும் தேவர்கள் வந்து நீராடுவதாக போற்றப்படும் புனித மானசரோவர் ஏரி.

**3 விமானச்சீட்டுக்கள், மூன்று நேர உணவு, தங்குமிடம், Tibet permit மற்றும் Nepal visa உட்பட**
**கட்டணம் £3650**

**Frequently Asked Questions:**

1. **எனக்கு 75 வயது. நான் இந்த யாத்திரையில் பயணிக்கலாமா?**
ஆம். 80 வயது வரை இந்த யாத்திரையில் அனுமதிக்கப் படுவர்.

2. **எனக்கு உயர் இரத்த அழுத்தம் (High Blood Pressure), Diabetes, இதய நோய் (Heart Disease) மற்றும் High cholesterol உள்ளது. நான் இந்த பயணத்தில் பங்குகொள்ளலாமா?**
மேல் குறிப்பிட்ட Medical conditions உள்ளவர்கள் பலர் எமது Tibet முகவர் மூலம் (Tibet Agent) முன்னர் திருக்கைலாய யாத்திரையை மேற்கொண்டு வெற்றிகரமாக திரும்பியுள்ளனர் மேலும் இந்த யாத்திரையில் பங்குகொள்ளும் பலருக்கு மேல் குறிப்பிட்ட Medical conditions இருப்பதால் இந்த யாத்திரை மருத்துவ உதவி முன் ஏற்படுகளோடு (Oxygen Cylinders, Medicines for High Altitude Sickness and Emergency Medical Attention) மிகவும் சிரத்தையுடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. Your Health Conditions will be monitored continuously during yatra. இருப்பினும் உங்களுடைய குடும்ப வைத்தியரிடம் (GP) ஆலோசனையை பெறுவது மிகவும் முக்கியம்.

3. **என்னால் நீண்ட தூரம் நடக்க இயலாது. நான் இந்த யாத்திரையில் பயணிக்கலாமா?**
ஆம். நாம் ஒழுங்கு செய்துள்ள இந்த யாத்திரையில் பயணிப்பவர்கள் புனித மானசரோவர் ஏரி மற்றும் திருக்கைலாய மலையின் அடிவரை வாகனத்திலேயே செல்லலாம். மேலும் அதிக நடை இல்லாமல் திருக்கைலாய மலையை அருகில் இருந்து தரிசிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

4. **என்ன வகையான உடற்பயிற்சி தேவை?**
இந்த யாத்திரைக்கு முன்னர் **உடல், மன ரீதியான தயார் படுத்தல்** மிகவும் அவசியம். உங்கள் மருத்துவரின் (GP) ஆலோசனையுடன் உடல் பரிசோதனை செய்வது நல்லது. இது தவிர நடைபயிற்சி, உடற்பயிற்சி, யோகாசனம் (Yoga) மற்றும் மூச்சு பயிற்சி (Breathing Exercise) செய்வது நல்லது. இதற்கான பயிற்சி பட்டறைகள் எங்களால் (Sainica Travels) இலவசமாக ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

5. **இந்த யாத்திரை தொடர்பான நேரடி அனுபவம் உங்கள் நிறுவனத்திற்கு உண்டா?**
ஆம். எமது நிறுவன முகவர் அண்மையில் முன் ஏற்பாடு யாத்திரையை (Risk Assessment Tour) மேற்கொண்டு மானசரோவர் ஏரி, திருக்கைலாய மலை, Everest Base Camp , Tibet மற்றும் Nepal நேரடியாக சென்று எதிர்வரும் May மாத யாத்திரை சிறந்த முறையில் அமைவதற்கான அனைத்து ஏற்படுகளையும் மேற்கொண்டு திரும்பி உள்ளார்.

FAST CASH
Since 1999

# Central Bank Approved Money Transfer to Sri Lanka



* T/C Apply

Transfer Fee from £5

## Why send with us?

- Central Bank approved official Exchange Rates
- Fast, Safe and Secure - *Same Day Bank Credits**
- Your money sent from the UK and not credited locally
- Established in 1999 & UK FCA Authorised

*Credit our account online & calls us !* BARCLAYS
A/C Name : C.E.C. LTD
A/C No : 70713945 Sort Code : 20-36-47

www.efastcash.co.uk | 114-116, Station Road, Edgware HA8 7AA | Open 7 Days
FASTCASH IS A FCA & HM CUSTOMS AND EXCISE / REGISTERED BUSINESS. MSB 12112819 / FCA -PI 540536

**020 8886 4488 / 020 3437 1205**

HNB BOC PEOPLE'S BANK NSB SampathBank SEYLAN NDB bank Nations TrustBank HSBC PAN ASIA Standard Chartered DFCC Vardhana Bank Amãna Bank

MODERN FAMILY APARTMENTS IN MT. LAVINIA,
## SRI LANKA

- DOUBLE ROOMS & 1,2,3 BED APARTMENTS
- FULLY FURNISHED WITH AIR CON, LIFT & PARKING

UK BOOKINGS **MIKE** ON **07733 261 999**
VISIT OUR WEBSITE **www.stayatmount.com**

FROM £25 PER DAY*





Now is the time to book your Flights or Holidays with us!
## CHECK OUR FARES FIRST, BEFORE YOU BOOK ELSEWHERE!



GREAT VALUE FARES*

### COLOMBO SPECIAL!

KUWAIT AIRWAYS from **£410*** 01 Jan -15 Jul 2018

| | | | | | |
|---|---|---|---|---|---|
| JET AIRWAYS | £450* | 07 Jan - 22 Mar 2018 | OMAN AIR | £475* | 01 Jan - 01 Feb 2018 |
| GULF AIR | £445* | 10 Jan - 29 Mar 2018 | Emirates | £475* | 07 Jan - 06 Feb 2018 |
| TURKISH AIRLINES | £450* | 01 Jan - 20 Mar 2018 | ETIHAD | £490* | 06 Apr - 14 Jun 2018 |
| QATAR AIRWAYS | £470* | 16 Feb - 05 Jul 2018 | SriLankan | £495* | 02 Apr - 15 Jun 2018 |
| AIR INDIA | £475* | 01 Jan - 22 Jun 2018 | | | |

*Inclusive taxes.
Seats are subject to availability.

Koggala Beach Hotel
Koggala, Sri Lanka



£685pp Inc Flights

*10 nights on All Inclusive
*London

IATA

HolidayAir
A Travel Experience to Remember
Since 2006

Hotline; 07534 433111 **020 8440 0770** www.holidayair.com / 130 High Street, Barnet EN5 5XQ

*All advertised fares are of real time itineraries during the issue of publication. Fares include taxes & are subjected to availability and may change without any prior notice. T/C conditions apply.

# பூதத்தம்பி கோட்டை

## வல்வில்வரையன்

**ஜோ**திநாதன் - சந்திரவல்லி திருமணம் நடந்து இரு வாரங்களின் பின் ஒரு நாள் -

புனிதமாக மலர்ந்த காலைப் பொழுதில் பனங்காம அரச மாளிகையின் பொது அறையில் அமர்ந்திருந்த ஜோதிநாதனைப் பார்த்து குமாரவன்னியன் கேட்டார்:

“ஜோதி, உனது பெற்றோர்களைக் கொன்ற அந்த அந்திராசியையும், அவனது கையாள் அமரதாஸாவையும் பழி வாங்கப் போவதாகச் சபதம் போட்டாயே! அதை மறந்துவிட்டாயா? அல்லது அதற்கான திட்டம் ஏதும் வைத்திருக்கிறாயா?”


“அதை நான் மறந்துவிடவில்லை, மாமா. ஆனால், வஞ்சம் தீர்ப்பதற்காக என்று எனது கையால் ஒருவரைக் கொல்வது எனக்குப் பழக்கமில்லாத செயல். எனது அப்பா என்னை அந்த வகையில் வளர்க்கவில்லை; தவறு செய்தவர்களையும் மன்னிக்கும் படியே பழக்கப்பட்டவன் நான். அதே சமயம், எனது அப்பா-அம்மாவைக் கொன்ற காதகர்களைப் பழிவாங்காமல் விடப்போவதில்லை. சரியான சந்தர்ப்பத்திற்காகக் காத்திருக்கிறேன்.

முதலில் என்னைத் தயாராக்கிக் கொள்ள வேண்டும். ஒன்றரை ஆண்டுகள் சிறையிலிருந்த காலத்தில் என்னால் எதுவிதமான உடற் பயிற்சியிலோ, ஆயுதப் பயிற்சியிலோ ஈடுபட முடியவில்லை. இப்போதுதான் மீண்டும் வில்லையும் வாளையும் கையிலெடுத்திருக்கிறேன். இன்னும் முந்தைய மேம்பாட்டு நிலையை அடையவில்லை.”

‘‘ஜோதி, உனக்கு இன்னுமொரு கடமை இருக்கிறது. உன்னை பூநகரிச் சிறையிலிருந்து விடுவித்தவர்களில் முக்கிய பங்கு வகித்தவர்கள் வில்லாளிகள். அந்த வில்லாளிகள் புதிதாக நமது படையில் சேர்ந்த இளைஞன், அவர்களை வில் வித்தையில் வல்லவர்களாக பழக்கி எடுத்தவன் ‘வில்லவன் வரையன்’ என்ற கச்சாய் கிராமத்து இளைஞன், அவனது சேவையைப் பாராட்டி எங்களது அரச லாயத்திலிருந்து ஒரு சவாரிக் குதிரையை அவனுக்குப் பரிசாகக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறேன். அந்தக் குதிரையை நீ எடுத்துக் கொண்டு போய் அவனிடம் கொடுப்பது பொருத்தமாக இருக்கும். உன்னைச் சிறையிலிருந்து விடுவித்ததற்காக நன்றி கூறி, குதிரையைப் பரிசளித்து விட்டு வந்தால் நல்லது.”

“கட்டாயமாக அந்த இளைஞனைப் பாராட்டிப் பரிசளிக்க வேண்டும், நான் கொண்டு போய்க் கொடுக்கிறேன்.”

“உன்னோடு நமது வீரர்களில் மிக்க நம்பிக்கைக்கு உரியவனான சாம்பவனை அனுப்பி வைக்கிறேன். அவன் பரிசாகக் கொடுக்க வேண்டிய குதிரையை ஓட்டிக் கொண்டு வந்து தந்துவிட்டுத் திரும்பிவிடுவான். நீ வரையனைப் பார்த்து பரிசைக் கொடுத்து விட்டு தனியாகத்தான் திரும்பவேண்டும்”.



“நல்லது மாமா, அப்படியே செய்கிறேன்” எனப் பதிலளித்தான் ஜோதிநாதன்.

இரண்டு நாட்கள் கழித்து சந்திரவல்லியிடம் விடை பெற்றுக் கொண்டு சாம்பவனோடு கச்சாய் கிராமத்தை நோக்கிப் பயணித்தான் ஜோதிநாதன்.

**பூ**நகரியின் வடக்கே சங்குப்பிட்டிக்கு மேற்காக அமைந்திருந்தது. கச்சாய் கிராமம், வட எல்லையாகப் பரந்திருந்த யாழ் கடல் - நீரேரிக் கரையிலிருந்து ஒரு கூப்பிடு தூரத்திற்கு நெடிதுயர்ந்த தென்னை மரங்களினிடையே காய்ந்த தென்னங்கிடுகுகளால் வேயப்பட்ட குடிசை வீடுகள் காணப்பட்டன. அவை அக்கிராமத்தை வதிவிடமாகக் கொண்ட மீனவர்களுக்கும், விவசாயிகளுக்கும் சொந்தமான வீடுகள். அக்குடிசைகளுக்கிடையே பதினேழாம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட மாதா கோவில் ஒன்றுதான் கற்களால் கட்டப்பட்ட கட்டிடமாக இருந்தது. கிராமத்தின் தெற்கே பச்சைப் பசேலென்ற நெல் வயல்களும் அதற்கப்பால் சரிவாக மேலெழுந்த குன்றில் அடர்த்தியான காடுகளும் காணப்பட்டன.

மாலை மங்கி இருள் கவிய ஆரம்பித்த நேரத்தில் வழி கேட்டு, வழி கேட்டு கச்சாயில் வரையன் வாழ்ந்த குடிசையை அடைந்தான் ஜோதிநாதன். விவரங்களைக் கேட்டறிந்ததும் முதலில் அதிர்ச்சியும், அடுத்து ஆச்சரியமும் பின்னர் பரிசாகக் கிடைத்த உயர் ஜாதிக் குதிரையைக் கண்டு அளவற்ற சந்தோஷமும் அடைந்தான் வரையன். ஆனாலும், பனங்காமத்தில் அடுத்து குமார வன்னியனுக்குப் பின்னால் அரசனாகப் போகிறவன் தன்னைத் தேடி இக்குடிசைக்கு வருவான் என்பதை அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

‘‘எதற்காக ஐயா இத்தனை சிரமமெடுத்துக் கொண்டு இங்கே வந்தீர்கள்? சொல்லியனுப்பியிருந்தால் நானே பனங்காமத்திற்கு வந்திருப்பேனே” என்றான் வரையன்.

“முதலில் என்னை ஐயா போட்டு அழைக்க வேண்டாம். ‘ஜோதி’ என்று அழைத்தால் போதும். நான் சில நாட்கள் உன்னோடு தங்கியிருந்து உன்னிடமிருந்து நீயறிந்த அதீத வில் வித்தையைக் கற்றுக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதற்காகவே உன்னைத் தேடி வந்திருக்கிறேன். அதை எனக்குக் கற்றுத் தருவாய் தானே?”

“சந்தோஷமாகக் கற்றுக் கொடுக்கிறேன். ஆனால், இந்த ஏழை தங்கியிருப்பது இச்சிறு குடிசையில்தான். இங்கே அரண்மனையில் கிடைக்கும் வசதிகள் எதுவும் இல்லை. நாங்கள் நிலத்தில் பாயில்தான் படுத்துறங்குகிறோம்; சட்டி பானையில்தான் சமைத்து உண்கிறோம்; கிணற்றடியில்தான் குளிக்கிறோம், எங்களின் துணிகளை நாமே துவைக்கிறோம். இங்கே வேலையாட்கள் என்று எவருமில்லை. இது உங்களுக்குப் பழக்கப்படாத உலகம்”.

“வரையா, நான் பதினெட்டு மாதங்கள் பாதாளச் சிறையில் அடைபட்டுக் கிடந்தவன்; கற்தரையில் படுத்து உறங்கியவன்; எந்த வனாந்தர வெளியிலும் என்னால் சந்தோஷமாகப் படுத்துறங்க முடியும். இது எல்லாம் நமது மனதைப் பொறுத்த விஷயம்.”

“சரி ஜோதி, குடிசைக்குப் பின்புறம் கிணறு இருக்கிறது. அங்கே போய் நீர் மொந்து முகம் கை கால் கழுவி விட்டு வாருங்கள். நான் குதிரைகளை குடிசையின் பின்னால் கட்டி வைத்து நீர் கொடுத்துவிட்டு வருகிறேன். நாளைக்கு ஊரில் எள்ளும், கொள்ளும் பெற்றுக் குதிரைகளுக்கு கொடுக்கலாம்” என்றான் வரையன்.

ஜோதிநாதனை குடிசைக்குள் அழைத்துச் சென்று தனது தந்தைக்கு அறிமுகப்படுத்தி வைத்தான் வரையன்.

தான் ‘ஒன்றுக்கும் உதவாத பயல்’ என்று திட்டிக் கொண்டிருந்த தன் மகனைத் தேடி அரச குடும்பத்தின் இளவல் ஒருவன் வந்திருக்கிறானே என்று நினைக்க அந்தத் தந்தைக்கு ஆச்சரியமாக இருந்தது; பெருமையாக இருந்தது.

அன்றிரவு ஜோதிநாதனுக்கு சட்டியில் கிடைத்த நீர் வடித்த பழஞ்சோறும், கீரைக்கறியும், கட்டித்தயிரும் அமிர்தமாக இருந்தது.

**யா**ழ்ப்பாணக் கோட்டையின் உரையாடல் மண்டபத்தில் அங்கே நிலைகொண்டிருந்த ஒல்லாந்த-டச் அரசின் உயர்மட்ட அதிகாரிகள் ஒன்றுகூடி கலந்தாய்வுக் கூட்டம் நடத்திக் கொண்டிருந்தார்கள் அதுவரை அரசுக்குக் கிடைத்த செய்திகளை விவரித்துக் கொண்டிருந்தார் கொம்மாந்தர் அந்தோனியோ மென்ஸிஸ்!

“நாங்கள் அறிந்தவரை பூநகரியிலிருந்த பழைய போர்த்துக்கீசக் கோட்டை பனங்காமப் படைகளால் தகர்த்துக் தரைமட்டமாக்கப்பட்டு விட்டது. அங்கே காவல் காத்த முப்பத்திரண்டு டச்சுப் படை வீரர்களில் ஒருவர் மட்டுமே உயிர் பிழைத்து மீண்டிருக்கிறார். மற்றவர்கள் அனைவரும் ஒல்லாந்த அரசரின் உடைமைகளைக்

காக்கும் பணியில் உயிரிழந்திருக்கிறார்கள்.

இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன?

நாங்கள் பூதத்தம்பி முதலியாரை ராஜத்துரோகக் குற்றம்சாட்டி சிரச்சேதம் செய்தோம், சரி. ஆனால், குற்றமேதும் இழைக்காத அவர் மகன் ஜோதிநாதனை ஏன் சிறை வைத்தோம்? அவன் விசாரணைக் கைதியானால் ஏன் ஒன்றரை ஆண்டுகளாக விசாரணை ஏதும் நடைபெறவில்லை? இக்காலத்தில் நான் இங்கே இல்லாதபடியால் இதற்கான விடையெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால், சிறை வைத்தவனை நாம் விசாரணை செய்திருக்க வேண்டும்; அது நாம் செய்த தவறு.

ஒவ்வொரு தடவையும் அவனது விசாரணையை முன்னெடுக்க விடாமல் தடுத்தவர் அமைச்சர் அந்திராசி என அறிகிறேன், அதன் பலன் - அந்த விசாரணைக் கைதியை மட்டுமல்ல - அவனை அடைத்து வைத்திருந்த கோட்டையையும் இழந்து நிற்கிறோம். அமைச்சர் அந்திராசி பூதத்தம்பி முதலியாரின் குடும்பத்தின் மேல் கொண்ட தனிப்பட்ட விரோதத்தின் காரணமாக எங்கள் அரசை சூழ்ச்சித் திறமையுடன் பயன்படுத்தியிருக்கிறார் என்றே நான் கருதுகிறேன். அந்தச் சூழ்ச்சிக்கு நமது டச் வீரர்கள் முப்பத்தொரு பேர் பலியாகியிருக்கிறார்கள் என்பதே உண்மை. அதற்காகப் பனங்காம அரசை நாம் மன்னிக்கப் போவதில்லை; தருணம் வரும் போது பழிவாங்கியே திருவோம்.”

“நாம் பனங்காம அரசின் மீது படையெடுக்க இயலாதா?” என்று கேட்டார் ஓர் அதிகாரி.

“பனங்காமம் கடற்கரைக் கிராமம் அல்லா; அது வன்னிக் காட்டினுள்ளே அமைந்திருக்கும் ஒரு சிற்றரசு. கடற்கரை நாடானால் நமது படைகளைக் கொண்டு தாக்குதல் மேற்கொள்ளலாம். நாட்டின் உட்புறம் அமைந்த அரசானபடியால் அங்கே படையெடுத்துச் செல்ல அதிக வீரர்கள் தேவை. அதற்கான படை பலம் இப்போது நம்மிடம் இல்லை. நம்மிடம் இருந்த ஒரு படைப்பிரிவும் இன்னும் கண்டியில் தங்கியிருக்கிறது. அவர்கள் திரும்பிய பின்னர்தான் இது பற்றி நாம் சிந்திக்க முடியும்”

“மேலும், பனங்காமத்தை நோக்கிப் படையெடுப்பதற்கு முன்னர் - முதலில் தலைநிலப் பரப்பின் கடற்கரை நகரான பூநகரியில் ஓர் அடித்தளம் அமைத்து அங்கே ஒரு படைப்பிரிவை நாம் நிலை கொள்ளச் செய்ய வேண்டும். அப்படி ஒரு தளத்திலிருந்துதான் படையெடுப்பை மேற்கொள்ள முடியும். அதற்கு அங்கே நாம் இழந்த கோட்டையைத் திரும்ப நிர்மாணிக்க வேண்டும். இனி இதுவே நமது முதற்படி முயற்சியாக இருக்கும்.

பூநகரிக் கோட்டையை அழித்ததோடு பனங்காமப் படையினர் திரும்பி பனங்காமம் போய்விட்டார்கள் என அறிகிறோம். இப்போது பூநகரியில் சுதேசப்படை வீரர்கள் எவரும் இல்லை. நாம் முதலில் பூநகரியின் கடற்கரைக் கிராமங்களைச் சிறிது சிறிதாகக் கைப்பற்றி அங்கே ஒரு தளம் அனைத்து, கோட்டையைக் கட்டும் பணியில் ஈடுபடுவோம். அதற்கான நடவடிக்கைகளை முதலில் மேற்கொள்ளுவோம்.”

“ஜோதிநாதனைக் கைப்பற்றும் நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லையா? என்று கேட்டார் அமைச்சர் அந்திராசி.

“வன்னி மிகப் பெரிய காட்டுப் பிரதேசம். இப்பிரதேசத்தில் எங்கே, யார் போய், அவனைத் தேடுவது? மேலும், அவன் டச் அரசுக்கு எதிராகக் குற்றம் இழைத்ததாக இதுவரை எவரும் எந்த விதமான ஆதாரத்தையும் சமர்ப்பிக்கவில்லை. அப்படியிருக்க அவனைத் தேடிப்பிடிப்பது தற்போது நமக்கு முக்கியமான முந்நோக்கு அல்ல” என்றார் அந்தோனியோ மென்ஸிஸ்.

**வீ**டு திரும்பிய அந்திராசி அதிகப்படியான அங்கலாய்ப்போடு காணப்பட்டார். கடந்த மூன்று மாதங்களாக இரவில் அமைதியான நித்திரையில்லாமல் தவித்தார். அழகவல்லியை அடைவதற்காக பூதத்தம்பியைச் சூழ்ச்சி செய்து கொலை செய்தது எத்தனை இழிவான செயல் என்ற உண்மை உள்ளத்தை உறுத்தியது. அவரைக் கொலை செய்தும் அழகவல்லி தனக்குக் கிடைக்காமல் போய்விட்டாளே என்ற



**பூநகரியின் கடற்கரைக் கிராமங்களைச் சிறிது சிறிதாகக் கைப்பற்றி அங்கே ஒரு தளம் அமைத்து, கோட்டையைக் கட்டும் பணியில் ஈடுபடுவோம். அதற்கான நடவடிக்கைகளை முதலில் மேற்கொள்ளுவோம்.”**

ஏமாற்றமும் அவரை வருத்தியது.

இரவில் எலிகள் ஓடும் சிறிய சத்தம் கேட்டால் கூட வெலவெலத்து படுக்கையை விட்டு எழுந்து போய் ‘ஜோதிநாதன் தன்னைக் கொலை செய்ய வந்துவிட்டானோ’ என்ற பயத்துடன் வீடெல்லாம் தேடிப் பார்ப்பார். அவரது மனை யாழ்ப்பாணக் கோட்டைக்குள்ளே அமைந்திருந்த போதிலும், அங்கிருக்கும் கட்டுக்காவல்களை மீறி அவனால் உள்ளே வர இயலாது என அறிந்திருந்தும் அவரது மனம் அமைதியின்றித் தவித்தது.

அந்த அமைதியின்மையைப் போக்க ஒவ்வொரு இரவிலும் மது அருந்த ஆரம்பித்தார். குடிபோதை இல்லாமல் இரவில் உறங்க இயலாத நிலை. இன்றைக்கோ கொமாந்தர் மென்ஸிஸ் ‘ஜோதிநாதனைக் கண்டுபிடிப்பது யாழ் டச் அரசின் முந்நோக்கு அல்ல’ என்றல்லவா சொல்லிவிட்டார். இப்போது ஜோதிநாதன் சிறையிலிருந்து வெளியே வந்து விட்ட படியால் எந்த நேரமும் அவனால் தனது உயிருக்கு ஆபத்து வந்துவிடும் என அஞ்சிக் கொண்டிருந்தார் அந்திராசி.

அன்றிரவு அமரதாஸா அவனைப் பார்க்க வந்த போது அழாக் குறையாகப் பேசினான் அந்திராசி.

“இந்தக் கையாலாகாத டச்சுக்காரரை நம்பி நான் மோசம் போய்விட்டேன் அமரா. பாதாளச் சிறையில் அடைக்கப்பட்டு இருபத்து நான்கு மணி நேரமும் காவல் காக்கப்பட்டுக் கொண்டிருந்தவன், ஒரு கோட்டையிலிருந்து எப்படி அவனால் தப்பிச் செல்ல முடிந்தது என்பதை எண்ணிப்பார்க்க இயலாமல் இருக்கிறது.

தங்களிடம் பீரங்கி இருக்கிறது; துப்பாக்கியிருக்கிறது எனப் பீற்றிக் கொண்டிருந்த இவர்களால் அம்பு வில்லையும், வாளையும், வேலையும் எதிர்த்து நிற்க முடியவில்லையே!”

“அவர்களால் என்ன செய்ய முடியும் அந்திரா. பெரியதொரு போர்ப்படையை முப்பது நாற்பது வீரர்களைக் கொண்டு எதிர்க்க முடியவில்லை. கோட்டையைக் காத்து நின்ற அத்தனை பேரும் ஒருவனைத் தவிர அங்கே உயிரிழந்திருக்கிறார்கள்”

அமரதாஸாவைப் பார்த்து இரந்தான் அந்திராசி.

“எனது ஆருயிர் நண்பா! ஈரேழு பிறவிகளிலும் உனக்குச் சேவகம் செய்கிறேன்; என்னிடமிருக்கும் செல்வம் அனைத்தையும் உனக்குத் தாரை வார்த்துத் தருகிறேன்; அந்த ஜோதிநாதன் உயிரோடு இருக்கும் வரை எனக்கு இனிமேல் நிம்மதி கிடையாது; எங்கிருந்தாலும் அந்த ஜோதிநாதனைக் கண்டுபிடித்துக் கொன்றுவிடு!”

**இ**ரண்டு வார காலமாக கச்சாய் கிராமத்திற்குத் தெற்கேயிருந்த காட்டுப் பகுதியில் வரையனின் தொழில்முறை ஊக்குவிப்போடு விற்பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஜோதிநாதன் கொஞ்சம் கொஞ்சமாக இழந்துவிட்டிருந்த தனது விற்திறமையை மீளப் பெற்றுக் கொண்டிருந்தான்.

அடர்ந்த காட்டின் நடுவே அமைக்கப்பட்டிருந்த ஒரு மரக் கொட்டிலில் பல வகையான விற்களையும், அம்புகளையும் சேகரித்து சேமித்து வைத்திருந்தான் வரையன். பச்சைத் தேக்குக் கம்பினாலான ஒன்றரை ஆள் உயர விற்களையும், வால் நீண்ட கரிக்குருவியின் இறகுகள் பொருத்திய அம்புகளையும் கொண்டு நானூறு கவடு தொலைவிலுள்ள ஓர் இலக்கை அடிப்பது வரையனுக்குக் கைவந்த கலை. காற்றின் வேகத்தைக் கணக்கில் கொண்டு எந்தக் கோணத்தில் வில்லில் பொருத்திய அம்பை உயர்த்தி, எத்தனை வலுவில் நாணை இழுக்க வேண்டும் என்ற உத்தியை ஜோதிநாதனுக்குக் கற்றுக் கொடுத்தான் வரையன். அம்புகளின் இறகுகள் பொருத்திய வால் பகுதியை மிகக் கவனமாகப் பேணிப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வற்புறுத்தினான். ஜோதிநாதனும் காலையிலிருந்து மாலை வரை விற்பயிற்சியில் முழுமையான கவனத்தோடு ஈடுபட்டுக் கொண்டிருந்தான்.

இப்படியாக இரு வாரங்கள் கழிந்தபின் ஒரு நாள் காலை அன்றைய பயிற்சிக்காக இருவரும் காட்டு வழியே சென்று கொண்டிருந்தார்கள்.

காட்டு மரங்களில் புதிய பச்சிலைகள் தளிர்விட்டுருந்தன. கிழக்கே சிறிது சிறிதாக மேலெழுந்து கொண்டிருந்த கதிரவனின் ஒளிக்கற்றைகள் இலைகளினூடாக பொன்னிறக் கம்பிகளாக - பொன்னிறக் கோல்களாக வந்து கொண்டிருந்தன. கீழே தரையில் பசுமையாகப் படர்ந்திருந்த பச்சை நிறப் புற்கள் களைத்துப் போன கண்களுக்கு இதமாக ஆறுதல் தருவதாக இருந்தது. காட்டினூடே சென்ற ஒற்றையடிப் பாதையின் குறுக்கே சின்னஞ்சிறு சிட்டுப்பறவைகள் சிறகடித்துப் பறந்தன. நெடிதுயர்ந்த தேக்கு மரங்களின் உச்சியிலிருந்து குயில்கள் தெம்மாங்கு பாடிக் கொண்டிருந்தன. அமைதியாக வீசிய காற்றில் காட்டினூடே ஓடிக்கொண்டிருந்த ஒரு நீரோடையின் சலசலப்பும், புதிய தளிர்களின் சுகந்த மணமும், பூத்த மலர்களின் நறுநெடியும் காற்றிலே மிதந்து வந்தன.

**இ**யற்கையின் இந்த ஜாலங்களையெல்லாம் ரசித்த வண்ணம் காட்டுப் பாதையில் வரையனோடு சென்ற ஜோதிநாதனுக்கு பறவைகள் இசைக்கும் கீத கானங்களுக்கு மேலாக ஒரு அவலமான கூக்குரல் கேட்டது. ஒரு கணம் நின்று காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு கவனித்தான். நிச்சயமாக அது கிராமத்திலிருந்து வரும் கூக்குரல்தான். இருவரும் உடனே கிராமத்தை நோக்கி ஓடினார்கள். மலைச் சரிவில் இறங்கி, காட்டின் எல்லையிலிருந்து பார்த்த போது -

குடிசைகள் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தன. நீல நிற சீருடை அணிந்த டச்சுப்படை வீரர்கள் கையில் பிடித்த தீப்பந்தங்களைக் கொண்டு ஒவ்வொரு குடிசையாகத் தீ வைத்துக் கொண்டிருந்தார்கள். மக்களின் அவலக்குரல் ஊர்வெளியை நிறைத்துக் கொண்டிருந்தது. ●

(தொடரும்)

திரைப்புதினம்

# ‘பொப்பிசைச் சக்கரவர்த்தி’ ஏ.ஈ. மனோகரன்

இலங்கையில் சிங்களவர்கள் தமது பாரம்பரிய இசை என்று ஆடிப்பாடி குதூகலிக்கும் ‘பைலா’ (BIALA) இசை வடிவத்தையும், பொப் இசை வடிவத்தையும் இணைத்து வித்தியாசமான பியூஷன் இசையை உலகுக்குத் தந்த பொப்பிசைச் சக்கரவர்த்தி ஏ.ஈ. மனேகரன் காலமாகிவிட்டார். ஈழத்தில் பிறந்து, இலங்கையையும், தமிழகத்தையும் ஒரே நேரத்தில் வசியப்படுத்தி வைத்திருந்த மாயக்குரல் இவருடையது.



ஏ.ஈ. மனோகரன் பைலாவில் தமிழைப் புகுத்த மட்டும் செய்யவில்லை. பாப் இசையையும் பிசைந்து பல மெட்டுகளை உருவாக்கினார். அதில் ஒன்றுதான் கொலவெறி ஹிட். ஆம்... இவர் உருவாக்கிய ஃபியூஷன் பாடல் ‘சுராங்கனி சுராங்கனி.. சுராங்கனி’ பாடலை பாடாதவர்களே இருக்க முடியாது. தமிழ்நாட்டில்... சென்னையின் கானாவில்கூட சுராங்கனியின் தாக்கம் இன்றும் இருக்கிறது. சுராங்கனியின் எளிமையான மெட்டுதான் இன்றுவரை உலகம் முழுவதும் பாப்புலர். அந்தப் பாடலை மட்டும் மனோகர் இந்தி உட்பட 8 மொழிகளில் பாடி இருக்கிறார். அத்தனை மொழிகளிலும் அது ஹிட் தமிழ், இந்தித் திரைப்படங்களிலும் அவர் இப்பாடலை பாடி நாடித்துள்ளார். கமல்ஹாசனுடன் ‘மனிதரில் இத்தனை நிறங்களா’ படத்தில் பாடி நடித்திருக்கிறார். சிலோன் மனோகர் இலங்கையில் பிறந்தவர்தான் என்றாலும் தமிழரான அவர் தமிழ்நாட்டில் பிரபலமாக திகழ்ந்தார்.

1970ல் இவர் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த ‘நல்நண்பர்கள்’ என்ற இசைக்குழு அந்நாள்களில் இலங்கையை மொழிபேதம் கடந்து ஒன்றிணைத்து வைத்திருந்தது. அதற்கு முன்பே ‘பாசநிலா’ என்று இலங்கையில் தயாரான தமிழ்ப்படத்தில் ஹீரோயினாக அறிமுகமாகியிருந்தார். அவர் நடித்த ‘வாடைக் காற்று’ என்ற தமிழ்ப்படம் இலங்கை அரசின் ஜனாதிபதி விருதினைப் பெற்றது. ஹிப்பி ஹேர் ஸ்டைலும், பிரெஞ்சு தாடியும், கணீர் குரலும் அப்போது இவரால் ஏக பாப்புலர். பல கல்லூரி மாணவ மாணவிகள் இவர் ஸ்டைலுக்கும் குரலுக்கும் மயங்கிக் கிடந்தார்கள்.

இலங்கையில் அவர் பாடிய ‘சுராங்கனி பாடலுக்கு இந்தியாவில் இருக்கும் மவுசைக் கண்டு சென்னைக்குக் குடியேறினார். இளையராஜாவே கூட இவர் அனுமதி பெற்ற ‘அவர் எனக்கே சொந்தம்’ என்று ஜெய்சங்கர் ஹீரோவாக நடித்த படத்தில் மலேசியா வாசுதேவன், ரேணுகாவை வைத்து ‘சுராங்கனி’ மெட்டில் ஒரு பாடலை கம்போஸ் செய்து சேர்த்திருந்தார். பாலிவுட்டிலும் ஆஷா போன்ஸ்லே ‘சுராங்கனி கமால் கரேகி’ என்ற பாடலை இதே மெட்டில் ‘பரமாத்மா’ என்ற படத்தில் பாட, மனோகரின் ஒற்றை மெட்டு உலக மெட்டாக.... மொட்டாக மலர்ந்தது. சுராங்கனி இசைத் தட்டுகள் இங்கும் ஹிட்டடிக்க மீடியாக்களில் அவர் முகம் வெளியானது. வித்தியாசமான சிகையலங்காரம், கம்பீரமான தோற்றத்தைப் பார்த்து பல தமிழ்ப்படங்களில் நடிக்க வாய்ப்பு வந்தது. ஆனால், முதல் படமாக ‘டூபான் மெயில்’ என்ற தெலுங்குப் படம்தான் ரிலீஸானது. அப்படத்தில் ஒரு சர்வதேச கடத்தல்காரனாக நடித்திருந்தார்.

மலையாளத்தில் சந்திரகுமார் இயக்கத்தில் ‘தடவரா’ என்ற படத்தில் இரட்டை வேடத்தில் வில்லனாக நடித்தார். ‘மாமாங்கம்’, ‘சக்தி’, ‘கழுகன்’ எனப் பல படங்களில் நடித்து பாப்புலரானார். அப்போது கேரளாவின் சூப்பர் ஸ்டாராக இருந்த நடிகர் ஜெயனுடன் ‘ஆவேசம்’ ‘கோளிளக்கம்’ படங்களிலும் வில்லனாக நடித்தார். பி.பி.சி தமிழோசையில் சென்னைக்கு வந்து மீண்டும் மலையாளம், தமிழ் சினிமாக்களில் நடிக்க ஆரம்பித்தார்.

தமிழில் மட்டும் குரு, காஷ்மீர் காதலி, ராஜா நீ வாழ்க, காட்டுக்குள்ளே திருவிழா, உலகம் சுற்றும் வாலிபன், நீதிபதி லாரி டிரைவர் ராஜாகண்ணு, தீ, ஜே.ஜே உள்ளிட்ட பல படங்களில் நடித்திருந்தார். சில தமிழ் சீரியல்களிலும் நடித்துக்கொண்டிருந்தார். அண்மைக்காலமாக சிறுநீரகக் கோளாறால் அவதிப்பட்டுவந்து, தீவிர சிகிச்சை எடுத்து வந்தார். சென்னையிலிருக்கும் அவர் வீட்டில் தன் 73வது வயதில் 23.1.2018 அன்று உயிரிழந்தார். ●

# இது நயன்தாரா ரகசியம்!

நதிபோல ஓடிக்கொண்டிருக்கிறார் நயன்தாரா. சினிமாவிலும் நிஜ வாழ்க்கையிலும் ஏற்பட்ட தேக்கங்களை தகர்த்தெறிந்து என் வழி தனி வழியென தடதடக்கிறார். பரவசத்தின் இன்னொரு பெயராக ஃபீனிக்யின் பெண் வடிவாக ஒட்டுமொத்த ரசிகர்களையும் ஈர்த்திருக்கும் நயன்தாரா வட்டியும் முதலுமாக கொட்டிக் கிடக்கும் அழகில் சொக்கவைக்கிறார்.

நயன்தாராவின் திரைவாசத்தில் 14 ஆண்டுகள் முடிவடைந்து இந்தப் புத்தாண்டு முதல் 15 ஆம் ஆண்டில் அடியெடுத்துவைக்கிறார். தமிழ் சினிமாவில் எந்த நடிகைக்கும் கிடைக்காத லேடி சூப்பர் ஸ்டார் பட்டம் நயன்தாராவின் புகழுக்கு மேலும் அழகு சேர்த்துள்ள ‘மனசினக்கரே’ மலையாள படம் மூலமாகதான் நயன்தாராவின் சினிமா என்ட்ரி நடக்கிறது. ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு தனியாக வந்து செல்லக்கூடிய தைரியம் நயன்தாராவுக்கு அப்போதே இருந்திருக்கிறது. தான் நடிக்க வேண்டிய காட்சியில் நடித்துவிட்டு அமைதியாக அமாந்துகொள்ளும் நயன்தாரா காஸ்ட்யூம் விஷயத்தில் மட்டும் கெடுபிடி. லேசான கிளாமர் தெரியும்படியாக இருந்தாலும் அந்த காஸ்ட்யூமை மாற்றச்சொல்லி கேட்பாராம். இது ஒன்று மட்டும்தான் நயன்தாராவின் கண்டிஷனாக இருக்கும். மற்ற எந்த விஷயங்களிலும் தலையிடாத தங்கம்.

மலையாளத்தில் மூன்று படங்களில் நடித்திருந்த நிலையில் தமிழ் படவாய்ப்பு வருகிறது ‘ஐயா’ படத்தின் போட்டோ ஷூட்டுக்காகச் சென்னை கோயம்பேட்டில் பஸ்ஸில் வந்து இறங்கியபோது எத்தனை கண்கள் மொய்த்திருக்கும் என்று தெரியவில்லை. பிரபலம் இல்லாத ஒரு முகமாக சென்னையில் முதல் அடியை எடுத்து வைக்கிறார் நயன்தாரா.

சான்ஸ் கிடைத்தால் நடிப்பது இல்லையென்றால் ஊருக்கு திரும்புவது. இதுதான் நயன்தாராவின் பிளான். ‘ஐயா’ ஹீரோயினாக ‘ஒரு வார்த்தை கேட்க ஒருவருஷம் காத்திருந்தேன்... “என்று சேலை முந்தானையை கொடியாக பறக்கவிட்டு பாடிவரும் நயன்தாராவின் நடிப்பிலும் அழகிலும் தடுக்கி விழுகிறது ரசிகர் கூட்டம். இது நடப்பது 2005 - ல். ஐயா வெளியான அதே வருடத்தில் 5 படங்களில் நடித்து முடிக்கும் நயன்தாரா தமிழ் சினிமாவில் முக்கியமான இடத்திற்கு வருகிறார். தமிழ். மலையாளம், தெலுங்கு என மூன்று மொழிகளிலும் மாறி மாறி நடிக்கிறார்.

இருபது படங்களில் நடித்து முடித்திருந்த நிலையில் சிம்புவுடன் காதலானதும் இருவரும் நெருங்கியிருப்பது போன்ற புகைப்படம் வைரலானதும் அறிந்த விஷயமே. சிம்புவுடனான முதல் காதல் முறிந்து. அடுத்து பிரபுதேவாவுடன் காதல் மலர்ந்து அதுவும் சருகானபோது மனம் ஒடிந்து போனார் நயன்தாரா. காதல் தோல்வி கொடுத்த வலியால் அவரால் சினிமாவில் சரியாக கவனம் செலுத்த முடியவில்லை.

‘‘இதையே நினைத்துக் கொண்டு எத்தனை நாள் இருப்பாய் புதுமனுஷியாய் திரும்பவா” என்று நெருங்கிய நட்புகள் கொடுத்த ஊக்கம் நயன்தாராவை உற்சாகப்படுத்த ‘மீண்டும் வந்தார். இவருடைய அப்பா மிலிட்டரி ஆபீஸர் என்பதால் நயன்தாராவுக்குள் இருந்த தைரியலட்சுமியும் விழித்துக்கொள்ள தனி மனுஷியாக அடுத்தடுத்த அடிகளை துணிச்சலாக எடுத்துவைத்தார். அதன்பிறகு நயன்தாரா தொட்டதெல்லாம் ஹிட்டுகளானது.



அவர் குறிவைப்பதெல்லாம் அடர்த்தியான கதை, அழுத்தம் நிறைந்த கதாபாத்திரம் மட்டுமே. ‘டோரா’, ‘அறம்’ போன்ற வித்தியாசமான படங்களே இதற்கு சாட்சி.

இரக்க குணம் உள்ள அதிகாரியாக, இக்கட்டான சூழ்நிலையை எதிர்கொள்பவர்களுக்கு மனிதநேய அடிப்படையில் தீர்வுகாணும் பெண்ணாக ‘அறம்’ படத்தில் பார்க்கும் நயன்தாராவுக்கும் அவரது நிஜ கேரக்டருக்கும் பெரிய வித்தியாசமெல்லாம் இல்லை. வெளியில் விளம்பரம் செய்துகொள்ளாமலேயே நயன்தாரா செய்து வரும் உதவிகள் பலருக்கு வரம்.

ஒரு நடிகை காதலில் விழுந்தாலோ, கல்யாணம் செய்து கொண்டாலோ சினிமாவில் அவருக்கு என்ட்கார்டுதான் என்று இருந்த நிலையை அடித்து நொறுக்கி அடுத்த அத்தியாயமும் உண்டு என்பதை மெய்ப்பித்த பெண் சிங்கம் நயன்தாரா என்றால் அது மிகையாகாது. காதல் பிரச்சனையால் சினிமாவில் ஏற்பட்ட சறுக்கலை சமாளித்து சாதித்துக் காட்டியவர். இன்று சில நடிகைகளுக்கு ரோல் மாடலாக இருக்கிறார். தற்போது தமிழில் ‘கொலையுதிர்காலம்’ ‘கோலமாவு கோகிலா’ ‘இமைக்கா நொடிகள்’ தெலுங்கில் ‘ஆரடுகுல புல்லட்’ ‘சேரா நரமிரெட்டி’ உள்ளிட்ட படங்களில் நடித்துவரும் நயன்தாராவின் கால்ஷீட் அடுத்த ஒரு வருடத்திற்கு ஃபுல் இந்தப் படங்களை விரைவாக முடித்துக் கொடுக்க திட்டமிட்டு இரவு பகலாக நடித்துவருகிறார்.



ஏன் இந்த அவரசரம் என்ற கேள்விக்கு நயன்தாரா விக்னேஷ் சிவனின் காதலே பதிலாகி நிற்கிறது. யெஸ். சில மாதங்களாகவே இருவருக்குமிடையே காதல், விரைவில் கல்யாணம் என்று பரவி வரும் செய்திகளை ஆமோதிப்பது போலவே இருவரும் நெருக்கமாக இருக்கும் படங்களை சோஷியல் மீடியாவில் வெளியிட்டு வருகின்றனர்.

33 வயதாகிறது நயன்தாராவுக்கு காலத்தே பயிர் செய்து குடும்பம், குழந்தை என்ற சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டும். என்று நினைத்தே 2018க்குள் திருமணம் செய்து கொண்டு இல்லறத்தில் நுழைய திட்டமிட்டிருக்கிறாராம் திருமணத்திற்கு பிறகு தமிழ் சினிமாவில் நயன்தாராவின் ஆட்சி தொடரும். ●



ஏ.ஜே.ஞானேந்திரன்

# நாட்டு வைத்தியம் தெரிந்த காட்டுக் குரங்குகள்



காட்டு விலங்குகளின் வாழ்க்கையை நுணுக்கமாக நோக்கும்போது, பல வியப்பூட்டும் விந்தைகளை நாம் கவனிக்கக் கூடியதாக இருக்கின்றது. அதிலும் மனிதரின் மூதாதையர் என்று சொல்லப்படும் குரங்குகள் செய்யும் சேஷ்டைகள் பல சுவாரஸ்ஸியமானவை. மேலும் மேலும் அறிய வைக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தக் கூடியவை.

இந்தோனேசியக் காடுகளின் மிகப் பிரபல்யமான மனிதக் குரங்கான ஒராங் உட்டானுக்கு நாட்டு வைத்தியமும் தெரியும் என்று கண்டறிந்துள்ளார்கள். எலும்பு மூட்டுகளில் ஏற்படும் நோவுகளுக்கு, நாட்டு வைத்தியர் "நோவெண்ணெய்" கொடுப்பது வழக்கமல்லவா? சில தாவரங்களை வாய்க்குள் வைத்து மென்று குதப்பி, நுரையாக்கி அதனை உடல் வலியுள்ள இடங்களில் பூசுவதை, ஆய்வாளர்கள் படமாக்கி உள்ளார்கள்.

இந்தோனேசியாவின் போர்னியோக் காடுகளில் இந்த நிகழ்வு படமாக்கப்பட்டுள்ளது. அதிலும் 20,000 மணி நேரப் படப்பிடிப்பில் ஓர் அரிய நிகழ்வாக இது சிக்கியிருக்கின்றது. தாவரங்களை நுரையாக்கி விட்டு, உடல் வலிக்கு நிவாரணியாக, கால்கள், புஜங்களில் 15 தொடக்கம் 45 நிமிடங்கள் இந்த நுரையைத் தேய்த்துள்ளன இந்த மனிதக் குரங்குகள்! வாய்க்குள் வைத்து குதப்பிய எந்த இலைகளையும் விழுங்காது, நுரையாக்கி முடிவில், அவற்றை இவை துப்பிவிடுவதும் அறியப்பட்டுள்ளது.

இந்தத் தாவர இலைகள் , விஞ்ஞான ஆய்வுக்கூடப் பரிசோதனைகளுக்குப் பின்னர் உடல் வலிக்கு நிவாரணமளிக்கும் இலைகளென உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இலைகளைக் குதப்பி நுரையாக்கி, உடம்பில் பூசும் நிகழ்வொன்று முதற்தடவையாக இப்பொழுது படமாக்கப்பட்டுள்ளது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

கொரில்லா, சிம்பன்சி இனக் குரங்குகள், இலைகளை மென்று, அவற்றின் கசப்பான சாற்றை அருந்தி தமது நோய்க்கு நிவாரணம் தேடிக் கொள்வது முன்பே அவதானிக்கப்பட்டுள்ளது. ஆனால், மனிதர்களைப் போல் நாட்டு வைத்தியர்களாக மாறும் திறன் ஒராங் உட்டான் இனக் குரங்குகளிடம் மாத்திரமே இருக்கின்றன. இந்த "மிருக வைத்தியர்" பற்றி சில வரிகள். இந்தோனேசியாவின் போர்னியோ, சுமத்திரா தீவுகளில் மாத்திரமே இந்தக் காட்டு விலங்குகள் காணப்படுகின்றன. மலேசியக் காடுகளிலேயே ஆரம்பத்தில் ஏராளமாகக் காணப்பட்டுள்ள இந்த ஒராங் உட்டான் என்பது ஒரு மலேசிய மொழிச் சொல்லாகும். "காட்டு மனிதன்" என்பது இதன் பொருள்!

# தீர்த்துக்கட்ட முடியாத தீரரோ இவர்?

காலத்துக்குக் காலம் பத்திரிகைத் தலைப்புச் செய்திகளை அலங்கரிப்பவர்கள் பலர் வந்து வந்து போகின்றார்கள். சிலர் தொடர்ச்சியாக வருகிறார்கள். 2017இல் அமெரிக்க அதிபர் டிரம்பும், வட கொரிய அதிபர் கிம் ஜொங்கும் தமது "கோமாளிக் கூத்துக்களால்" அடிக்கடி பத்திரிகைகளில் வந்துபோனார்கள். 2018இன் ஆரம்பத்திலும் "சமாதானப் பேச்சுவார்த்தை" என்று பல்டி அடித்துள்ளார்கள்.

சமீபத்தில் பதவி ஓய்வுபெற்றுவிட்ட ஒரு தென் கொரிய இராணுவ அதிகாரி , கிம் ஜொங்கை ஆட்சியிலிருந்து தூக்கியெறிய முடியாத அளவு, அங்குள்ள மக்கள் "மூளைச்சலவை" செய்யப்பட்டுள்ளார்களென இவர் கூறியிருக்கிறார். ஈராக்கின் சடாம் ஹூசேயினைத் தூக்கி எறியவது போன்ற விடயமல்ல இது." அல்லாவை இல்லா தொழிப்பது" போன்ற காரியமிது என்று ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.




அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டால், உடனடியாக 1000 தற்கொலை விமானப் படைகள் வட்டமிட்டு நின்று "கமிக்காஸேப்" பாணியில் தற்கொலைத் தாக்குதல்களை ஆரம்பித்து விடுவார்கள் என்கிறார் இவர். நாடு முழுவதுமே இராணுவத் தளம்போல்தான் இருக்கின்றது. எவரையும் விட்டு வைக்காமல், பிள்ளைகளுக்குக் கூட இராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. குண்டுத் தாக்குதல்கள் மூலம் வட கொரியாவை "கற்கால யுகத்திற்குக்" கொண்டுவருவது என்பது அசாத்தியம் என்கிறார் முன்னாள் லெப்டினென்ட் ஜெனரல் சுன்!

ஒரு 14 வயதுப் பிள்ளைக்கு 100 மணி நேரத்திற்கு மேற்பட்ட இராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இந்தப் பிள்ளைக்கு ஒரு ஏகே47 ரகத் துப்பாக்கியைக் கையாள நன்றாகவே தெரியும். ஒரு கைக்குண்டை வெடிக்க வைக்கவும் தெரியும். எந்தக் குடும்பமாவது பிழையாக நடந்து கொண்டால் , கூட்டாகத் தண்டனை வழங்கப்படுகின்றது. ஒன்றில் சிறை அல்லது மரண தண்டனை! தென் கொரிய தலைநகரைக் குறிபார்த்தபடி, 1000 ஆர்ட்டிலரிகள் தயாராக இருக்கின்றனவாம். 5000 தொன் எடை கொண்ட இரசாயன வெடிமருந்துகள் தலைநகரை நாசமாக்கக் காத்திருக்கின்றன. இதைவிட சைபர் தாக்குதல்களுக்கு, 12 வயது தொட்டே பிள்ளைகள் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறார்களாம்.

எல்லாத் தாக்குதல் ஏற்பாடுகளுமே, நிலமட்டத்திற்கு அடியில் நிர்மாணிக்கப்பட்டிருப்பதால், இவற்றை அழிப்பது என்பது எதிரிகளுக்கு சுலபமான ஒன்றல்ல என்று எச்சரிக்கின்றார், 40 வருட அனுபவசாலியான இந்த இராணுவ அதிகாரி! ஒரு மோசமான எதிரியுடன்தான் அமெரிக்கா மோதுகின்றது........

# இருபதில் இருக்கின்றது இளமைச் சுகம்

பொதுவாகவே தேசிய வீரர்கள் தினம், மதப் பெருநாட்கள், சுதந்திர தினம், என்பதை நினைவுகூர, உலக நாடுகள் பொதுவிடுமுறை தினங்களைப் பிரகடனப்படுத்துகின்றன. இந்த நாட்கள் தொகை , மதரீதியாக எண்ணுக்கணக்கில், தொகையில் வேறுபடுகின்றன.

ஜனவரி பிறந்ததும் பொங்கல் பட்டென நமக்கு நினைவுக்கு வந்து விடும். ஆனால், ஜப்பானிலோ இந்த ஜனவரி மாதம் "வயதுக்கு வருபவர்களுக்கு" ஒரு பொது விடுமுறை தினத்தையும் இழுத்து வருகின்றது

ஜனவரி மாதத்தின் இரண்டாவது திங்களே இந்த விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தப்படுகின்றது. இளவட்டங்கள் இருபது வயதை எட்டுவது, நாடளாவிய ரீதியாக கோலாகலமாக் கொண்டாடப்படுகின்றது. 1948இலிருந்தே இந்த நாள் பொதுவிடுமுறை தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. ஆனால், சரித்திர சான்றிதழ்களின்படி, இது நீண்டகாலமாகவே இருந்து



வருகின்றது. அந்தக் காலத்தில், அதிக எடைகொண்ட அரிசி மூட்டைகளை தோளில் சுமந்து, தமது பலத்தை ஆண்கள் வெளிக்காட்ட வேண்டியிருந்தது. பெண்களோ தமது தையல் வித்தைகள் மூலம் தம்மை வெளிப்படுத்தி இருந்தார்கள். ."ஜென்பக்கு" என்று ஜப்பானிய மொழியில் அழைக்கப்படும் சடங்கு சம்பந்தப்பட்ட இந்த வயதுக்கு வரும் விடயத்தில், அவரவர் உடல் திறமையை வெளிக்காட்ட வேண்டியிருந்துள்ளது.

முன்பெல்லாம் வயதுக்கு வரும்போதுதான் இந்தச் சடங்குகள் இடம்பெற்று வந்திருக்கின்றன. ஆனால், இப்பொழுதோ அரசு, 20 என்ற ஒரு கணக்கை நிர்ணயித்துள்ளது. ஒரு கடன் அட்டைக்கு விண்ணப்பிப்பதற்கோ அல்லது ஒரு அலைபேசி வாங்குவதற்கான ஒப்பந்தமொன்றை ஏற்படுத்துவதற்கோ 20வயது வந்தால்தான், இளவட்டங்களுக்கு இது சாத்தியப்படும். அத்துடன் மதுபானம் அருந்தவும், சிசரெட் புகைக்கவும் சட்டரீதியான அனுமதியை இந்த "இருபதே" வழங்குகின்றது.

இந்த நாளில் இருபது வயதை எட்டிய இளவட்டங்கள் இங்குள்ள நகரசபை அதிகாரிகள் முன்னால் ஒன்றுகூடும் வழமை இந்த நாளில் இருக்கின்றது. இந்த இளசுகளின் பொறுப்புகள் பற்றி, இங்கு உரையாற்றப்படுகின்றது. இதன் பின்னர் இவர்கள் குடும்ப அங்கத்தினரோடு வழிபாட்டு ஸ்தலங்களுக்குச் சென்று தமது வாழ்வின் வெற்றிக்காகவும், ஆரோக்கியத்துக்காகவும் வழிபடுகிறார்கள். ஆனால், இதைத் தொடர்ந்து இவர்கள் கலந்து கொள்ளும் கொண்டாட்டம், "கலாச்சாரச் சீரழிவுக்கு" வழிவகுக்குமோ என்ற பயத்தை பெரியவர்களிடம் ஏற்படுத்தியிருக்கின்றது. இளஞ் சந்ததியினர் மது போதையின் மயக்கத்தில் இருப்பதும், தலைமுடிக்கு நிறமூட்டி, தேவையற்ற மோதல்களில் ஈடுபடுவதும் மூத்தோரை கடும் அதிருப்திக்கு உள்ளாக்கி வருகின்றது.

அதே சமயம் வெகுவேகமாக மூப்படைந்து வரும், ஜப்பான் , 1970இல் இருந்த தொகையை விட பாதித் தொகை அளவினரையே இந்தத் தடவை இளவட்டங்களாகக் கண்டுள்ளது. .இந்த வருடத் தொகை 1.23 மில்லியன் மாத்திரந்தான். இளவட்டங்களுக்கு பஞ்சநிலை இங்கே! சிக்கலான நிலைதான் இங்கே!

## 2018 புதிய சிந்தனைகள்

# நடப்பது நல்லது



**2018** அனைவருக்கும் அன்பான புத்தாண்டு வாழ்த்துக்கள். இந்த வருடம் மேலும் ஆரோக்கியமானதாக அமைய பிரார்த்தனை செய்கின்றேன்.

2018 ஜனவரி மாதம் முழுவதும் புத்தாண்டு வாழ்த்துக்கள் உலகிற்கும் பரிமாறப்பட்டன. வாழ்த்தும் ஜனவரி மாதம் முடிந்து வருடத்தின் இரண்டாவது மாதமான பெப்ரவரில் புத்தாண்டு வாழ்த்து வருகின்றதே என்று புருவத்தை உயர்த்துவோர் கவனத்துக்கு 'புதினம்' பத்திரிகை பெயரில் மட்டுமல்ல, நடைமுறையிலும் புதுமை புகுத்துவதாலேயே இளமையாக இருக்கின்றது. என்ன புதுமை அது? உழைத்து ஓய்வு எடுப்பதை விட, ஓய்வாக சிந்தித்து, திட்டமிட்டு துடிப்புடன் ஓய்வு இன்றி செயலாற்றுவதே புதுமை. வெற்றியின் ரகசியம், இளமையின் ரகசியம் இதுவே.

ஜனவரி மாதம் முழுவதும் ஆர்ப்பாட்ட ஒலிக்கு இடையே அமைதியாக ஓய்வு எடுத்து, தெளிவாகத் திட்டமிட்டு, இதோ இந்த வருடத்தின் முதலாவது இதழ் உங்கள் கையில் தவழ்கின்றது.

இதுவே பெப்ரவரி 2018இல் உங்களோடு பகிர்ந்து கொள்ளும் புத்தாண்டு வாழ்த்தின் பின்புலமாகும்.

நடப்பது நல்லது. நடப்பதை அவதானிப்பது அதைவிடச் சிறப்பானது. கவனித்த விஷயங்களைப் புரிந்து கொள்வது மேலும் சிறப்பு. புரிந்து கொண்டதை நடைமுறைப்படுத்துவது நன்மையே உண்டாக்கும்.

நடப்பது நல்லது. முதலில், இதனை இரண்டாகப் பிரித்துக் கொள்ளலாம். மனதிலும், உடலிலும் உண்டாகும் நன்மைகளே அவை இரண்டும்.

மனம் உடம்பையும், உலகையும் கட்டி ஆளும் அபாரசக்தி வாய்ந்தது. மனதில் உண்டாகும் எண்ணங்கள். பெரும் சக்தி வாய்ந்தவை. நேர்மறை எண்ணங்கள் (*Positive thoughts*), எதிர்மறை எண்ணங்கள் (*Negative thoughts*) என எண்ணங்கள் இரு பிரிவுகளாக அறியப்படுகின்றன.

பெருவாரியான சிந்தனையாளர்கள் நேர்மறை எண்ணங்கள் நன்மை பயப்பனவாகவும், எதிர்மறை எண்ணங்கள் பிரச்சினைகளை ஏற்படுத்துவதாகவும் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

சமீபத்தில், பிரித்தானிய அரசு தனிமைக்கு ஒரு தனி அமைச்சை (*Ministry Lonelyness*) உருவாக்கி உள்ளதே இதன் அவசரத் தேவையை நமக்கு உணர்த்துகிறது.

தனிமை மனதில் ஏற்படுத்தும் தாக்குதல் ஏராளம், தாராளம்!

மனதில் உண்டாகும் எண்ணங்களினால் தனக்குத் தானே பாதிப்பை உண்டாக்கிக் கொள்வதும், சமூகத்திற்கும் பிறருக்கும் பாதிப்பை உண்டாக்குவதும் இன்றைய சிறார்கள் மற்றும் இன்றைய தலைமுறையினரிடம் காணப்படுவது பெரும் கவலைக்குரிய விஷயம். இதை மாற்ற வேண்டியது மிகமிக அவசியம்.

தனிமை வரமா? சாபமா?

எதிர்மறை எண்ணங்கள் வரமா, சாபமா? தனிமையையும், எதிர்மறை எண்ணங்களையும் வரமாக மாற்றுவது எப்படி? அர்த்தம் புரிந்தால், விளைவு இனிக்கும்.

ஒருமுறை என்னுடைய நண்பரின் மனைவி கூறினார், தன்னுடைய கணவர் பற்றிக் கூறினார்.

"என் கணவர் ஆபிசுக்கும், ரொயிலட்டுக்கும் மட்டும்தான் தனியாகப் போவார். மிகுதி விஷயங்கள் எல்லாமே எனக்குத் தெரியும்" என்று சிலாகித்துக் கூறினார்.

இந்த வார்த்தையின் அர்த்தம் மிகவும் ஆழமானது.

எல்லா இடங்களுக்கும் துணையோடு போக முடியாது. அலுவலகம் ஆற்றலை வளர்க்கும் இடம். வாழ்க்கை உயர அலுவலகம் சென்று செல்வமீட்டுவது அவசியம். அங்கே தனி மனித சிந்தனையும், இடையூறற்ற செயல்பாடும் அவசியம். அதுவே நம் வாழ்வின் தரத்தை உயர்த்தும். எனவேதான் வாழ்க்கைத்துணைக்கு அனுமதியில்லை. கழிவறை என்பது அலுவலகத்தை விட பல மடங்கு தனிமையும், அமைதியும் தேவைப்படும் இடம். ஆகையால், அங்கேயும் தனியாகச் செல்லவேண்டியுள்ளது.

உடலின் கழிவுப் பொருட்களை முறையாக வெளியேற்றாவிட்டால் அல்லது வெளியேறும் போது இடையூறுகள் ஏற்பட்டால், நம் உடலில் தங்கி இருக்கும் கழிவுப் பொருட்கள் நச்சுப் பொருட்களாக மாறக்கூடிய அபாயம் இருக்கின்றது.



கழிவறையில் உண்டாகும் அவசரத்தாலும் இடையூறுகளாலுமே பலரும் உணவு உண்ட பின் பலமுறை கழிப்பறைக்குச் செல்லும் சிரமத்துக்கு ஆளாகின்றனர். எனவே, தனிமை என்பது அவசியமான ஒன்று. தனிமனித வாழ்க்கை மேம்பாட்டுக்கு தனிமையும் சிந்தனையும் மிகமிக அவசியம். தனிமை என்பது வரமே அன்றி சாபமல்ல. சித்தர்களும், ஞானிகளும் தனித்திருந்து தவம் புரிந்து, மனிதகுல மேம்பாட்டுக்கு எண்ணற்ற வழிமுறைகளை கண்டறிந்து, நம் பயன்பாட்டுக்காக விட்டுச் சென்று இருக்கிறார்கள்.

நோயாளிக்கும், மருத்துவருக்கும் தனித்திருந்து சிந்திப்பது, நோய் நீங்கி நலம் பெற மிகுந்த அவசியமாகும்.

நோயாளிக்கு தனிமை, அவரின் அமைதியான ஆழ்ந்த நித்திரை கிடைப்பதற்கும் பிறரின் இடையூறுகளால் உண்டாகும் மனக்குழப்பமின்றி அமைதியாக இருப்பதுவும், எந்தவொரு பாரிய வியாதியிலிருந்தும் விரைவாகக் குணமடைய மிகவும் அவசியமாகும். நோயாளியின் குழப்பமான மன நிலையும், சுற்றத்தாரின் தொடர் இடையூறுகளும், இணையத்தளங்களின் மூலம் கிடைக்கும் 'அரைகுறை' விஷயங்களுமே ஒரு நோயாளி அடுத்தடுத்து பல்வேறு மருத்துவர்களை நாடுவதற்கும், நோய் குணமடையாமல், பல்கிப் பெருகுவதற்கும் காரணிகளாகின்றன. புற்றுநோயால் அவதிப்பட்ட எனக்கு, நன்கு தெரிந்த ஒரு நோயாளி சிகிச்சைக்குப் பின் உடல் தேறிவந்து கொண்டிருந்த நிலையில், அவரைச் சுகம் விசாரிக்க வந்த ஒரு உறவினர் புற்றுநோய் குறித்து, அவரிடம் சொன்ன ஒரு தவறான தகவலால், குழம்பி, மனமுடைந்து, தற்கொலை செய்து கொண்டார். என்பதே சரியான உதாரணம்.

எல்லா நோய்களும் ஒன்றின் சாயலில் ஒரே மாதிரி இருப்பதில்லை. எல்லா நோயாளிகளும் ஒருவர் போல் ஒருவர் இருப்பதில்லை. ஒவ்வொன்றும் தனித்துவமானது. ஒவ்வொரு நோயாளிகளுக்கும் பின்புல விபரம் (*Back Ground History*) வெவ்வேறானது. அவரவரின் குடும்ப சூழ்நிலை, அவரவரின் பரம்பரை மற்றும் பழக்க வழக்கங்கள் போன்றவைகள் நோயின் தன்மையைக் கணிக்கவும் (*Diagnosis*) நோய் சுகமாகும் வாய்ப்புக் குறித்து (*Prognosis*) அறிந்து கொள்ளவும் மிக மிக அவசியம். ஹோமியோபதி மருத்துவத்தின் அடிப்படை விதியான 'நோயாளிக்கான சிகிச்சை,' - நோய்க்கான சிகிச்சை அல்ல. *TREAD THE INDIVIDUAL, NOT HE DISEASE* என்பதே ஆதாரம். மருத்துவர்களுக்கும் தனித்திருந்து, சிந்தித்து, நோயாளி குறித்த தெளிவான பார்வையுடன் சிகிச்சை அளிப்பது மிகவும் அவசியம்.

நடப்பது எல்லாம் நல்லதே என்று எண்ணி, நடப்பவைகளை சரியான வழியில் ஆற்றுப்படுத்தி சிக்கலான வியாதிகளிலிருந்து மீண்டு வருவது உயர்ந்த சிந்தனை சற்று சிந்திப்போம். எத்துணை நோயாளிகள் - எத்துணை மருத்துவர்கள் தனித்திருந்து சிந்தித்துச் செயல்படுகிறார்கள்? நோய்களும், குழப்பங்களும் பல்கிப் பெருகும் இக்கால கட்டத்தில், தெளிவும் சுகமும் பெற மேற்சொன்ன சிந்தனை மிக மிக அவசியம்.

மன அமைதியே உடல் ஆரோக்கியத்தின் அடிப்படைத் தேவை.

உடல் ஆரோக்கியத்துக்கு, நடப்பது நல்லது. நடைப் பயிற்சி மிகச் சிறந்த உடற்பயிற்சி.

உடற்பயிற்சி என்பது நவீன மனிதனுக்குத்தான் தேவைப்படுகிறது. நவீன வாழ்க்கை முறை மனிதர்களை நாற்காலிக்குள் ஒட்ட வைத்துவிட்டது. இருக்கும் இடத்தில் இருந்தே இயக்கக்கூடிய (*Remote Controll*) தொழில் நுட்பமும், மொபைல் போனும், அதனுடன் இணைந்த 'இன்ரர் நெற்' தொழில்நுட்பமும், உடல் இயக்கத்தை வெகுவாகக் குறைத்து விட்டன.

இருக்கும் இடத்தில் இருந்தே சாமான்கள் வாங்கவும் (*ONLINE SHOPPING*), விளையாடவும் (*VIDEO GAMES*) இயந்திரங்களை இயக்கவும் வசதிகள் வந்து விட்டதால், நவீன மனிதர்கள் அசைவின்றி மரம்போல் மாறிவிட்டார்கள். மரத்திற்கு 'மூட்டுகள்' இல்லை. மனித உடலில் எண்ணற்ற எலும்புகளும், மூட்டுகளும் இருப்பதன் அடிப்படை காரணமே, அவன்தானே நடந்து திரிய வேண்டும் என்பதுதான்!

'ஓடி விளையாடு பாப்பா! நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா' என்பதன் அடிப்படைத் தத்துவமே இந்த நவீன யுகத்தில் அடிபட்டுப் போய்விட்டது.

ஓடி விளையாடும் குழந்தைகள் நோய் நொடியின்றி ஆரோக்கியமாக வளர்கின்றன. விளையாட்டின் மூலம் 'போனஸாக' ஆனந்தமாயும் வளர்கிறார்கள்!

உட்கார்ந்த இடத்திலேயே *Smart* தொழில்நுட்பக் கருவிகளுடன் வளரும் குழந்தைகள் பருத்து, கொழுத்து, இளமையிலேயே 'இன்சுலீன்' குறைபாடு போன்ற பெரும் பிரச்சினைகளுக்கும் ஆளாகின்றார்கள்.

ஒரு ஆட்டுப் பண்ணைக்குச் சென்று வந்த நிகழ்ச்சி மனதில் நிழலாடுகின்றது. வெறும் நிலப்பரப்பில் இருந்த அந்தப் பண்ணையில் ஏராளமான ஆடுகளை ஒரு மூலையில் அடைத்து வைத்து, தீனி கொடுத்து வளர்த்து வந்தார்கள். பண்ணை முதலாளியிடம், 'இந்த ஆடுகளைத் திறந்துவிட்டால்' பரந்த நிலப்பரப்பில் மேய்ந்து உற்சாகமாக வளருமே! என்று நான் கேட்டேன். அதற்குச் சிரித்தபடியே பதில் சொன்னார்: ஆடுகள் உற்சாகமாக வளர்வதால் எங்களுக்கு லாபமில்லையே! எடை கூடி நிறைய இறைச்சி கிடைத்தால்தான் லாபம் கிடைக்கும்."

நமக்குத் தேவை மனித மாமிசமா? ஆரோக்கியமான மனிதர்களா? ஓடியாடி நடந்து திரிவதால் மட்டுமே ஆரோக்கியமான நோயற்ற உடல் அமைப்பைப் பெறமுடியும். நடையை, உடற்பயிற்சியாக மட்டுமின்றி, வாழ்க்கை முறையாகவே (*Life Style Walking*) அமைப்பதன் மூலமே நோயிலிருந்து மீண்டு வருவதற்கும், ஆரோக்கியமான வாழ்வைப் பெறுவதற்கும் மிக மிக அவசியம்.

சிறு துளி பெருவெள்ளம். சிறிய சிறிய நடைப்பயிற்சிகள் மூலம் பெரும் வியாதிகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். எல்லாவற்றுக்கும் வாகனங்களையும், யந்திரங்களையும் நாடாமல், உடலை அசைத்து, மெல்ல நடந்து, வாழப் பழகினால், நோய் அண்டாது. மாரடைப்புக்குக்கூட நடந்து திரிவதன் மூலம் இதயத்தில் இயற்கையான மாற்று வழி, இரத்த ஓட்டம் உருவாகின்றது. (*Natural Bye Pass Blood Vessels Formations*) என்பது மருத்துவ ஆராய்ச்சி மூலம் நிரூபணமான உண்மை.

நடப்பது நல்லது, மனதுக்கும் உடலுக்கும்! நடப்பவற்றை அமைதியாகக் கவனித்து, ஆழ்ந்து சிந்தித்து, சரியான ஹோமியோபதி சிகிச்சை மேற்கொள்வதன் மூலம் சிறந்த ஆரோக்கியத்தினை மீட்டு எடுக்க முடியும். ●

**இலவச ஆலோசனைகளுக்கு**
**0208 1441553**

# டயபட்டிஸ் சலன்ஜ்

ஹோமியோபதி மருத்துவம் + உங்கள் ஒத்துழைப்பு



## 100% கட்டுபடுத்தலாம்

### சிறப்பு சிகிச்சைகள்

- **உயர் இரத்த அழுத்தம்** (B.P/Hyper Tension)
- **கொலஸ்ட்ரால்** (Cholesterol)
- **சிறுநீரக கோளாறுகள்** (Kidney Diseases)
- **மூட்டு வலி** (Arthritis)
- **தோல் வியாதிகள்** (Skin Diseases)
- **ஹார்மோன் பிரச்சனைகள்** (Hormone Disorders)
- **மாதவிடாய் கோளாறுகள்** (Menses Disorders)
- **செக்ஸ் பிரச்சனைகள்** (Sex Disorders)
- **குழந்தையின்மை** (Infertility)
- **டயபட்டிஸ்** (Diabetes)

டயபட்டிஸ் குறித்த பயமும், அறியாமையும், பீதியுமே ஒரு டயபட்டிஸ் நோயாளியின் வாழ்க்கையில் ஏற்படும் முதல் முடிச்சாக அமைகின்றது. இந்த முடிச்சே மேலும் பல முடிச்சுகளை ஏற்படுத்தி, தீராத பிரச்சினைகளாக மாறிவிடுகிறது.

சவால்களைச் சமாளித்து, ஆரோக்கியமாக வாழ ஹோமியோபதி மருத்துவம் பக்க விளைவுகளின்றி உறுதுணையாக இருக்கும்.

எத்தனை வயதில் டயபட்டிஸ் வந்தாலும், மேலும் நாற்பது, ஐம்பது வருட காலம் தாராளமாக உயிர் வாழலாம்

உயர்தர மருத்துவம் → பாதுகாப்பான மருந்துகள் → விரைவான சேவை

**HOMOEO CARE**

30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்

**இலவச மருத்துவ ஆலோசனைக்கு**
**0208 144 1553**

Viber: 0044 7833341693 skype: homoeocare வெப்சைட்: www.homoeocare.com இமெயில்: homoeocare@rediffmail.com




**தமிழ்க்கல்வி ஆராய்ச்சி மையம்**
**Tamil Education and Research Centre-UK**
கேடில் விழுச் செல்வம் கல்வி | Learning is excellence of wealth

## 2018 தை முதல்

பிரித்தானியா. கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து கொண்டே தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக பட்டப் படிப்புகளையும் பரீட்சைகளையும் செய்யக்கூடிய ஓர் அரிய வாய்ப்பு

- B. A., M.A. நடைமுறைத் தமிழ்
- B. A., M.A. தமிழ்
- B. A., M.A. பரதநாட்டியம்
- B. A., M.A. சங்கீதம்

மேலும் MA பட்டப்படிப்புகள். தமிழ் ஆசிரியர். இசை ஆசிரியர். பரத நாட்டிய ஆசிரியர். போன்ற பட்டயப் படிப்புகளை (Diploma) கற்பதற்கு கொவன்றி நலம்புரிச்சங்கத்தின் துணை நிறுவனமான தமிழ்க் கல்வி ஆராய்ச்சி மையம் வசதி செய்துள்ளார்கள்.

**1, Jacklin Drive, Coventry CV3 6QG, West Midlands, UK.**
tel: +44 7823 535 094, +44 7958 408 280, Canada - M.C Francis +1 419 746 4259
web: www.tearc.org.uk | email: info@tearc.org.uk
*Affiliated to Coventry Tamil Welfare Association*

BTEB

# British Tamil Examination Board
# பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபை

**2018 முதல்....** ஐக்கிய இராச்சியத்திலும், கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தமிழ்க் கல்வி தராதரப்படுத்துவதற்கு முதல்முறையாக தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பிரித்தானிய தமிழ் பரீட்சை சபையால் பெறப்பட்டுள்ளது, என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகின்றோம். இது புலம்பெயர் தேசத்தில் தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு கிடைத்த ஓர் அரிய வாய்ப்பு.

வாழ்க தமிழ் வளர்க தமிழ்!

**பாலர் வகுப்பு முதல் உயர்தரம் வரை பரீட்சைகள் ஐக்கிய இராச்சியத்திலும், கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் நடாத்தப்படுகின்றன**

**1 Jacklin Drive, Coventry CV3 6QG, West Midlands, UK.**
tel: **+44 7958 408 280, +44 7951 476 706**
**Canada - M. C. Francis +1 419 746 4259**
email: **info@bteb.org.uk** | web: **bteb.org.uk**

# பிரித்தானிய சைவத் திருக்கோயில் ஒன்றியம்

The Federation of Saiva (Hindu) Temples UK 200A Archway Road, London N6 5BA Tel: 020 8348 9835 Fax : 020 8482 6508
www.saivafedaration.uk.org Email: saivamahanadu@saivafederation.uk.org Correspondence: 2-4 Bedford Road, Walthamstaw, Londn E17 4Px.

**பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியத்தின் சைவ மாநாடு 06.05.2017, 07.05.2017 ஆகிய இரு நாட்கள் லண்டனில் மிகச் சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.**

## பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியம் 2018ம் ஆண்டில் நடாத்தும்

- திருமுறை ஓதல் போட்டி
- தமிழ் பேச்சு போட்டி
- ஆங்கிப் பேச்சு போட்டி
- நாடகப் போட்டி

எல்லாம் வல்ல இறைவன் திருவருளாலே பிரித்தானியா வாழ் சைவ மக்களிடையே சைவ சமய அறிவையும் புலமையையும் ஊக்குவிக்கும் பொருட்டு பிரித்தானிய சைவ திருக்கோவில்கள் ஒன்றியம் 19வது ஆண்டாக மேற்படி போட்டிகள் நடாத்த உள்ளது. அதற்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**விண்ணப்ப முடிவு திகதி 31.03.2018**

### போட்டிகளுக்கான விண்ணப்ப படிவம் – 2018

**பங்குபற்ற விரும்பும் போட்டிகளின் அருகில் புள்ளடி இடவும்**

☐ திருமுறை ஓதல் ☐ தமிழ்ப் பேச்சு ☐ ஆங்கிலப் பேச்சு ☐ நாடகம்

பெயர் (Name):..............................................................................................

(Write clearly in English)

முகவரி (Address):..............................................................................................

..............................................................................................

Post Code:..............................Telephone:..............................

பிறந்த திகதி: (Date of Birth).............................. வயது பிரிவு:..............................

(Copy of Birth Certificate to be enclosed) (As at 01-03-2018)

Email address:..............................................................................................

முதல்நிலை போட்டி செய்ய விரும்பும் கோவில்:..............................................................

(லண்டனுக்கு வெளியே வதிபவர்களுக்கு மட்டும் - மறுபக்கம் பார்க்கவும்)

போட்டியாளரின் அல்லது போட்டியாளரின் பெற்றோரின் கையொப்பம்..............................

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய விலாசம்:**

Application to be posted to: Mr.S.Pathmamohan
(Saiva Temples Federation Competition 2018)
Croydon Metropolitan College, 30-32 Southend, Croydon, SURREY CRO 1DN

Copy of application from could be obtained from the affiliated temples to the Fedaration or visit www.katpakapathy.com, www.ghanapathy.co.uk, www.saivamunnettasangam.com

| திரு. கனகசுந்தரம் | திரு. மா. இந்துசேகரன் | திரு. T. யோகநாதன் | திரு. திருராசா |
|---|---|---|---|
| செயலாளர் | உதவிச் செயலாளர் | தலைவர் | பொருளாளர் |

## பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியம் 2018ம் ஆண்டில் நடாத்தும் போட்டிகளுக்கான விதிமுறைகள்

1. பிரித்தானியாவில் வாழும் சைவ சமயத்தவர்கள் எவரும் பங்குபற்றலாம்.
2. திருமுறை ஓதல் போட்டி, தமிழ், ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளுக்கான வயது எல்லை:
   (i) 5 வயதிற்கு உட்பட்டோர் (ii) 5-7 வயது (iii) 8-10 வயது (iv) 11-13 வயது (v) 14-16 வயது (vi) 17-25 வயது
3. ஒன்றியத்தினால் தரப்பட்ட பேச்சுகள் மட்டுமே போட்டியில் பயன்படுத்தப்பட வேண்டும்.
   (தேவார புராணம் ஒழுங்கு முறை, பேச்சுக்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன)
4. திருமுறை ஓதுதல் போட்டியில் பங்கு பற்றுபவர்கள் ஆலயத்தில் நின்று இறைவனை வழிபடுவது போன்று பாட வேண்டும். (தரப்பட்ட வயதுக்கான ஒழுங்கு முறைப்படி திருமுறைகளை அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப தெரிவு செய்து பாடலாம். சுருதிப் பெட்டியையும் தாளத்தையும் பாவிக்கலாம்)
5. நாடகப் போட்டிகளுக்கான வயது எல்லை:
   (i) 18 வயதிற்கு உட்பட்டோர் (ii) 18 வயதிற்கு மேற்பட்டோர்
6. நாடகம் இவ்வருட ஒன்றியத்தின் இலக்கான சைவசித்தாந்தமும் வாழ்வியலும் என்பதை ஒட்டியதாகவும் 20 நிமிடங்களுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும். (குழுத்தலைவர் மாத்திரம் விண்ணப்பித்தால் போதும்)
7. போட்டிகளுக்கான கட்டணம் இலவசம். (போட்டிகளுக்கான செலவுகள் ஒன்றியத்தினால் வழங்கப்படமாட்டாது)
8. போட்டிகள் முதல்நிலை பிரதேச ரீதியில் பின்வரும் கோவில்கள் 15.04.2018 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.
   **வடக்கு மேற்கு இலண்டன்** Archway Murugan Temple உயர்வாசற்குன்று முருகன் ஆலயம்
   **கிழக்கு இலண்டன்** Manor Park சைவ முன்னேற்றச் சங்கம்
   **தென் மேற்கு இலண்டன்** Stoneleigh அம்மன் கோவில், Wimbledon கணபதி ஆலயம்
   **தென் கிழக்கு இலண்டன்** Lewisham சிவன் கோவில்
   இலண்டனுக்கு வெளியில் வசிப்பவர்கள் மேற்குறிப்பிட்ட ஏதாவது கோவில்களில் பங்குபற்ற முடியும்.
9. இறுதி நிலைப் போட்டி Archway முருகன் கோவிலில் 22.04.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறும்.
   ஒன்றியத்தினால் வழங்கப்பட்ட விண்ணப்பபடிவம் மூலம் பங்கு பற்றலாம். முடிவுத் திகதி 31.03.2018
11. ஒவ்வொரு நடுவர் குழுவிலும் மூன்று நடுவர்கள் அங்கம் வகிப்பார்கள். இவர்கள் பங்குபற்றும் பிள்ளைகளின் உறவினர்களாக இருக்கமாட்டார்கள்.
12. நடுவர்களின் தீர்ப்பே போட்டிகளின் முடிவாகும்.
13. போட்டியில் முதலாவதாக வருபவர்கள் 05.05.2018, 06.05.2018 நடைபெறும் 19வது சைவ மாநாட்டில் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.


## போட்டிக்கான பிரிவுகளும் அவற்றுக்கான விபரங்களும்

| பிரிவு | வயது எல்லை | As at 01.03.2018 வயது எல்லை | திருமுறைகள் | தமிழ்ப் பேச்சு தலைப்புகள் | English Speech Topics |
|---|---|---|---|---|---|
| 1 | 5 வயதிற்கு உட்பட்டோர் | 01.03.2013இற்குப் பின் | தேவாரம் | அன்னையும் பிதாவும் | Thirunavukarasar |
| 2. | 5+-7 வயது | 28.02.2013 தொடக்கம் 01.03.2011 வரை | தேவாரம் புராணம் | பொய் சொல்ல மாட்டேன் | Arumukanavalar |
| 3. | 7+-10 வயது | 28.02.2011 தொடக்கம் 01.03.2008 வரை | தேவாரம் புராணம் வாழ்த்து | சிவம் எனும் செம்பொருள் | The Siva Lingam |
| 4. | 10+-13 வயது | 28.02.2005 தொடக்கம் 01.03.2005 வரை | பஞ்ச புராணம் வாழ்த்து | திருக்குறள் சொல்லும் அறவழி | The Nayanars' message for us |
| 5. | 13+-16 வயது | 28.02.2005 தொடக்கம் 01.03.2002 வரை | பஞ்ச புராணம் திருப்புகழ் வாழ்த்து | இதிகாசங்கள் என்ன கூறுகின்றன | Cheraman Perumal Nayanar |
| 6. | 16+-25 வயது | 28.02.2002 தொடக்கம் 01.03.1993 வரை | பஞ்ச புராணம், திருப்புகள் வாழ்த்து | இன்பத்தமிழ் | The Saiva Siddhanta Philosophy |

Note: Tamil, English Speeches could be obtained from: www.katpakapathy.com, www.ghanapathy.co.uk

# சோ

## எனும் ஒற்றை எழுத்து ஆச்சரியம்



சினிமாவில் இருந்துகொண்டு, பத்திரிகைக்கு வருவது என்பது லேசுப்பட்ட காரியம் அல்ல. அப்படியே பத்திரிகை நடத்த வந்தாலும் அதை வெற்றிகரமாக நடத்துவது என்பது அத்தனை சுலபமும் அல்ல. ஆனால், அங்கே வெற்றிக்கொடி நாட்டியவர் சோ.

இன்னொரு விஷயம்... சுதந்திரப் போராட்ட காலத்தில், ஆங்கிலேயர்கள் காலத்தில், அவர்களை எதிர்க்கவும் நாட்டுவிடுதலை உணர்வை மக்களிடையே விதைக்கவும் பத்திரிகைகள் மிகப்பெரிய ஊக்க சக்தியாகத் திகழ்ந்தன. கிட்டத்தட்ட, அந்தப் பத்திரிகை வாயிலாகத்தான் மக்கள் எழுச்சி அடைந்தார்கள். சுதந்திரத்துக்காகப் போராடினார்கள். இன்றைக்கு அரசியல், புலனாய்வுப் பத்திரிகைகள் அதிகரித்திருக்கின்றன. ஆனால் அரசியலையும் அரசியல்வாதிகளையும் கேலியும் கிண்டலுமாக. நக்கலும் நையாண்டியுமாகச் சொல்வதற்காகவே பத்திரிகையை நடத்தி, அதில், தனித்த அடையாளத்துடன் ஜெயிக்கவும் செய்தவர் துக்ளக் சோ.

சினிமாவில் காமெடி நடிகர்தான் சோ. ஆனால், பத்திரிகை உலகில், அரசியல்வாதிகளுக்கு வில்லனாகவே திகழ்ந்தார். ஒருகட்டத்தில், மக்களின் பிம்பமாக, உணர்வாக இருந்து இவர் எதிர்த்த தருணங்களில், ஹீரோவாகவே ஒளிர்ந்தார்.

சோ நடித்த காலகட்டத்தில் வலம் வந்த நகைச்சுவை நடிகர்களுக்கு இருந்த மார்க்கெட்டோ, அவர்கள் தந்த சூப்பர் ஹிட் காமெடியோ சோ கொடுத்ததில்லைதான். ஆனால், தன் எழுத்தால், திரைக்கதையால், கதையால் நாடகத்திலும் சினிமாவிலும் சிறந்து விளங்கினார். தவிர, கோழிமுட்டைக் கண்களைக் கொண்டு இவர் பார்ப்பதே காமெடியாயிற்று.

காங்கிரஸை எதிர்ப்பார். திடீரென ஜனதாவின் பக்கம் செல்வார். தமிழகத்தில், கருணாநிதியை கிழிகிழியெனக் கிழிப்பார். ஒரு கட்டத்தில், எம்.ஜி.ஆரை கேலி செய்வார். இந்திராகாந்தியை எதிர்த்தாலும் இந்தியை ஆதரித்தார். இந்துத்வாவை ஆதரித்தார். இந்து மத பாரம்பரியங்கள் குறித்தும் மகாபாரதம் குறித்தும் நூல்கள் எழுதினார்.

பத்திரிகை உலகில், தமிழ்வாணன் கேள்வி பதில்களுக்கு மிகப் பெரிய வரவேற்பு இருந்தது. அதையடுத்து அந்தப் பெருமையை தட்டிக் கொண்டவர் சோ. நான்கைந்து பக்கத்துக்கு கேள்வி-பதில் இருக்கும். ஒவ்வொரு கேள்வி பதிலிலும் நக்கலும் நகைச்சுவையும் இருக்கும். கிண்டலும் நையாண்டியும் பண்ணுவதில் சூரன்.

அதே சமயம், எதிர்பாராத கேள்விக்கும் எவரும் யோசிக்கவே யோசிக்காத பதில்களைத் தந்து மொத்த பேரையும் தன்பக்கம் திருப்புவதில் சாமர்த்தியக்காரர். ஒருமுறை ‘திருமுருக கிருபானந்த வாரியார் வெளிநாட்டில் பிறந்திருந்தால்....?’ எனும் கேள்வியை வாசகர் ஒருவர் கேட்டிருந்தார். இதற்கு என்ன பதில் சொன்னார் தெரியுமா.... ‘ஒண்ணும் ஆகியிருக்காது. வெளிநாட்டில் பிறந்திருந்தால், இத்தனை ஞானநூல்கள் அவருக்குக் கிடைத்திருக்காதே’ என்று பதிலளித்தார்.

துக்ளக் பத்திரிகை வாங்கியவர்கள், தொடர்ந்து வாங்குபவர்களாகவே, படிப்பவர்களாகவே இருந்தார்கள் என்பதுதான் சோ அடைந்த வெற்றி. ஆனால், இதில் ஆச்சரியம்... ‘துக்ளக் பாத்தீங்களா. சோ பளிச்சுன்னு அடிச்சாரு பாத்தீங்களா. செம தில்லுக்காரருங்க’ என்று ஒவ்வொரு பதிலையும் சிலாகித்துப் படித்தார்கள்.

அதே சமயம், ஜெயலலிதாவுடன் நட்பு பாராட்டியவர், திடீரென விலகி திமுக - தமாகா என கூட்டணி அமைக்கவும் அந்தக் கட்சிகளுக்கு ரஜினி வாய்ஸ் கொடுக்கவும் செய்ததில் முக்கியப் பங்கு வகித்தார். அந்தத் தேர்தலில், திமுகவை ஆட்சியில் அமர்த்தினார்கள் மக்கள். தமாகாவை ஏற்றுக் கொண்டார்கள். ரஜினியைப் புகழ்ந்தார்கள். ஆனால், ஏனோ தெரியவில்லை.... சோவுக்கான அங்கீகாரத்தை மட்டும் தரவே இல்லை.

அதையடுத்து வந்த ஜெயலலிதா ஆட்சியில் என்னென்னவோ நடந்தன. சசிகலா வகையறாக்கள் கோலோச்சின. அவர்களின் ராஜ்ஜியங்கள், மிடாஸில் தொடங்கி, ஜாஸ் சினிமாஸ் வரை நீண்டன. இவற்றிலெல்லாம் சோவும் பங்குதாரர் என்பதாக வந்த செய்திகளை ரசிக்கமுடியவில்லை.

‘ஜெயலலிதாவுக்கு ரொம்பவே நெருக்கமானவர் சோ. ரெண்டுபேரும் ஒரே ஆஸ்பத்திரில கடைசிகாலத்துல இருந்தாங்க. ஜெயலலிதா இறந்ததாச் சொல்லப்படுற டிசம்பர் 5-ம் தேதியும் அவரை அடக்கம் செய்த 6-ம் தேதியும் மறக்கவே முடியாத சோகங்கள். அடுத்த நாளான 7-ம் தேதி சோ மரணச் செய்தி; துக்கம்!’

‘சோ’ எனும் ஒற்றைவரிப் பெயரைக் கொண்டு மக்கள் மனதில் நின்ற வசீகரம், தன் மொட்டைத் தலையை மைனஸாக நினைக்காமல், பிளஸ்ஸாக்கிக் காட்டிய தைரியம், பழக்கமானவர்கள் நிறையபேர் விட்டாலும் கூட, கடைசிவரை விடாத அந்த ‘பைப்’ ஸ்மோக்கிங், பச்சைக்கலரில், ராணுவ ஸ்டைலில் அவர் எடையையும் தாண்டிய கெட்டியான, வெயிட்டான ஸஃபாரி டிரஸ், பழசை மறக்காமல் நாடக நண்பர்களுடன் தொடர்பு, ஏரியா கவுன்சிலர் தொடங்கி தலைநகர் டெல்லி வரைக்கும் பரவியிருக்கிற அரசியல் தொடர்புகள்... என சோ செய்து காட்டிய விஷயங்கள் எல்லாமே... ஸோ ஸ்வீட் ரகங்கள். அதிரிபுதிரி சரவெடிகள்!

‘பத்திரிகை தொடங்கலாம் என்றிருக்கிறேன். தொடங்கட்டுமா, வேண்டாமா’ என்பதை பத்திரிகையின் முதல் பக்கத்தில் விளம்பரம் போட்டு, மக்களின் மனதை ‘பல்ஸ்’ பிடித்துப் பார்த்து அரங்கேற்றினார். துக்ளக் பத்திரிகையை!

ஆனால், ‘போய் வரட்டுமா’ என்று கேட்காமலேயே சென்றுவிட்டாரே என்று ஏங்கித் தவிக்கிறார்கள் துக்ளக் வாசகர்கள்! ●

– ராம்ஜி


# ENGINE TEC MOTORS

we offer Facilities for

- Servicing
- Clutches
- Brakes
- Overhauls
- Car Electricals
- Pre - MOT Checks
- ALL Types of Repair & Body Work
- Insurance Work Undertaken

என்ஜின் ரெக் மோட்டர்ஸ்
உங்கள் கார் திருத்த
வேலைகளுக்கு
நம்பிக்கையான நிறுவனம்

Ask for Vel or Rajan
Tel: 020 8640 8000
020 8640 1230
Mob: 0786 0226 476
07860 770 945

Email: vel@etmluk.com
rajan 339c@gmail.com
www.etmluk.com



Unit 5,339 London Road, Mitcham, Surrey CR4 4BE

தமிழிலேயே பேசி உங்கள் கார் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ளலாம்.



டாக்டர் ஸ்ரீதரன்

# போட்டு முடித்த கணக்குகள்



கடந்த முப்பது வருடங்களாக - பிறந்த நாட்டை மறக்கவும் முடியாமல் - புகுந்த நாட்டை ஏற்கவும் முடியாமல் - அங்குமின்றி இங்குமின்றி - திரிசங்கு வாழ்க்கை வாழும் நம்மில் கணிசமான ஒரு தொகையினருக்கு - இன்று - ஆப்பிழுத்த குரங்கின் நிலை.

காரணம் - நம்மவர்களில் பலருக்கு அக்கரைக்குச் செல்வதற்கு அடிமனதில் ஒரு சபலம். ஆனால், இந்தச் சபலத்தை முளையிலேயே கிள்ளியெறியும் காரணங்கள் ஆயிரமாயிரம் இக்கரையில், புறப்படவும் முடியாமல் - வேரூண்டவும் மனமில்லாமல் தவிக்கும் உள்ளங்கள் பலவற்றை அன்றாடம் பார்க்கிறோம் - சந்திக்கிறோம்.

தவிக்கும் இந்த உள்ளங்களின் தனிப்பட்ட காரணங்கள் தனிப்பட்டவை - நமக்குத் தேவையற்றவை. ஆனால் - இங்கு நாற்பது வயதைத் தாண்டியவர்கள் - சிறிது வேகமாக நடந்தால் மூச்சு வாங்கும் வயதை எட்டியவர்கள் - ஏகமனதாகக் கூறும் பொதுவான பல காரணங்களுள் ஒன்று - அந்த ஒன்றே ஒன்று மட்டும் - கீறல் விழுந்த இசைத்தட்டுப் போல மீண்டும் மீண்டும் ஒலிக்கிறது.

*"என்ன இருந்தாலும் எங்களுக்கும் வயதாகிக் கொண்டே போகிறது - ஏற்கனவே மருந்து மாத்திரைகளுடன்தான் இங்கு வாழ்கிறோம் - இங்கு இருக்கும் இந்த மருத்துவ வசதிகளும் மருந்து வகைகளும் அங்கு கிடைக்குமா என்பது சந்தேகம் - அதை நினைத்தால்தான் போவதற்கு சிறிது தயக்கமாக இருக்கிறது."*

## எடுத்த எடுப்பில் நோக்கும் போது - நியாயமான - நீதியான காரணம்

ஏனெனில் - சிவ மூலிகையிடம் தங்களைத் தாங்களே தொலைக்கும் அந்தச் சித்தர்களைப்போல - பக்தர்களின் பக்தியில் தன்னைத் தானே தொலைக்கும் அந்தப் பரமனைப் போல - மாதவியின் வீட்டில் தன்னைத் தானே தொலைத்த அந்தக் கோவலனைப் போல - மருத்துவ விஞ்ஞானம் படைத்திருக்கும் எண்ணற்ற மாத்திரைகளிடம் தங்களைத் தாங்களே தொலைத்திருக்கிறார்கள் இன்று நம்மவர்களில் பலர்!

அன்றாடம் பார்க்கிறோம் - சந்திக்கிறோம். உணவு அருந்துவதற்கு முன் - உணவு அருந்தும் பொழுது - உணவு அருந்திய பின் - அலுவலகத்திற்கு செல்வதற்கு முன் - அலுவலகத்தில் - அலுவலகத்திலிருந்து வீடு திருப்பியதும் - தூங்குவதற்கு முன் - தூங்கி எழுந்தபின் - மாத்திரைகள் - மாத்திரைகள். இது தவிர - தலைவலிக்கு மாத்திரை - வயிற்றுவலிக்கு மாத்திரை - பசிப்பதற்கு மாத்திரை - பசிக்காமலிருப்பதற்கு மாத்திரை - இச்சைக்கு மாத்திரை - இசைவதற்கு மாத்திரை - இசைப்பதற்கு மாத்திரை.

இப்படியாக - எதற்குமே மாத்திரைகள் - எல்லாவற்றிற்குமே மாத்திரைகள். மாத்திரைகள்தான் இங்கு நம்மில் பலரை வாழ வைக்கின்றன. மாத்திரைகளை நம்பியே இன்று நம்மில் பலர் வாழ்கிறோம்.

இதனால்தான்- இப்படி அடிமைப்பட்டு விட்டதால்தான் - இந்த நாட்டின் மீது நமக்கு ஒரு மோகம் - பயம் கலந்த பக்தி - மரியாதை. இதனால்தான் - அக்கரைக்குச் செல்வதற்கு ஒரு தயக்கம் - பயம் - சந்தேகம்.'

ஆனால் - சிறிது சிந்தித்தால் - இக்கரையில் நம்மை அடிமைப்படுத்திய இந்த மாத்திரைகள் - மருத்துவ வசதிகள் - மருத்துவர்கள் - இவை பற்றிய நமது பார்வை ஒரு குறைபட்ட பார்வை - ஒற்றைக்கண் பார்வை - யானையைப் பார்த்த அந்தக் குருடர்களின் பார்வை.

பார்வை என்று வந்து விட்டால் - பார்ப்பது என்று புறப்பட்டு விட்டால் - எல்லாவற்றையும்தான் பார்க்க வேண்டும் - எல்லாக் கோணங்களிலிருந்தும்தான் பார்க்க வேண்டும் - பார்ப்போம்.

பார்ப்பதை இலகுவாக்குவதற்காக இதோ குட்டிக் கதை.

அன்று சனிக்கிழமை. நேரம் இரவு பன்னிரண்டு மணி. மாடியில் அமைந்திருக்கும் தனது அறையில் - சுகமாக குறட்டை விட்டுத் தூங்கும் நித்திரைப் பிரியன் சுகந்தனின் தூக்கத்தைக் கலக்கிறது. தெருவையே அதிர வைக்கும் அவனது நாயின் குரைப்பு. படுக்கையில் புரண்டபடியே நாயை அதட்டி மேலே அழைத்து - இரண்டு உதை கொடுத்து - அடுத்த அறையில் பூட்டிய பின் - தூக்கத்தைத் தொடர்ந்தான் சுகந்தன். தூக்கத்தைக் கெடுக்கும் எதையும் அவனால் பொறுத்துக் கொள்ள முடியாது.

மறுநாள் காலை அட்டகாசமான கொட்டாவியுடன் துயிலெழுந்த சுகந்தனுக்கு மிகப் பெரிய அதிர்ச்சி வீட்டிலிருந்த விலையுயர்ந்த பொருட்களெல்லாம் இரவு திருட்டுப் போய்விட்டன!

வெறுமையாக - எதுவுமற்று வெறிச்சோடிக் கிடக்கும் வீட்டைப் பார்க்கும் போது - சுகந்தனுக்கு என்றோ படித்த இயற்கை எழுதாத அந்தச் சட்டம் நினைவுக்கு வருகிறது.

காரணங்களின்றி இங்கு காரியங்களில்லை. காரியங்கள் நடக்கும்போது - அதன் காரணத்தை அறியாது - அறிய முயற்சி எடுக்காது - காரியங்களை மட்டுமே பார்த்து - அவற்றிற்குப் பரிகாரம் தேடும்போது - காரியங்கள் தற்காலிகமாக மறைந்தாலும் மாறினாலும் - காரணம் காத்திருந்து - வேறு எத்தனையோ விபரீதமான காரியங்களை உருவாக்கிவிடும். நாயின் குரைப்பு ஒரு காரியம் - அதன் காரணம் வீட்டினுள் நடமாடிய திருடன். இந்தக் காரணத்தை அறியாது - அந்தக் காரியத்தை மறைத்ததன் விளைவு - எனது இன்றைய பரதேசிக் கோலம்!

அந்தச் சுகந்தனுக்கு இப்பொழுது எல்லாமே புரிந்துவிட்டது - ஆனால், நமக்கு மட்டும் இன்னும் எதுவுமே புரியவில்லை. இதற்கு ஆதாரம்?

இலண்டனில் வாழும் வேலுப்பிள்ளைக்கு கடந்த சில மாதங்களாக ஒரு வகை சரும வியாதி தோல் வரண்டு - சிவந்து - அரிப்பெடுக்கிறது. சொறிந்தால் ஒரு வகை நீர் வடிகிறது. இனியும் பொறுக்க முடியாது. என்ற நிலையில டாக்டரைப் பார்க்கிறார். டாக்டர் ஒரே ஊசி மட்டும்தான் போட்டார். இரண்டு நாட்களில் சருமம் பழைய நிலைக்குத் திரும்பிவிட்டது.

இலண்டன் மருத்துவர்களையும் - மருத்துவ வசதிகளையும் - மருந்து வகைகளையும் மனம் திறந்து சிலாகிக்கிறார் - போற்றுகிறார் வேலுப்பிள்ளை! வாழ்ந்தால் இப்படி ஒரு நாட்டில்தான் வாழ வேண்டும் என்பது அவரது இன்றைய சங்கல்பம்!

ஆனால் - குரைத்த நாயை டாக்டர் கச்சிதமாக அறையில் அடைத்து விட்டார் என்பது வேலுப்பிள்ளைக்குத் தெரியாது. திருடன் இப்பொழுது மிகவும் சுதந்திரமாக உலவுகிறான் என்பது வேலுப்பிள்ளைக்குப்புரியவில்லை. இன்னும் சிறிது காலத்தில் எதை எதையோவெல்லாம் திருடப் போகிறான் என்பதையும் வேலுப்பிள்ளை அறியவில்லை. வேலுப்பிள்ளை மட்டுமா?

இந்த அலசலின் முடிவு?

நாம் வசிக்கும் இந்த மனித உடல் - அந்த இயற்கையின் ஒரு அற்புத வார்ப்பு - அதிசய வார்ப்பு. நமது ஒவ்வொரு உடலும் ஒவ்வொரு வார்ப்பு - தனி வார்ப்பு - தனிப்பட்ட வார்ப்பு.

எவ்வாறு ஒருவரின் மனதுபோல இன்னொருவரின் மனது இல்லையோ - அதுபோலவே - அப்படியே - ஒருவரின் உடல் போல இன்னொருவரின் உடல் இல்லை. எவ்வாறு மனதுக்கு விருப்பு வெறுப்புக்கள் உண்டோ - அது போலவே - அப்படியே - உடலுக்கும் விருப்பு வெறுப்புக்கள் உண்டு. எவ்வாறு மகிழ்ச்சியாக இருக்கும்போது ஒரு விதமாகவும் - கோபமாக இருக்கும்போது வேறு ஒரு விதமாகவும் நமது மனது நடந்து கொள்கிறதோ - அதுபோலவே - அப்படியே - தேவையானது கிடைக்கும் போது ஒரு விதமாகவும் தேவையற்றது கிடைக்கும் போது வேறு விதமாகவும் நமது உடலும் நடந்து கொள்கிறது.

இன்று - இங்கு - நாம் வியாதிகள் என்று நினைப்பவற்றில் - வியாதிகள் என்று நினைத்து மாத்திரைகளை விழுங்குபவற்றில் பெரும்பாலானவை வியாதிகளேயல்ல - நோய்களேயல்ல. அவை நமது உடலின் விருப்பு வெறுப்புக்களின் வெறும் வெளிப்பாடுகள் - நிரந்தரமற்ற வெளிப்பாடுகள் - காரணங்கள் மாறும் போது மாறிவிடும் காரியங்கள். அது மட்டுமல்ல அது ஒரு மொழி - ஒரு தனிமொழி - நமது உடல் நம்முடன் மட்டுமே பேசும் ஒரு மொழி அது நமக்கு மட்டும்தான் புரியும் - அதைப் புரிவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும்.

நாம் வாழும் சூழல் - நாம் உண்ணும் உணவு - அதன் அளவு - நாம் செய்யும் தொழில் - நாம் அணியும் உடை - நாம் விளையாடும் விளையாட்டு - நாம் ரசிக்கும் கலை - நாம் சந்திக்கும் மனிதர்கள் - இவற்றைப் பற்றிய தனது கருத்தை - விருப்பு வெறுப்புக்களை நமது உடல் நமக்கு அன்றாடம் தெரியப்படுத்துகிறது - அதற்கே உரிய அந்தத் தனி மொழியில். அந்த மொழி டாக்டர்களுக்குப் புரியாது - மாத்திரைகளுக்குத் தெரியாது.

இங்கு - மாத்திரைகள் மாற்றிய வியாதிகள் அதிகமா? அல்லது அவை உருவாக்கிய வியாதிகள் அதிகமா?

இங்கு - வயோதிபர்களை மருத்துவ விஞ்ஞானம் வாழ வைக்கிறதா? - அல்லது அன்றாடம் வதைத்து கொல்கிறதா? இங்கு - வைத்தியசாலைக்குச் செல்வதால் ஒருவனின் நோய் குறைகிறதா? - அல்லது அதிகமாகிறதா?

பட்டிமன்றங்கள் அமைத்தால் சத்தியம் புலனாகும் - பாதிக்கப்பட்டவர்களை விசாரித்தால் நிர்வாணம் துலங்கும். நமது உடலை நாம் புரிந்து கொண்டால் - அதன் விருப்பு வெறுப்புக்களை அறிந்து கொண்டால் - அதன் மொழியை விளங்கிக் கொண்டால் - இங்கு நமக்கு நோயில்லை - மருந்தில்லை - மாத்திரைகளில்லை. அப்பொழுது நாம் இக்கரையிலும் இருக்கலாம் - அக்கரையிலும் இருக்கலாம்.

ஆனால் - இவை எல்லாவற்றையும் மீறி - என்றோ ஒரு நாள் நமக்கும் ஒரு நோய் வரும் - வரலாம். எப்படி வரும்? இந்த வினாடி காற்று உள்ளே செல்ல வேண்டும் - இந்த வினாடி அது வெளியேற வேண்டும் - இந்த வினாடி வெளியே சென்ற காற்று இந்த வினாடிக்குப்பின் மீண்டும் உள்ளே வரக்கூடாது என்று நிர்ணயிப்பவன் எழுதிய எழுத்து அது எப்பவோ முடிந்த காரியம் அது - போட்டு முடித்த கணக்கு அது. அப்பொழுது - ஆம்புலன்ஸ் நேரத்திற்கு வரமாட்டாது - மருந்து பயனளிக்காது - மாத்திரை வேலை செய்யாது. வாழும் இடம் இதை நிர்ணயிப்பதில்லை - வாழ வைத்தவனின் நிர்ணயம் இது. அதை மகிழ்ச்சியுடன் - கொண்டாட்டத்துடன் உற்சாகத்துடன் அரவணைப்போம் ஏனெனில் - அது ஒரு முடிவல்ல - அது ஒரு சுகத்தின் ஆரம்பம்.

போர்வைகளற்ற நிர்வாணம் இந்த அவதானம்

அகத்தே மாசில்லாதவனுக்கு நிர்வாணம் ஒரு புனிதம்.

அது ஒரு சத்தியம். ●



மாதவிசிவலீலன்

# ஒரே ஊராய் உலகை மாற்றி வாழவேண்டும் உறவனைத்தும்!



இலண்டன் தமிழ் நிலையப் பாடசாலையில் தமிழ்மொழியைக் கற்று கேம்பிரீஜ் பல்கலைக்கழகத்தின் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்ததுடன், சென்னைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாகப் படித்துத் தமிழில் பட்டம் பெற்ற நிதர்சனா தனது பிள்ளைப் பருவத்திலேயே இலண்டனிலிருந்து கவிதைகள் எழுதி வருகின்றார். ஈழத்தில் நடை பெற்ற போரும் அது தந்த கசப்பான அனுபவங்களையும் நெஞ்சில் சுமந்து நாடெல்லாம் அலைந்த தமிழ் மக்களின், இரண்டாம் தலைமுறையும் அதன் தாக்கத்திற்கு ஆட்பட்டு அவதியுறுகின்றதென்பதற்கு இவரது கவிதைகள் சாட்சியாகவுள்ளன.

யாழ் கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது குழந்தைப் பருவத்திலேயே ஊரை விட்டு அகதியாகித் தாயின் அரவணைப்புடன் கொழும்பு, இந்தியாவென அலைந்து இலண்டனில் தஞ்சமடைந்தார். 'இளம் நினைவுகள்' என்ற கவிதைத் தொகுதியைத் தனது பதினைந்தாவது வயதில் 2004ஆம் ஆண்டு வெளியிட்டதன் மூலம் தன்னை இளங்கவிஞராக அடையாளப்படுத்திக் கொண்டார்.

பிள்ளைப் பருவமென்பது மகிழ்ச்சிக்குரியதொன்று. அது எம் பிள்ளைகளுக்கு எட்டாக்கனியாகி, இராணுவத்தின் கால் தடங்களுக்கு அஞ்சியும் சீறி வரும் குண்டுகளுக்குப் பயந்தும் துயருற்ற மனத்தினராய் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டவராய் நிலைகுலைந்து போக வைத்தது. இவர்களைப் போன்றோர் புலம்பெயர்ந்ததன் மூலம் ஓரளவு தம்மைச் சுதாகரித்துக் கொள்ள ஏனைய பிள்ளைகள் அந்தப் பயங்கர அனுபவங்கள் ஆழ்மனத்துள் குமைந்திருக்க அங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களுக்கான உளவளத்தையும், களிப்புறு மனத்தையும் யார் திருப்பிக் கொடுக்கப் போகிறார்களென்ற வினாவை இத்தகைய படைப்புகள் மூலமே நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

புலம்பெயர் சூழலில் வாழ்கின்ற இளம்தலைமுறையினரிடையே தமிழில் கவிதையாக்கும் ஆற்றல் உண்டென்பதற்கு இவர் உதாரணமாகின்றார்.

*பறந்தோடும் காலங்களே*
*கொஞ்சம் பின்னோக்கி செல்லாயோ*
*தாய் மண்ணில் வாழும்*
*மழலையாய் மீண்டும்*
*என்னை மாற்றாயோ*

என மண்ணின் தாகத்தை வெளிப்படுத்தும் சிறுமியாக ஏங்குமிவர், இன்னொரு கவிதையில் உறவுகள் சிதறுண்டு வெவ்வேறு நாடுகளில் அடைக்கலம் புகுந்து தொடர்புகளற்றுப் போனதை வலியுடன் சொல்கின்றார்.

*ஆங்காங்கே வானத்தில்*
*சிதறியுள்ளன நட்சத்திரங்கள்*
*ஒற்றை நூலில் மாலை போல*
*கோர்க்கவேண்டும் நட்சத்திரங்களை*
*ஒரே ஊராய் உலகை மாற்றி*
வாழ வேண்டும் உறவனைத்தும்.

அந்நிய தேசத்தில் எம் பிள்ளைகள் எவ்வாறு சிந்திக்கின்றார்களென்பதற்கும் அவர்களது எதிர்பார்ப்புகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதற்கும் இவரது கவிதைகள் சாட்சியங்களாகின்றன.

*'நீ உன்னை முதலில் நேசி*
*பின் உலகை நேசி*
*வாழ்வில் நிம்மதியிருக்கும்'*

என்று தன் பதினைந்து வயதில் கூறுமளவிற்கு ஆளுமைமிகு பெண்ணாக விளங்கியிருக்கின்றார். இன்று கொண்டாட்டங்களை மிக ஆடம்பரமாகச் செய்து உணவைக் கண்டபடி கொட்டுகின்ற அவலத்தை நாளெல்லாம் காணுகின்றோம். இதனைச் சொல்லுகின்ற போது,

*'நெல்லின்றிச் சோறில்லை*
*சோறின்றி நாமில்லை*
*ஒரு தட்டுச் சோறுண்ண*
*அவதிப்பட்டோம் ஒரு காலத்திலே*
*அவதிப்பட்ட மனிதரெல்லாம்*
*நாடு விட்டு நாடு வந்தவுடன் மிச்சம் என்ற பெயரினிலே*
*சோற்றைக் கொட்டுகின்றார் குப்பையிலே*
*குப்பையிட்டவரெல்லாம் அங்கு*
*பட்டினி கிடந்தவர்தான்'*

என சிறு கோபத்துடனும் விரக்தியுடனும் பதிவு செய்கின்றார். இங்கு இவரது சமூக அக்கறையைக் காண முடிகின்றது. இது மட்டுமல்ல 'கேள்விக்கு என்ன பதில்' என்ற தலைப்பிலான கவிதையில் சமுகத்தை நோக்கிப் பல கேள்விகளை முன் வைக்கின்றார். அவை யாவும் சிந்திக்க வைப்பனவாகும்.

*'சட்டதிட்டம் சொல்பவரே மாய்ந்த உயிர்களுக்கு என்ன விடை'*
*'தமிழா உன் ஒற்றுமைக்கு என்ன விலை'*

**'தாய்மொழியென்ன கடினமா சேய் பேச்சில் மனம் மயங்காதா'** போன்றவற்றை உதாரணங்களாகக் கொள்ளலாம்.

ஆண் பெண் இருபாலாரும் வேலைக்குப் போய் வருகின்ற போது குடும்பத்தில் ஒருவருக்கு ஒருவர் உறுதுணையாக ஆதரவாக வாழ்ந்தாக வேண்டும். நண்பர்கள் போல ஒருவரையொருவர் புரிந்து விட்டுக் கொடுத்துச் சென்றால்தான் குடும்பத்தில் மகிழ்ச்சியிருக்கும். இந்த வாழும்முறையின் சூத்திரமறிந்திட வேண்டும்.

*'நான் அப்படித்தான்*
*வலியென்று நீ துடித்தாலும்*
*உன்னைத் தாங்கிப் பிடிக்க மாட்டேன்*
*ஆனால்,*
*எனக்கு வலித்தால் நீ துடிக்க வேண்டும்*
*காரணம் நான் அப்படித்தான்*
*உழைத்துக் களைத்து நீ வந்தாலும்*
*உன்னை ஏறெடுத்துப் பார்க்க மாட்டேன் ஆனால்,*
*நித்தம் என்னைப் பூவாய் நீ கையில் ஏந்த வேண்டும்'*

அந்த அவனோ அவளோ தன் வாழ்வின் சின்னச்சின்னச் சந்தோசங்களைப் புரிந்து கொள்ள வேண்டுமென்பதனை நயமாக இக்கவிதையில் விபரித்திருக்கின்றார்.

தாய்க்கும் குழந்தைக்குமான அன்பை அரவணைப்பை இன்னொரு சந்தர்ப்பத்தில் கூறுகையில், நீ விழுகின்ற போதெல்லாம் நான் தாங்கிப் பிடிப்பேனென்ற நம்பிக்கையைத் தாய் பிள்ளைக்கு ஊட்ட வேண்டுமென்பதைச் சொல்கின்றார். உனக்காக நான் இருப்பேனெனக் கூறுவது வாழ்தலுக்கான உந்துதலை அவர்க்குக் கொடுக்குமென்பது சந்தேகமில்லை.

*'பிஞ்சுக் கால்கள் நோகுமே என்று*
*என் நெஞ்சிலே தடம் பதித்து*
*கொஞ்சி நடை பழக்கி வந்தேன்*
*பிடித்த விரல் விடுத்து நீயும்*
*மெல்ல அடிமேல் அடி எடுத்து*
*கொடி மலராய் நடை போடுகின்றாய்*
*தடுக்கி நீ விழுந்தாலும் மெல்லத்*
*தாங்கிப் பிடித்துத் தூக்கி விட*
*இருகரம் நீட்டிக் காத்திருக்கின்றேன்'*

பிள்ளைக் கவியாக அறிமுகமானாலும் இன்று இவரது கவிதைகளில் வாழ்வின் பக்குவங்களையும், கவி மொழியின் ஆளுமைகளையும் காண முடிகின்றது. தொடர்ந்து இத்துறையில் இவர் ஈடுபடுவாரானால் மேலும் நல்ல கவிதைகளை இவரிடமிருந்து எதிர்பார்க்கலாம்.

(தொடரும்)

3ம் பக்க தொடர்ச்சி

## விடுதலைப்புலிகள் பற்றிப் பேசுவதற்கு...

கூட்டமைப்புக்குத் தொடர்ந்து அளித்த வாக்குகளை சுமந்திரன் புரட்டிப் போடுவது தமிழினத்துக்குச் செய்யும் மாபெரும் துரோகம்.

21ம் திகதிய கனடிய உரையில் இவர் குறிப்பிட்ட இன்னொரு விடயத்தை அவரது மொழியிலேயே படிப்பது பொருத்தமானது: "புதிய அரசமைப்பில் தமிழருக்குத் தீர்வு வருமா வராதா என்று சொல்ல முடியாது. ஆனாலும் இடைக்கால அறிக்கையை தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும்" என்பது இவரது கோரிக்கை. இதற்கு இவர் கூறும் இன்னொரு காரணம், மிக நகையானது. "முன்னைய ஆட்சிக் காலங்களில் சிங்களக் கட்சியொன்று தமிழருக்கு ஏதாவது தர முன்வந்தால் எதிர்க்கட்சி அதனை குழப்பும். இப்போது அந்த இரண்டு சிங்களக் கட்சிகளும் இணைந்து ஆட்சி புரிவது தமிழருக்குச் சாதகமானது" என்பது சுமந்திரனின் கணிப்பு.

இதனை வேறுவிதமாகவும் பார்க்கலாம்: முன்னர் இரு சிங்களக் கட்சிகளும் தனித்தனியாக தமிழரை எதிர்த்து அவர்கள் உரிமைகளைப் பறித்தார்கள். இப்போது அவ்விருவரும் ஒன்றிணைந்து தமக்கு எதிர்தரப்பு இல்லாத ஒரு நிலையில், தமிழரை எத்திப் பிழைக்க முயற்சிக்கிறார்கள்.

இதற்கு கூட்டமைப்பு துணைபோவதும், சுமந்திரன் இதற்கான முதன்மைத் தரகராக இயங்குவதும் அப்பட்டமாகத் தெரிகிறது. அன்று சந்திரிகாவுக்கு ஒரு கதிர்காமர் கிடைத்ததுபோல, இன்று மைத்திரிக்கும் ரணிலுக்கும் ஒரு சுமந்திரன் கிடைத்துள்ளார் என்பது, பலரும் காதோடு காதாக பகிர்ந்து கொள்ளும் கருத்து. ■



ப.வை. ஜெயபாலன்



# மங்கலம் பொங்கும் தை மாதம்

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது வழி வழி வந்த நம்பிக்கை. வள்ளுவர் ஆண்டு தை முதலாம் நாள் தைப்பொங்கல் திருநாள். ஆங்கில கணிப்பிலும் இது புது ஆண்டு. மாரி பருவ மழையின் நிறைவு. மழை கார் இருட்டின் முடிவு. விடியலில் வெளிச்சத்தை உதய சூரியன் ஆரம்பிக்கும் பொழுது பச்சையம் தக்கி நிற்கும் பயிர்கள். பயன் மரங்கள் செடி கொடிகள்; புதிய இளம் தனிர்களோடு தலை நீட்டி பூத்துக் குலுங்க தயாராகும் பொலிவு. இரவு பனிப்படிவுகள் இலைகளில் தவழ்ந்து நின்ற கதிரவனின் ஒளி கொஞ்ச பளபளக்கும் இலைகளின் ஒளிர்வு. முட்டையை தட்டி உலகை முதல் முதலாக எட்டிப் பார்க்கும் குஞ்சுக் குருவிகளின் களிப்போனது. குளிரோடு ஒயிலாக வந்து காதில் ஒலிக்கும் கோயில் மணி நாதம். உழவுக்கு ஓட்டிச் செல்லப்படும், காளைகளின் கழுத்து சங்கிலி ஒலிக்கும் தாளலய ஓசை. இவை தை மாதத்தில் ஊரின் காலைக்காட்சி. இது நினைவில் ஊரும் நேரம் நெஞ்சில் இன்பம் நினைவுகள் ஊரும்.

தைப்பொங்கல் திருநாள், தமிழர் பெருநாளாகவே கொண்டாடப்படுகின்ற. முற்றத்துப் பொங்கல் பட்டாஸ்வெடி ஒலிப்பு, காளை அடக்கும் மஞ்சு விரட்டல், ஜல்லிக்கட்டு, புதிய சினிமா படங்கள், கவியரங்கம், பட்டி மன்றம், பட்டிப் பொங்கல், போகி தினம், காணும் பொங்கல் என தமிழ்நாட்டில் உற்சாகம் உச்சம் எட்ட தைப்பிறப்பு நான்கு நாள் தொடராக கொண்டாடப்படுவதை தொலைக்காட்சி வழி காணும் போதே ஆனந்தம் மனதில் பொங்கும்.

பிரித்தானியா உட்பட, ஐரோப்பிய நாடுகளிலும் கனடா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா என தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் தைப்பொங்கல் பிரதமர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளூர் ஆட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் சிறப்புகளோடு கொண்டாடப்படுகின்றது. தமிழர்தம் தனித்துவம் உலகெங்கும் பரவி உள்ள மகத்துவம் இத்திருநாள் கொண்டாட்ட செய்தியினால் நிரூபணமாகி நெஞ்சை நிமிர வைக்கின்றது. உலகெங்கும் பரவியுள்ள தமிழர்கள் நிறுவியுள்ள தமிழ்ப்பள்ளிகள், ஆலயங்கள், மூத்தோர் அமைப்புகள், கலாசார மன்றங்கள், இவற்றைக் கொண்டாடுவதும் பரம்பரை வழி தைத் திருநாள் எதிர்காலங்களிலும் பரிமளிக்கும் என்ற நம்பிக்கையைத் தருகிறது.

மாரி வெள்ளம் ஓடி ஓடி புளுதி கழுவிய ஒழுங்கைகள், வீதிகளை தை மாதம் எங்கள் ஊரில் கொண்டிருக்கும். தோட்டங்கள், வயல், தொழிற்சாலை, கல்லூரிகள் நிறைந்த தெல்லிப்பளை பிரதேசம் அது இலைகுழைகள் எருப்பசளைகள் இட்டு வெள்ளம் ஓடி உக்கி தோட்டத்து நிலத்தில் கருமை ஊடுருவி காட்சி தரும் மாதம், இது. மிளகாய், வெங்காயம், மரக்கறி, பயிரினங்கள், ஊடு பயிராக மரவள்ளி, பந்தலில் படரும் புடலை, பயித்தங்காய் போன்ற படரும் கொடி வகைகள், பூசனி, வத்தாளம் கிழங்கு வகைகள் என பயன்களை பொலியும் பயிர் இனங்களை தோட்டக்காரர்கள்



நாட்டத்தயாராகும் ஆரவார நேரம் தைமாதம் காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையில் காலை ஆறு மணி சுங்கோசையோடு விவசாய உழைப்பு, பள்ளிப்படிப்பு தொழிலக பணியாளர்களின் சுறுசுறுப்பு, உற்பத்திகளை சந்தைக்கு கொண்டோடும் வாகனங்களின் கனைப்பு என காலை வேளை களைகட்ட ஆரம்பிக்கும்.

வீட்டுத் தலைவாசல் தாழ்வாரங்களில் கட்டி தொங்கும் வெங்காயப் பிடிக்கட்டுகள் இறக்கப்பட்டு களைந்து சுத்தமாக்கப்பட்டு விதைப்புக்கு தயார்ப்படுத்தப்படுவதும் இந்த மாதத்தில்தான். மிளகாய் பிறவற்றுக்கான நாற்று மேடை தயாராக்கப்படுவதும் தோட்ட நிலம் காணும் மாற்றம். பாத்திகள் வாய்கால்கள் என்று நாற்று நடுகைகளுக்கு ஏற்ற தயார் நிலையை சண்டிக்கட்டு சாரம் தலை துண்டுடன் தொழிலாளர்கள் விவசாயிகள் மண்வெட்டிகளால் உருவாக்குவதும் ஒரு உற்சாகம் தரும் காட்சி. வெங்காய ஒருகை உட்பட பிற வேலைகளுக்கு குழுக் குழுவாக



ஒரு கங்காணியின் தலைமையில் கூலி தொழிலான பெண்களின் கூட்டமும், வீதிகள் தோட்டங்களுக்கு குதூகலம் தரும். சீத்தை துணியில் தைத்து பாவாடை சட்டையோடு வாய் நிறையப் பாக்கு வெற்றிலையும் உரத்த குரலில் வம்பளப்புமாக இளம் பெண்கள் லங்கா சேலை என்ற நெசவில் நெய்த சேலையும் சட்டையுமாக இழுத்து செருகிய தலை முடியோடு வயதான தாய்மார் என வேக நடையோடு வந்து வேலைகளில் சுறுசுறுப்பாக கதையும் சிரிப்புமாக காணப்படும் அவர்களின் அபிநய அசைவுகளும் ஒரு அழகுதான்.

பள்ளிப்படிப்புக்கும் புது வகுப்புக்கு வகுப்பேறி போகும் மாதம். முதலாம் தவணையின் ஆரம்பம். புது புத்தகங்கள், கொப்புகள், புதிய பள்ளிக்கூட சட்டை புதுப்பாத அணி, புதிய நண்பர்கள் என மாற்றங்களை, மாணவப்பருவம் ஆண்டு தோறும் காணும் மாதம் இது. காலைக்குளிரின் கதகதப்பிட் போர்வையை விட்டு படுக்கையில் எழும்ப மனம்வராது. அம்மாவின் அதட்டல் அதிகரிக்க, நேரம் நெருங்கு தென்று மனம் பதைபதைக்க காலை கடன்களை அவசரமாக முடித்து, பள்ளிக்கு ஓடுவோம். புதிய வகுப்பு ஆசிரியர், பாட ஆசிரியர்களின் ஒழுக்க நெறிபோதனைகள், கண்டிப்பு, புதிய பாடபுத்தகங்களுக்கு உறைபோட்டு பெயர் எழுதி ஒட்டி, அழகு படுத்தி அது தேவை இது தேவை என வீட்டில் பெற்றோர் தனக்கு சிரமமும் சினமும் தருவதும் இம்மாதத்தில்தான் அதிகம். கல்கி, குமுதம், ஆனந்த விகடன் கலைமகள் என்று சித்தி வாங்கும் வரை எந்த மாத சஞ்சிகைகளில் பொங்கலுடன் புது சித்திர தொடர்களைகள், தொடர் புது தொடர் நாவல்கள் தொடங்கும் வினு மணியம் என்ற நல்ல ஓவியர்களில் ஓவியங்களுடன் வந்த விளம்பரங்கள் ஏற்கனவே மனங்களில் ஏற்றிவைத்த ஆர்வம். எப்பொழுது புதன்கிழமை வரும் இந்த புது தொடர்களை வாசிக்க என்ற ஆவலை கொள்வதும் தை மாதத்தில்தான்.

நித்திய வழிபாட்டு ஆலயங்களில் பிள்ளையார் கதை, திருவெம்பாவை, என்பதை நிறைவு பெறும். ஐயப்பன் விரதம் அந்த நாட்களில் தமிழர் பகுதிகளில் அதிகம் அனுட்டிக்கப்படவில்லை. ஆனாலும் அவைபற்றிய செய்திகளை இதழ்கள் ஏடுகள் கொண்டுவரும். வேள்விக் கோயில்களில் இந்த ஆண்டு வர தயாராகும் ஆட்டுக்கடாக்களின் விபரங்கள் சந்தி மதவு சந்திப்புக்களில் ஆர்வலர்களால் அலசப்படுவதும் தை மாதத்தில் ஆரம்பிக்கும். வீட்டுக்கு வீடு ஆடு, கோழி என்று தத்தம் குலகோயில்களுக்கு நேர்ந்து விடுவோர். அவற்றின் வளர்பபில் கூடிய அக்கறை காட்டுவதையும் இன்நாட்களில் அவதானிக்க முடியும். புதிய ஆண்டின் திகதி நாட்காட்டிகள் வீட்டுச்சுவர்களை சுவாமி படங்கள் அல்லது அரசியல் தலைவர்களின் படங்களோடு அலங்கரிக்கும். கோயில்களின் விரத ஆரம்பம். அப்பா, அம்மா விண் இறந்த திதி திவசநாள் எது என பார்த்து முன் கூடியே நினைவில் குறிப்பதும் நாள் காட்டிகளில் நடக்கும்.

தைமாதம் ஒவ்வொரு ஆண்டும் ஊரில் பூக்கும் நிகழ்வு, ஓட்டங்களை, அந்த எம் சிறு வயதுக்கால நினைவுகளை, நெஞ்சில் நிரல்படுத்துவதும் இனிமை, மாறிப்போன தொழில்நுட்பவளர்ச்சிகள். இயந்திரமயமாக வாழ்வு முறைகளால் ஆத்ம பூர்வமான அன்பு, பாச உணர்வுகள், உறவு ஒற்றுமைகள் எல்லாமே நினைவாய், பழங்கதையாய் போனதும் காலம் செய்த கோலம்தான் ●



✍ சறோஜினி சந்திரகோபால்

# தமிழ்க் கல்வி கலைபண்பாட்டுக் கழகம்

*TAMIL EDUCATIONAL CULTURAL ASSOCIATION.* மழைமுகில் கண்டுதோகைவிரித்தாடும் மஞ்ஞைபோலத்தமிழ்க் கல்விகலைபண்பாட்டுக் கழகத்தின் வருகையால்; புளகாங்கிதத்துடன்

மலர்கின்றது புலத்தமிழ்ப்பூங்காவின் இதழ் 33. 2015ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 13ம் நாளில் *Leigh on sea* எனுமிடத்தில் அமைந்துள்ள *Maths in action hall* இல் 27 மாணவர்;களுடன் ஆரம்பித்த இப்பாடசாலையின் முதலாவது மற்றும் ஒரே தலைமைஆசிரியர் என்ற பெருமைக்குரியவர்; திரு.சுகந்தன் ஜெயபாலசுந்தரம் அவர்கள்.

இப்பாடசாலையின் தோற்றம் பற்றிப் பேசும்போது அப்பாடசாலை மாணவி ஒருவரது பேச்சினைச் செவிமடுக்கும் வாய்ப்பினை அளித்தனர் நிர்வாகத்தினர்.

'சிந்தனையில் இலக்கு வைத்து செந்தமிழை வாழவைக்க. எங்கள் முன்னவரின் முயற்சிகளுக்கு எமதருமைப் பெற்றோர்கள் எழுந்துகரம் நீட்டினர். சத்தியம் சாகாது: அது தீயிலும் வேகாது: நித்தியமாயிருக்கும் உயர் நீதி வழி நடக்க, 13.10.2015 இல் பிறந்தது தமிழ்க் கல்விகலைபண்பாட்டுக் கழகம்'.

மாணவியின் பேச்சில் கழகத்தின் தோற்றம் பற்றியவிளக்கம் ஒலித்தது. இக்கழகத்தின் ஆரம்பகாலங்களில் இதன் வளர்ச்சிக்காக அளப்பரிய சேவைகளைச் செய்ததிரு. ஆனந்தபவன் அருணாச்சலம், திரு.நிரஞ்சன் மகேந்திரன், திரு.செல்வகுமார் கந்தையா, திருமதி. தர்ஷனி உதயரஞ்சித், திருமதி. கவிதாநந்தகுமார் ஆகியோரைமிகவும் நன்றியுடன் மதித்துப் பேசியதிரு. சுகந்தன் அவர்கள், இவர்களதுஅயராஉழைப்புவிலைமதிப்பற்றது,காலத்தால்அழியாதெனப் புகழ்ந்துபேசினார்.

*2016*ம் ஆண்டில், *Southend Southend on sea, Western Approach, Eastwood Community Centre* இடம் மாறி இன்று 50 மாணவர்களுடனும் 9 ஆசிரியப் பெருமக்களுடனும் தாய் மொழியாம் தமிழ் மொழிக்கு உயிர் கொடுத்துவரும் தமிழ்க் கல்வி கலைபண்பாட்டுக் கழகத்தில் தொடர்ந்து தலைமை ஆசிரியர்; பதவியில் இருப்பவர் திரு. சுகந்தன் ஜெயபாலசுந்தரம் அவர்களே. இக் கழகம் வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் 4.30 மணிமுதல் எட்டு மணிவரை நடைபெறுகின்றது. 'தமிழின் வாழ்வேதமிழர் வாழ்வு'எனும் வரிகளைத் தாரகமந்திரமாகக் கொண்டுதலைநிமிர்ந்துதமிழ் மணம் பரப்பும் இக்கழகத்தில் மழலையர் நிலை முதல் உயர்தரம் வரைதமிழ் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. பொதுப் பரீட்சைகளான 'தமிழர் கல்விமேம்பாட்டுப் பேரவை'மற்றும் 'கேம்பிரிட்ஜ்' நடாத்தி வரும் தமிழ்ப் பரீட்சைகளுக்குத் தோற்றி சிறந்தபெறுபேறுகளை இம் மாணவர்கள் பெற்றுவருவதும் குறிப்பிடத்தக்கவிடயம். இத்தேர்வுகளில் அதிதிறமைப் பெறுபேறுகள் பெற்றுச் சித்திஅடையும் மாணவர்கட்கு, அவர்களது அடுத்த வருட வகுப்பிற்கான புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது. மாணவர்களை உற்சாகப்படுத்தும் ஒரு சிறந்த உந்து கருவியாக இந்தசெயல் இருப்பதை பெற்றோர்களும் ஏற்றுக் கொள்கின்றனர். அதேவேளையில் பாடசாலை மட்டத்தில் தமிழ் எழுத்து, பேச்சு, திருக்குறள் மனனப் போட்டி போன்ற போட்டிகள் நடாத்தப்பட்டு மாணவர்கள்தம் மொழியாற்றல் ஊக்குவிக்கப்படுகின்றது. நடனம் சங்கீதம் சுரத்தட்டுபோன்ற நுண்கலைகளும் பயிற்றப்பட்டுதாய் மொழியோடுதமிழ்க்கலைகளும் வளரத் தம்மாலியன்ற பணிகளைச் செய்வதில் இக்கழகம் முன் நிற்கின்றது.

தமிழர் திருநாளாம் தைத்திருநாளில்,மொழிகலைத் தேர்வுகளில் சித்திபெற்றுமுன் இடங்களைத் தட்டிக் கொள்ளும் மாணவர்கட்குப் பரிசுகள்கேடயங்கள்; வழங்குவதோடு விருந்தினர் கௌரவிப்பும் நடைபெறுகின்றது. எதிர்வரும் வருடங்களில் தமிழர்களின் பாரம்பரிய பண்டிகையான ஆடிப்பிறப்பையும் மாணவர்கட்கு அறிமுகப்படுத்தும் எண்ணமும் பாடசாலை நிர்வாகத்தினருக்கு இருப்பதை தலைமைஆசிரியர் பேச்சிலிருந்துஅறிய முடிந்தது. *'Chithambara Maths Challenge'* அமைப்பினர் வருடந்தோறும் நடாத்திவரும் பரீட்சைகளுக்கானமண்டப ஒழுங்குகளை இலவசமாகச் செய்து கொடுப்பதுடன், மாணவர்களையும் இப் பரீட்சைக்குத் தோற்ற ஊக்குவிப்பதிலும் முன் நிற்கின்றது இகக்கழகம்.

தாய்மொழியுடன் சமயஅறிவினையும் மாணவர்கட்குஅறிமுகப்படுத்துவதன் மூலம் நமது பாரம்பரியகலை கலாச்சார பண்பாடுகளையும் வாழவைக்க முடியுமென்ற அவாவுடன் 01.07.2016 இல் ஆரம்பிக்கப்பட்ட அம்பாள் கூட்டுப் பிரார்த்தனை



வழிபாடானது இன்று *southend* மீனாட்சி அம்பாள் ஆலயமாகப் பரிணமித்து, அங்கு வாழும் தமிழ் மக்களுக்கு அருள்பாலிப்பதை மிகப் பெருமையுடன் கூறிக்கொண்டார் திரு.சுகந்தன் அவர்கள். தமது பாடசாலைக்கான இலட்சணை முத்திரையுடன் 'எம் தேசவாசம் எம் மீது வீச தமிழேதமிழே துணையாயிரு'. எனும் அடிகளுடன் ஆரம்பமாகி 'கிளைகள் எங்கேபடர்ந்தாலும் எம் வேர் என்றும் அங்கேதான்...மொழிகள் பலஅறிந்தாலும் எம் தாய் மொழி,தமிழேதான்'எனத் தொடரும்பாடசாலைக் கீதத்தையும் தன்னகத்தேகொண்ட இப்பாடசாலை,நம் தாய் மண்ணுக்காகத் தன்னுயிர் ஈந்ததியாகதீபம் திலீபனின் நினைவுநாளையும் வருடந்தோறும் நினைவு கூறத் தவறுவதில்லை. இப்பாடசாலையின் நிர்வாகக் குழு உறுப்பினர்களில் ஒருவரானதிரு.ஆனந்தபவன் அருணாச்சலம் அவர்கள் பேசுகையில் 'உடன் நின்று உழைப்பதற்காகஒருகுழுவாகச் செயற்படுகின்றோமேதவிர ஆளுமைசெலுத்தும் நோக்கம் எங்களில் எவருக்குமில்லை'என்றார். அருமையானகருத்தொன்றினைமிகஅமைதியாகவும் ஆணித்தரமாகவும் கூறினார்திரு.ஆனந்தபவன்; அவர்கள்.தமிழ்க் கல்விகலைபண்பாட்டுக் கழகமாணவர்களதுதமிழ் எழுத்துத் திறமைக்குமெருகூட்டுமுகமாக'மலரும் மொட்டுக்கள்'என்னும் தலைப்பில் சஞ்சிகைஒன்றுஆரம்பிக்கப்பட்டுமாணவர்களதுஆக்கங்கள் பிரசுரிக்கப்பட்டுவரும் சிறப்பானசெயலைசெவ்வனேநடத்திவரும் இக்கழக அங்கத்தவர்களதுசீரியசிந்தனைஎமதுவருங்காலசந்ததியினரதுமொழிப் புலமையைவிருத்திசெய்வதுடன் நின்றுவிடாது, படித்ததமிழைப் பாடசாலைவாயிலோடுவிட்டுச் செல்லாதுதம்மோடுஎடுத்துச் செல்லவும் ஏதுவாகின்றது. இச் சிறப்பான செயலினை முன்னின்று செயற்படுத்திய











பெருமைக்குரியவர் அப்பள்ளிஆசிரியைகளில் ஒருவரானதிருமதி. ஆனந்திசெல்வகுமார் அவர்கள்.

பாடசாலையின் தனித்துவம் பற்றிப் பேசுகையில், பிரித்தானியாவில் தமிழ் மாணவர்களின் கையெழுத்துப் பிரதியினை உருவாக்கும் ஒரே கல்வியகம் தமிழ்க் கல்விகலை பண்பாட்டுக் கழகமேஎன்றும் மாணவர்களது வாசிப்புத் திறனைவிருத்திசெய்வதும் ஊக்குவிப்பதும் மிகஅவசியமெனக் கருத்தில் கொண்டு ஒரு தமிழ் நூலகம் அமைப்பதற்கான வேலைத் திட்டத்தினை முன்னெடுத்ததின் அறுவடையாக அவ்வேலைத்திட்டம் பூர்த்தி அடையும் நிலையை எட்டியுள்ளதையும் மகிழ்ச்சியோடு கூறினார். தாய்மொழியாம் தமிழ் மொழியை வளர்க்க, வாழவைக்க, தணியாத ஆர்வம் கொண்டுழைக்கும் இக்கழகத்தின்; தலைமை ஆசிரியரிடம், அவரதுமன ஆதங்கம் பற்றிவினவிய போது, அந்நியமண்ணில் பிறந்து அம்மண்ணின்

தொடர்ச்சி அடுத்த பக்கத்தில்

## வாழும்போதே வாழ்த்துவோம்

இணுவை ச.சிறீரங்கன்

# வாய்மை + தூய்மை + நேர்மை = அதிசயப்பிறவி

**1972**ம் ஆண்டு. வங்கியாளர்களுக்கான நேர்முகப் பரீட்சையின் போது, நாங்கள் அழைக்கப்பட்ட இருபத்தைந்து பேர் வரை, கொழும்பில் கூடியிருந்தோம். தீட்சண்யப் பார்வையுடன், மிகக் கலகலப்பாக எம்மிடையே ஒருவர் உரையாடிக் கொண்டிருந்தார். அவரை நான் உற்று நோக்கினேன். சுருள், சுருளான கேசம். மிகவும் வெள்ளை நிறம். அப்பழுக்கற்ற சிரிப்பு. இத்தகைய குணாதிசயங்கள் கொண்ட அன்பருடன் படிப்படியாக, இருவரும் நட்பாகினோம். இலங்கையில் மட்டுமின்றி, லண்டனிலும் பலரின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு, உள்ளங்கவர் கள்வனாகத் திகழும் அன்பர் முருகானந்தமே அந்த அற்புதமான மனிதராவார்!

இவரை முற்றுமுழுதாகவே நான் 'எக்ஸ்றே' *(X-Ray)* எடுத்து, வைத்திருக்கின்றேன். நடை, உடை, பாவனையில் இவரிடம் தென்படுவது மிகத் தூய்மையாகும். வாய்மையே



இவரின் பேச்சினது தொனி. எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிப்பதில் நேர்மை தென்படும். இப்போது காணப்படும் இவரது தோற்றத்தினை மறந்துவிட்டு, 45 வருடங்கள் தள்ளி, பின்னோக்கிப் பார்க்கும்போது, மிடுக்கான அந்த வாலிபனே, இப்போது என் கண்முன்னே விரிகின்றார். இவராகவே முதுமையைத் தழுவினாரா அல்லது முதுமை இவரைத் தழுவியதா என்பதே எனது கேள்வியாகும்.

வட்டுக்கோட்டை 'சங்கரத்தை' என்ற இடத்தில் இவர் பிறந்தார். இவருடன் ஏற்பட்ட தொடர்பு, இவரின் குடும்பத்தோடும் என்னை நெருக்கமாக்கிற்று. மிகவும் பண்பாடான குடும்பத்தில், இவர் மூன்றாவதாகும். ஆரம்பத்தில் சங்கரத்தை சின்னம்மா பள்ளியில் படிப்பு. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் மேற்படிப்பு. அரச வங்கியான மக்கள் வங்கியில் சுமார் 15 வருடங்கள் வரை இவரின் பணி தொடர்ந்து. சேவை என்பதே இவரின் தேவையாக இருந்தது. இதனால் பலவித பொதுச்சேவையில் இவர் மூழ்கிக் கொண்டார்.

வங்கி உத்தியோகத்தராக இருந்தபோதே வங்கியாளர் சங்கத்தின் வளர்ச்சிக்குப் பாரியபணி செய்தார். அதே காலகட்டத்தில் சாவகச்சேரியை தலையகமாகக் கொண்ட அறிவழிப்போராட்டக் குழுவில் *(Non Violent Group)* இவர் இணைந்து கொண்டார். தந்தை செல்வா வழியில் சென்று, மூவர்ணக் கொடியுடன் இவர் பிணைந்து, அறவழியே பணியாற்றினார். 'இளைஞர் கிளர்ந்தெழுவர்' என்ற தந்தையின் கூற்றுப்படி, இருவர்ணக் கொடி கொண்ட விடுதலை அமைப்போடு சங்கமம் ஆகினார்.

நாமிருவரும் ஒன்றாகச் சிலகாலம் பணிசெய்தபோது, மதியபோசன இடைவெளியில் ஓய்வாக இவர் இராது, எம்மில் சிலரையும் இணைத்துக் கொண்டு, 'உண்டியல்' தூக்க வைப்பார். கடைகள் பல ஏறுவோம். சிறுதுளி பெருவெள்ளமாகச் சேர்க்கப்படும் காசு, அறப்பணி, திருப்பணி, பொதுப்பணியெனப் பலவாறாகப் பிரிந்து செல்லும். "தன்னை மறந்தாள். தன் நாமம் கெட்டாள், தலைவன் தாளே..." என்ற திருமறைக் கூற்றுப்படி, பொதுச்சேவையில், இவரின் அர்ப்பணிப்புக்கு என்றும் குறைவேயில்லை. 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்பதை இவர் ஆழமாகச் சிந்தித்தபடியால், அரசபணியைத் துறந்தார். இளம்பராய, வாலிபக் கனவுகளையெல்லாம் தூக்கியெறிந்தார். சோற்றுக்கு உழைக்க வேண்டும் என்பதை மறந்தார். நாட்டுக்கு, நாட்டு மக்களுக்கு உழைக்கத் தலைப்பட்டார். இதனால் இவரின் வீட்டுக்காரர்களுடன் கூட முரண்பட்டார். இவரது பெயரில், அமைந்த 'முருகா' என்ற நாம சொற்பதம் என்றும் இவருக்குக் கவசமாக அமைந்திருக்கிறது. எந்தச் செயலையும் இவர் கைக்கொள்ளும்போது, அதில் இவரது சிந்தனையும், வந்தனையும் இரண்டறக் கலந்திருக்கும். இதனால் இவர் 'ஆத்மபலம்' பெற்றுள்ளார். இந்தப்பலமே இவரது பிரம்மச்சாரிய வாழ்வுக்கு வித்திட்டது. அநீதி, கொடுமை, சிறுமை, அடக்குமுறை என்பதற்கு எதிராக, இவர் குரல் ஓங்கி ஒலிக்கும்போது, இவர் ஓர் போராளியாகத்தான் காட்சி தருவார்.

இலங்கையை விட்டுச் சென்று, ஒரு சில வருடங்கள் இவர் இந்தியாவில், அஞ்ஞாத வாழ்வை மேற்கொண்டார். இக்காலகட்டத்தில், அறுபடை வீடுகள் உட்பட பல ஆலயங்களில் தரிசனம் செய்யும் பாக்கியம் பெற்றார். மதுரையில் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் உதவியால் ஓர் வேலை பெற்று, கடமையாற்றினார். ஒரு நாள் இவர் மதுரையில் இருந்த போது, இவர் தங்கியிருந்த வீட்டிலிருந்த ஒருவரை அரவம் தீண்டிவிட்டது. அன்பர் முருகானந்தன் இரவு முழுவதும் கண்விழித்திருந்து, பாம்புக் கடியால், பாதிக்கப்பட்டவருக்கு விடமேறாமல் அவரைப் பாதுகாத்தமை குறிப்பிடப்படவேண்டிய ஓர் தொண்டாகும்.

இளம்பராயத்தில் இருந்து, மகாத்மா காந்தியின் அகிம்சையால், காந்தம் போலக் கவர்ந்து இழுக்கப்பட்ட இவர், குஜராத்துக்கு சென்று, 'அகமதாபாத்' என்ற இடத்திலுள்ள, காந்தி ஆசிரமத்தைச் சார்ந்து, அங்கே தங்கியிருந்து, தன்னைப் புடமிட்டுக் கொண்டார். இது இவருக்குக் கிடைத்த ஓர் பெரும் பேறாகும்.

இந்தியாவில் தங்கியிருந்தபோது, இலங்கையில் தமிழர் வாழ்வு, நெருக்கடிகள் பலவற்றுக்கு மேலும் ஆளாவதைச் செய்திகள் மூலம் அறிந்து, விசனப்பட்டார். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற ஆத்மீகக் கோட்பாட்டைத் தன்கடன் பணியாகக் கொண்டார். விமானம் மூலம் இந்தியா சென்றவர், படகு வாயிலாகக் குறிகாட்டுவானை வந்து சேர்ந்தார். அப்போது இந்தியாவின் *IPK* படையினர், யாழ். குடாவில் 'சமாதானம்' என்ற போர்வையில், அமைதியைக் கிளறி விட்டிருந்தனர். முருகா வேகமாகவும், விவேகமாகவும் மக்களுக்குப் பணிகளைத் தொடங்கினார். அமைதிப்படை இவரைத் தேடத் தொடங்கிற்று. 'அன்றுவிட்டேன் கொன்றலடி' என்று பேச்சு வழக்கில் உள்ளதைச் செயல்படுத்தி, புலம்பெயர்ந்தார். 1990ம் ஆண்டில் பிரித்தானியாவை அகதியாக வந்தடைந்தார்.

பொதுச்சேவையில் தோய்ந்தவர்கள் எவருமே ஈரம் துவட்டியதில்லை. லண்டனிலும் தனது தொண்டைத்



தொடங்கினார். சமய, சமூகப் பணிகள் செய்கின்ற லண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்துடன் இணைந்தார். அந்திமச் சேவையாக அபரக்கிரியைகள் பலவற்றை இவர் செய்திருக்கிறார். ஊதியம் எதுவும் பெறாது, இவர் பணியாற்றினார். இப்போதும், அதனைத் தொடர்கின்றார். உயர்வாசற்குன்று முருகன் ஆலய ஸ்தாபகர், அமரர் பரிஸ்டர் சபாபதிப்பிள்ளை ஐயாவும் இத்தகைய அபரக்கிரியைப் பணிகள் பலவற்றை, குருக்கள் இல்லாத காலகட்டத்தில், இங்கு செயற்படுத்தியதை நாம் அறிந்திருக்கிறோம். சபாபதி ஐயாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, வேறு சிலரும் தொண்டு செய்தாலும், அன்பர் முருகா அவர்கள் நிரந்தரமாகவே இப்பணியை முன்னெடுத்து வருவது மிகவும் மெச்சத் தகுந்ததாகும். இவரின் நீண்டகாலப்பணியைப் பாராட்டி, 2002ல் சைவமுன்னேற்றச் சங்கம் இவரைக் கௌரவம் செய்யத் தீர்மானம் எடுத்தது. லண்டனில் வதியும் தனது பிள்ளைகள் நலம் காண வந்த, தனது தாயாரைப் பத்து வருடங்களாக தன்னுடன் இருக்க வைத்து, பராமரிப்பு விடுதி *(Care Home)* அனுப்பாது சிவபதம் அடையும்வரை, இவர் செய்த பணி மற்றையோருக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைப் பணி மன்றத்தை, தனது இருப்பிடத்தில் நிறுவினார். பின்னர் அதனை விம்பிள்டன் கணபதி ஆலயம்வரை பரவச் செய்து, யாழ்ப்பாணச் சித்தரின் பெருமையை பறைசாற்றினார்.

உள்ளொன்று வைத்து, புறமொன்று பேசத் தெரியாத இவர், 'ஆறுவது சினம்' என்ற ஔவை வாக்கைச் சிந்திக்காது, வார்த்தைகளைக் கொட்டிவிடுவார். இவரின் நாவினால் சூடுபட்டோரில், நானும் விதிவிலக்கல்ல. சினப்பட்டு பேசுவார். விலகிச் செல்வார். பின்னர் திரும்பவந்து சமாதானம் செய்வார். சாந்தப்படுத்துவார். இவரது கோபம் இவரின் ஆளுமையை ஒருபோதும் பாதித்ததில்லை. அதுவே இவரது பலமும், பலவீனமுமாகும். இவரை வாழும்போதே, "வாழ்க நெடிது" என்று ஓசை எழுப்பி, வாழ்த்துகிறோம்.

**"ஏசுவார்கள், எரிப்பார்கள்**
**உள்ளதை எழுதுங்கள்**
**உள்ளபடியே எழுதுங்கள்"**
**யோகர் சுவாமிகள்**

---

22ம் பக்கத்தின் தொடர்ச்சி

மொழியையேதம் மொழியாகக் கொண்டு வாழும் நம் தமிழ்க் குழந்தைகள்,அம் மண்ணிலேயேதம் எதிர்காலவாழ்க்கை யைஉறுதிப்படுத்திக் கொள்ளவேண்டியஒருபொறுப்பினைச் சுமந்துவாழ்கின்றனர். இந்தநிலையிலும் அவர்கள் தம் தாய் மொழியைக் கற்கஆர்வம் காட்டுவதுபோற்றத்தக்கவிடயம். இருப்பினும் தமிழ்ப் பள்ளியில் கற்பதுடன் மாத்திரம் நிறுத்திக்கொள்ளாதுவீட்டிலும் அவற்றைமனதிலிறுத்திக் கற்கவேண்டும். இதனைப் பெற்றோர் தம் கடமையாகக் கொண்டுஅவகாசம் கிடைக்கும் பொழுதெல்லாம் தம் குழந்தைகளுக்குதாய் மொழிகற்பதின் முக்கி





யத்துவத்தைஅறிவுறுத்திஆவனசெய்யவேண்டும். பிள்ளைகள் மனதில் தாய்மொழிஅறிவினைவளர்க்கும் உரிமை,கடமை,திறமைஅத்தனையும் பெற்றோருக்கே உரியது. இக்கடமையைஎல்லாப் பெற்றோர்களுமேசெ ய்கின்றார்களா?கேள்விக்குறியுடனானஆதங்கத்திற்குப் பதிலளிக்கவேண்டியவர்கள் எம் தமிழ்ப் பெற்றோர்களே.

திரு.சுகந்தன் அவர்களோடு பேசும்பொழுது,அவரது ஒவ்வொருசொல்லிலும்,அவர் தாய் மண்ணின் மீதும்,தாய் மொழிமீதும் கொண்டுள்ளஆறாப் பற்று பொதிந்து நின்றதை உணரமுடிந்தது. தொடர்ந்துபேசுகையில்,தமிழ் கல்விக் கலைபண்பாட்டுக் கழகம்,தமிழ்மொழிவளர்ச்சிப் பாதையில் தொய்வின்றித் தொடர்ந்தும் பயணிக்கதாய் மொழி உணர்வுடன் செயற்படும்பள்ளியின் ஆசிரியப் பெருமக்களானமல்லிகாசிவநாதன்,மாதினிஅருள்சுகந்தன், அனுசியாகிருபாகரன்,வினோஜா உதயகுமார்,அனுசியாஅனந்தன்,விஜயவதனி ஸ்ரீகாந்தன்,வசந்திகஜேந்திரன் ஆனந்திசெல்வகுமார்,கவிதாநந்தகுமார் ஆகியோரதுதன்னலமற்றசேவைமனப்பான்மையும்,கடினஉழைப்பும்,புரிந்துணர்வும் மூலதனமாக இருப்பதைக் கூறிக்கொள்வதைப் பெருமையாகக் கருதுவதாயும்,அவர்களதுதொடர்ச்சியானஉழைப்பில் கழகம் சிறப்பாகமுன்னேறுமென்றும் நம்பிக்கையுடன் கூறினார். அதேவேளையில் கழகநிர்வாகக் குழுவினர் 'நான்'என்றுசிந்திக்காது'நாங்கள்'எனச் செயற்படுவதும் தங்கள் வெற்றிக்குக் காரணமெனமகிழ்வோடுஉரைத்தார்.

இரண்டேஆண்டுகளில் மெச்சத்தக்கஉச்சத்தைஎட்டிநிற்கும் 'தமிழ்க் கல்விகலைபண்பாட்டுக் கழகம்'; நீண்டஆயுளுடன் தன் நிறைவானசேவையால் நம் தாய் மொழிவாழ வளர வழிசமைக்க வேண்டுமென வாழ்த்திவிடைபெறுகின்றது 'புலத்தமிழ்ப் பூங்காவின் இதழ் 33..





மா.பா.சி

# இரா. உதயணன் இலக்கிய விருது விழா 2017

ஈழத் தமிழரின் பிரச்சினைகளையும் படைப்பிலக்கியத்தின் வீச்சையும் பிறமொழி வாசகர்களும் அறிந்து கொள்வதற்கு வவுனியூர் இரா. உதயணனின் மொழிபெயர்ப்பு நாவல்கள் சகாயிக்கின்றனவென்றால் வெறும் புகழ்ச்சியாகாது. ஏற்கப்பட வேண்டிய உண்மையே. இப்புலம்பெயர் எழுத்தாளரின் நாவல்கள் தமிழ்மொழியிலிருந்து ஹிந்தி, சிங்களம், மலையாளம், ஆங்கிலம் ஆகியவற்றிற்கு மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் இந்த வேற்றுமொழி வாசகருக்கும் மண்ணின் வாசனையையும் வலிகளையும் யதார்த்தமாகப் புகட்டியுள்ளார்.

ஈழத்து தமிழ் நாவலை முதன் முதல் ஹிந்தி மொழிக்குக் கொண்டுவந்த சாதனையையும் நிலைநாட்டியுள்ளார். இன்னும் இருதலைமுறைகளுக்குப் பின் புலம்பெயர் இலக்கியம் இல்லாமல் போகக் கூடியதான நிலைமையே, தற்போது இருக்கின்றது. தமிழ் இலக்கியம். தமிழ் இருந்தால் எதிர்காலத்தில் பெண்களும் எழுத்துத்துறைக்குள் வருவார்கள். இதுதான் புலம்பெயர் இலக்கியத்தின் நிலைமை எனவும் புலம்பெயர் இலக்கியத்துக்கான எதிர்வுகளை முன் வைத்துள்ளார்.

மண்வாசனையை சுவாசக் காற்றாக ஓம்பும் இந்தப் புலம்பெயர் எழுத்தாளரின் உபயமான வவுனியூர் இரா. உதயணன் இலக்கிய விருது விழா - 2017 கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நுணாவிலூர் கா. விஜயரத்தினம் அரங்கில் ஏராளமான தமிழிலக்கிய அபிமானிகள் சமூகத்தில் 16.12.2017ஆம் திகதி மிகச் சிறப்பாக நடைபெற்றது.


கலாகீர்த்தி உருவை தில்லை நடராசா இப்பெருவிழாவுக்குத் தலைமை தாங்கினார்.


அவர் தனது உரையில் இந்த விழா பெரியதோர் பூங்காவனத் திருவிழா போல் மிளிர்கிறது. நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் இப்படி விழாக்களை நடத்த அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் வவுனியாவில் திறந்தவெளி அரங்கொன்றை கட்டிக் கொடுத்தார். ஆனால், அவர் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. ஆடு. மாடுகளைத்தான் கட்டினார்கள். ஆனால், விழாக்களை நடத்தவில்லை. இன்று வவுனியா சகல துறைகளிலும் சிறந்து விளங்குகின்றது. நாவலாசிரியர் வவுனியூர் உதயணன் லண்டனில் கணக்காளராகப் பணிபுரிகின்றார். கணக்குப்பாராது இலக்கியத்தை வளர்க்கிறார். இலக்கியத்தில் எல்லோரையும் ஊக்குவிக்கின்றார். குறைபாடின்றி இலக்கியவாதிகளை நடத்துகின்றார். இலக்கியத்தால் புதிய உலகைக் கட்டியெழுப்ப வேண்டும்.



பேராசிரியர் சபா ஜெயராசா உரையில் குறிப்பிட்டதாவது:-

வவுனியூர் இரா. உதயணன் தமிழுக்குக் கிடைத்த பொக்கிஷம். சிறந்த இலக்கிய வினைப்பாட்டாளர். சமகாலத்தில் சமகால உலகம், சமகால வாழ்வு பற்றிய பரந்த ஆய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. 'சமகாலம்' என்ற இதழொன்றும் இலங்கையில் வெளிவந்தது. இலக்கிய வரலாறு உயர் குடியினரின் வரலாறாகும். உயர்குடி மக்கள் ஆபத்தை ஏற்படுத்தினர். அடிமட்ட மக்களின் கலை. இலக்கிய வேர்களை அழித்து விட்டனர். பரதநாட்டியத்தைத் தத்தெடுத்து அதன் அடி ஆதாரங்களை மேட்டுக்குடியினர் அழித்துவிட்டனர். இப்படி பல அபத்தங்கள் நடந்துவிட்டன. தமிழ் இலக்கியத்தில் சிறுவர் இலக்கியத்தைக் கைவிட்டுவிட்டனர். இன்று இப்பெருவிழாவில் சிறுவர் இலக்கியத்துக்கு விருது கொடுப்பது மகிழ்ச்சியாக இருக்கின்றது.





















கலைச் சொல்லாக்கம் எல்லா மொழிகளிலும் நடக்கின்றது. இலங்கையைத் தவிர ஏனைய நாடுகளில் புதிய சொற்களுக்கு நல்ல வரவேற்புண்டு. புதிய சொற்கள் விளங்கவில்லையென எமது சமூகத்தில் சொல்கின்றனர்.

அங்கீகரிக்கப்படுவதில்லை. இதனை புலமைச் சோம்பல் என்றே கூறவேண்டும். யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் *TERMINAL* என்ற ஆங்கிலச் சொல்லுக்கு தமிழ்ச் சொல்லை ஒருவர் கேட்டார். அமையம் என்றேன். கேட்டவருக்கு கோபம் வந்து விட்டது. விளங்கவில்லை என்றார். சென்னை விமான நிலையத்தை அடைந்த போது இச்சொல் அங்கு பயன்படுத்தியிருப்பதைக் கண்டேன். பல ஆண்டுகளுக்கு முன் நாம் கண்டு பிடித்துவிட்டோம் ஆனால் இங்கு அமையம் விளங்கவில்லையாம்.

மண்ணைப் பிரதிபலிக்கும் நாவல்களை படைப்பது மட்டுமின்றி அவைகளைப் பிறமொழிகளிலும் வெளிவிடுகின்றார். பாரபட்சமில்லாதவர். இது தயான குணமாகும். இத்தகைய விழாக்களை எப்படித் தொடர்ந்து நடத்துகிறாரோ தெரியாது.

அவரது கதைகள் ஒவியமாக இருக்கின்றன. அவர் வாழ்க்கையை படம் பிடிக்கிறார்.

பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் வ.மகேஸ்வரன் கூறியதாவது:

இப்போதெல்லாம் பல நிறுவனங்கள் இலக்கியத்துக்கு விருதுகளை வழங்குகின்றன. இலங்கை சாகித்திய மண்டலம். கொடகே போன்றவை இவ்விருதுகளை வழங்கி தமிழ் இலக்கியவாதிகளை கௌரவிக்கின்றன. முன்னொரு காலத்தில் விருது பெறுவது அரிதாகவே இருந்தது. இந்த அரிதான விருதைப் பெற்றவர்கள் மேளதாளத்தோடு, ஊர்வலத்தோடு அழைத்து வரப்பட்டுள்ளனர். அக்காலத்தில் ஒரு இலக்கிய நிறுவனத்தான் இருந்தது. இப்போது அப்படியல்ல பெருகிவிட்டன.

விருதுகள் எழுத்தாளர் இலக்கியவாதிகளை பங்கப்படுத்தக்கூடாது. ஊக்குவிக்க வேண்டும்.

நடுவர் குழுக்களில் இருக்கிறேன். நூல்களை வாசிக்கிறேன். எழுத்துக்கு அங்கீகாரம் வாசகரிடம்தான் இருக்கிறது. விருதுகளை கிரீடமாக்கக் கூடாது. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் காலம் மாறிவிட்டது. ஒரே *FORMULA* வைக்கையாண்டு அரைத்த மாவையே அரைக்கப் போகின்றோம். சர்வதேச எழுத்தில் மாற்றம் வந்துவிட்டது. எழுத்தால் பண்பாடு வாழும்.

கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர்

தொடர்ச்சி அடுத்த பக்கத்தில்









# திருமண முறிவுகளை தவிர்க்க சில வழிகள்...

டாக்டர் நாராயணன்

இன்றைக்கு திருமண முறிவுகள் அதிகரித்திருப்பதற்கு காரணம் உறவுகளைப் பேணுவதில் அக்கறை காட்டாததே. எந்த திருமணமும் வெற்றிகரமான திருமணம் என்று சொல்ல முடியாது. அதேபோல் இவர்கள்தான் சிறந்த தம்பதிகள் என்றும் யாருமில்லை. எல்லா திருமணத்திலும் சங்கடங்களும் உண்டு, சந்தோஷங்களும் உண்டு. திருமண உறவை வெற்றிகரமாகவும், இன்பமாகவும் வைத்துக்கொள்ள இந்த எட்டு வழிகளை கையாளுங்கள்!



## விட்டுக்கொடுங்கள்!

ஒருவரையொருவர் சின்ன சின்ன விஷயங்களுக்கும் விட்டுக்கொடுக்க ஆரம்பித்தால் பெரிய பெரிய சிக்கல்கள் வருவதைக் குறைக்கலாம். மறத்தலும் மன்னித்தலும் தாம்பத்ய உறவின் அடிப்படை குணம் இதை தம்பதிகள் மறக்கும்போதுதான் பிரச்சனை புள்ளிவைக்க ஆரம்பிக்கிறது. அடுத்தடுத்த சிறு சிறு ஊடல்களில் அந்தப் பிரச்சனை கோலமாகிவிடுகிறது. எனவே ஒருவரையொருவர் விட்டுக்கொடுத்துக் கொள்வது முக்கியமானது.

## பகிர்ந்து கொள்ளுங்கள்

ஒருவரை ஒருவர் எதுவாக இருந்தாலும் பகிர்ந்து கொள்வது முக்கியம். அதே சமயத்தில் ஒரு முடிவெடுக்கும்போது அது குறித்து பகிர்ந்து கொள்வதும்,இப்படி செய்யலாமா என ஆலோசனையுடன் செயல்படுவதும் நல்லது. அலுவலகத்தில் நடந்த இனிப்பான, கசப்பான அனைத்தையும் பகிர்ந்துகொள்வது, ஒரு திரைப்படம் பார்த்துவிட்டு கூட கருத்துகளை மோதல் இல்லாமல் பேசிக்கொள்வது என ஒவ்வொன்றிலும் பகிர்தல் என்பது இருந்து கொண்டே இருக்க வேண்டும்.

## பாராட்டுங்கள்

பலரும் சறுக்கிவிடுவது இங்கேதான். சாப்பாடு நல்லா இருந்தா ஏதும் சொல்லமாட்டார் 'நல்லா இல்லைனா மட்டும் ஏன் இப்டி இருக்குனு கேட்பார்' என்று ஒரு மனைவி சொன்னால் கணவன் தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும். 'நல்லா இருக்குனுதானே சாப்பிட்டிருக்கேன்' என்று எதிர்வாதம் செய்யாமல் நல்ல விஷயங்களுக்கு பாராட்டுவதும் எதிர்மறையாக இருந்தால் இப்படி செய்திருக்கலாம் என்று தட்டிக்கொடுப்பதும் முக்கியமானது.

## சண்டையா? சைலன்ஸ் ப்ளீஸ்

அப்பா அம்மாவும் கடைசிவரை உடனிருக்கமாட்டார்கள். குழந்தைகளும் திருமணமாகி சென்று விடுவார்கள். வாழ்க்கையில் கடைசிவரை ஒன்றாக இருக்கப் போவது கணவன் மனைவி இருவர் மட்டுமே. எனவே கஷ்டம் வரும்போது ஒருவரையொருவர் கேவலப்படுத்தாமல் இருக்க வேண்டும். சண்டை வரும்போது இருவர் மட்டுமே பேசித் தீர்க்கவேண்டும். இன்னொருவர் இடையில் புகுந்தால் அது இன்னும் பிரச்சனையாக மாறும். மூன்றாம் நபரை எக்காரணம் கொண்டும் தலையிட வைக்காதீர்கள்.

## அக்கறை காட்டுங்கள்

எப்போதும் இணையின் மீது அக்கறையுடன் நடந்துகொள்ள வேண்டும். எத்தனை பிஸியாக இருந்தாலும், 'சாப்பிட்டாயா? என்ன செய்கிறாய், உன்னைப்பிரிந்து வாடுகிறேன்' போன்ற குறுஞ்செய்திகளை அனுப்பத் தவறக்கூடாது. அணுகுமுறையில் அக்கறை தெறித்துக்கொண்டே இருக்க வேண்டும். தன் மீது இத்தனை காதல் வைத்திருக்கும் இணையை நினைத்து மனம் எண்ணி எண்ணி இன்னும் பின்னிக் கொள்ளத்தானே செய்யும். ஆதனால் ஒவ்வொருநாளும் அக்கறையோடு நடந்துகொள்ள வேண்டும்.

## நேர்மை முக்கியம்!

ஒருமுறை சந்தேகம் வந்தால் கடைசி வரைக்கும் சந்தேகம் வரும். எனவே சந்தேகம் ஏற்பட்டால் அதை உடனடியாக பேசித் தீர்த்துவிடவேண்டும். திருமணமான முதல் ஐந்து வருடம் கணவன் பேச்சை மனைவி கேட்பாள். அடுத்த ஐந்து வருடம் மனைவி பேச்சை கணவன் கேட்பான். அடுத்தவருடங்களில் பக்கத்து வீட்டுக்காரன் கேட்பான்' என பொன்மொழி ஒன்று சொல்வார்கள். அதனால் ஒருவருக்கொருவர் நேர்மையாக இருக்க வேண்டும்.

## மதிப்பளியுங்கள்

நீ இதுபோல் செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்ற சொல்லலாம். ஆனால், இப்படி செய்யலாம் என்று இணையின் கருத்தை கேட்காமலே முடிவெடுப்பது சரியல்ல. உதாரணத்திற்கு ஞாயிற்றுக்கிழமை விடுமுறைக்கு எங்கு போகலாம்? என்று கேட்டதும் படம் பார்க்க போகலாம் என்று இணை சொன்னால், படம் பார்க்க போனால் ஆட்டோ, டிக்கெட், ஸ்நாக்ஸ் எல்லாம் சேர்த்தால் எகிறிடும். பேசாம டிவிடியில் பார்த்துவிடலாம் என்று கூறினால் இனணக்கு கோபம்தான் வரும். இட்லியா, தோசையா என்று கேட்டால் எது வேண்டுமா செய் என்று சொல்லிவிடுவார்கள். உடனே உப்புமா செய்து கொண்டுவந்தால் நான் இது கேட்கவில்லையே என்று சொல்லக்கூடாது. எதையும் எப்போதும் தெளிவாகக் கேட்டுப் பெறுவதும், உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதும் முக்கியம்.

## உறவில் புதுமை

ஒரே மாதிரியாக எதையும் செய்தாலே அலுப்புத்தட்டிவிடும். எனவே பதுமாதிரியாக முயற்சிக்கலாம். படுக்கை அறையில் அலங்காரங்களை மாற்றுதல், புதுவித ஆடைகளை அணிந்துகொள்ளுதல், வித்தியாசமாக முயற்சித்தல், மூன்று மாதத்திற்கு ஒரு முறை வெளியிடங்களுக்குச் சென்றுவருதல் என உறவில் புதுமையைப் புகுத்துவதற்கு தம்பதிகள் இருவருமே முயற்சிக்க வேண்டும். இந்த அடிப்படை விஷயங்களோடு இணைக்கு அதிகமான நேரத்தை செலவிடுதல், சமூக வலைத்தளங்களை இரவில் அதிகம் பயன்படுத்தாதிருத்தல் என்பதையும் கவனத்தில் வைத்துப் பின்பற்றினாலே திருமண வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இருக்கும். ●

---

24ம் பக்கத்தின் தொடர்ச்சி



தமிழ்த்தென்றல் தம்பு சிவசுப்பிரமணியம் உரையில்,

இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து. இப்பெருவிழாவை நடத்துகிறோம். பல நற்பணிகளைச் செய்கிறோம். 'தாயக ஒலி' என்ற இரு திங்கள் இதழை வெளியிடுகிறோம். இனம் எழுத்தாளர்களின் ஆக்கங்களையும் இவ்விதழில் பிரசுரித்து அவர்களை ஊக்குவிக்கின்றோம். வருங்காலம் பற்றிய சிந்தனைகளை அடித்தளமாக இவ்விதழ் கொண்டுள்ளது.

பேராசிரியர் எச். பாலசுப்பிரமணியம்

உயர் தமிழ் இலக்கிய விருது பெற்றவர் பேசுகையில்,

ஐந்து வயதிலிருந்து எனக்கு யாழ்ப்பாணத் தொடர்புண்டு. எனது தந்தை யாழ்ப்பாணத்துப் புகையிலை வியாபாரம் செய்தவர். அதனால் குமரிக் கண்டத்தில் தமிழ் பிறந்தது. சுனாமி வந்ததால் மக்கள் ஈழத்துக்கும் கிளம்பிச் சென்றனர். சிதறினர். வவுனியூர் உதயணனோடு நட்பு கொள்ள மொழிபெயர்ப்பு உதவியது. அவரது நாவலை ஹிந்தியில் மொழி பெயர்த்தேன். பெண்களை மேம்படுத்தும் இலக்கியம் வாழும். புலம்பெயர்ந்தோர் இலக்கியமும் வாழும் என்றார்.

முனைவர் பா. ஆனந்தகுமார் (தஞ்சாவூர் பல்கலைக்கழகம்) உரை:

நவீன தமிழிலக்கியம் காலனித்துவம் ஆதிக்கத்தில் ஊடாடி மேலெழுந்தது. பின் காலனித்துவம் தமிழரை புலம்பெயர வைத்தது. தமிழ்த் தேசியம் நாடு கடந்து விட்டது. தமிழ் இலக்கியம் உலக இலக்கியமாக வளர்ந்து விட்டது. தமிழின் ஆறாந்திணையே புலம்பெயர் இலக்கியம். அது தமிழுக்கு புதிய அனுபவங்களைத் தருகின்றது. தமிழ் இலக்கியத்தின் முகமும் மாறி இருக்கின்றது. தமிழிலக்கியத்துக்கு உலக வாழ்வு வந்துள்ளது. புதுப் பாதை திறந்து உலக வாழ்வு தமிழில் பயணிக்கின்றது.

கலாநிதி தமிழ்மணி அகனங்கள் உரை:

என உறவான இரா. உதயணன. அவரது முதல் வெளியீட்டு விழாவுக்கு நானே தலைமை தாங்கி நடத்தினேன். அபிப்பிராயம் கேட்டார். நான் சொல்லவில்லை. இரண்டாம் நாவலுக்கு. அபிப்ராயம் கேட்டார். இலங்கை சாகித்திய மண்டலப் பரிசைப் பெறுமென்றேன்.

முதல் நூலுக்கு கிடைத்த பரிசை வவுனியா தமிழ் மத்திய பாடசாலை ஏழை மாணவருக்குக் கொடுத்தார். ஏழை பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டவர் மாணவர்கள் இவரது நிதி உதவியில் பல்கலைக்கழகக் கல்வியைப் பெறுகின்றனர். எழுதுவது போல் நடக்கிறார். வாழ்கிறார்.

லண்டனில் உதயணன் வாழ்ந்து கொண்டு எப்படி முள்ளிவாய்க்காலைப் பற்றி எழுதுகின்றார்? என்ற கேள்வியும் எழுந்தது. அவர் வன்னிக்குப் போய் வந்த பின்னர் தான் நாவலை எழுதுகிறார். பல்வேறு தகவல்களைக் கேட்டறிந்து ஆராய்ந்த பின்னரே படைப்பார்.

பலரது படைப்புகள் நூலாக வெளிவர உதவி செய்துள்ளார். எனது சிறுகதைத் தொகுப்புக்கும் உதவியுள்ளார். விபுலானந்தர் விருதும் கிடைக்கவிருக்கின்றது. இந்தியா சென்றோம். கேரளம் சென்றோம். உதயணன் நாவல் சிங்களம், மலையாளம், ஆங்கிலம் ஆகிய பிற மொழிகளிலும் மொழிபெயர்க்கப்படுகிறது. வறட்சிப் பிரதேசமான வவுனியாவிலிருந்து இப்போது இலக்கியம் வளர்கிறது. வளர்க்கிறோம். பாலைவனத்தில் பசுமரங்களை உண்டாக்குகிறோம். வவுனியாவின் அடையாளம் முல்லைமணி. சிறந்த கவிஞர். முல்லை மணி! கவிதை வெளிவரவும் உதயணனே உதவியுள்ளார். 1970களிலிருந்தே எழுதத் தொடங்கினார். நாம் இளந்தலைமுறையையும் காக்குவித்து அவர்களையும் கௌரவிக்க வேண்டும்.

வாழ்த்துரை : வீ. ஜீவகுமாரன் (டென்மார்க்) பதின்மூன்று





விருதுகளை சிறப்பு ஆளுமைகளுக்குக் கொடுப்பது மாபெரும் பணியாகும். இலண்டன் இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவனங்கள் பாராட்டுக்குரியவையாகும். வெகு சுலபமாக எழுத்தாளராகிவிடலாம். ஆனால், படைப்புகளும் கருத்துகளும் சமுதாய அடிக்குப் போவதுதான் மிகவும் கஷ்டமானது.

இன்றைய அங்கீகாரம் மட்டுமே விருதுகள் விருதை நெஞ்சில் வைத்துக் கொண்டாடுவதைவிடுத்து. அதைத் தலைக்குக் கொண்டு போகக் கூடாது.

வவுனியூர் இரா. உதயணன் ஏற்புரை நிகழ்த்தினார். "வாழும் போதே இலக்கியவாதிகளை வாழ்த்திக் கௌரவிக்க வேண்டும். விருதுக்குரிய சிறப்பாளுமைகளைத் தெரிவு செய்து நடுவர்கள் எமக்கு ஒத்துழைப்புத் தந்தனர். பேராசிரியர் சபா. ஜெயராசா, பேராசிரியர் வ. மகேஸ்வரன் ஆகியோரை எமது ஆலோசகர்கள். பேராசிரியர் எச். பாலசுப்பிரமணியத்துக்கு அதியுயர் தமிழ் இலக்கிய விருது வழங்கியது குறித்து பெருமை கொள்கிறோம். சுப்பிரபாரதிமணியன் அழகு மிக்க படைப்புகளைத் தருபவர். அவரது 'முறிவு'க்கு அயலகப் படைப்பு விருது கிடைத்தது குறித்து மகிழ்ச்சி அடைகின்றோம். இப்படி பல இலக்கியப் பணிகளை இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து முன்னெடுக்கிறோம். இரு திங்கள் இதழாக தாயக ஒலியை வெளியிடுகிறோம்" என்றார் உதயணன்.

நன்றியுரையை கலாபூஷணம் கே. பொன்னுத்துரை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சிகளை அபிராமி தொகுத்து வழங்கினார். மாலை நேரத் தேநீர் விருந்தும் இராப்போசனமும் இரசிகர்களுக்கு வழங்கி விருந்தோம்பப்பட்டனர். ●



திருக்குறள் செம்மல் ந.மணிமொழியன்

# இசைபட வாழ்

வாழ்வு வளர்ச்சியுடையதாய் விரிவுடையதாய் அன்பும் அருளுங் கொண்டு பிறர்நலம் போற்றும் போதுதான் வாழ்வு சிறக்கின்றது, பெருமையுறுகின்றது. குறுகிய தன்னலம் இழிவுடையது, பழித்தற்குரியது. தன்னைப் பிறரை அன்பால் விரும்பாதவர்கள் வாழ்வு வெறுக்கத் தக்கது. அன்பு பாராட்டி ஈகை உணர்வு கொண்டு வாழாதவர் யாரும் வாழ்ந்தும் வாழ்ந்ததாகக் கருதப்படமாட்டார்கள். வள்ளுவர் இதனை,

**"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு"**

ஈதலால் புகழுடன் வாழ்வதே வாழ்வாகும். அப்புகழ் இல்லாது வாழும் வாழ்க்கை பயன் ஒன்றுமே இல்லாத உயிர் வாழ்க்கை எனத் தெளிவுடன் கூறுவார்.

மேலும், தனக்கு இணையாகத் தனிப் பெருமையுடைய தாய் விளங்கி நிற்பது யாதென்றால் ஓங்கிய, பெருமையுடைய - புகழோடு கூடிய வாழ்க்கையன்றி வேறு சிறப்புடையது-வேறொன்றும் இல்லை. உலகத்து இறப்புடைய நிலையில்லா வாழ்வில் இறவாது நிற்கும் புகழ்போல் சிறப்புடையதும் வேறொன்றுமில்லை.

**"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பது ஒன்று இல்"**

என வள்ளுவர் புகழின் பெருமையை நயம்பட எடுத்துக் காட்டுவார்.

புகழ் இல்லாத வாழ்வு வாழ்கின்றவன் வாழ்வு எத்தகையது? செந்நாப்போதார் கூறுகின்றார்; வளமுடைய நிலம், பழிப்பில்லாத வளமுடைய நிலம் புகழுடன் வாழாத ஒருவனைச் சுமக்கும் போது, தன் வளத்தை இழந்து, விளையும் பயனும் குன்றும் என்று பழித்துரைக்கின்றார்.

**"வசைஇலா வண்பயன் குன்றும் இசைஇலா
யாக்கை பொறுத்த நிலம்" என்று.**

எனவே தம்மிடத்துப் பழியன்றி வாழ்பவரே உயிர் வாழ்வார். புகழின்றி வாழ்பவர் வாழ்ந்தும் இறந்தவர் ஆவார். இதனை வள்ளுவர்,

**"வசையொழிய வாழ்வாரே
வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழாதவர்"**

என்பார். ஆதலின், புகழ் வாழ்வு பொது நோக்கை, பிறர் நலத்தை அடிப்படையாகக் கொண்டது. இவ்வுணர்வுகள் - எண்ணங்கள் - சொல்லளவுடன் நில்லாது செயலாக முழுமையடையும் போதுதான் சமுதாயம் பயன் பெறுகிறது.

செல்வம் பல சிறப்புகளைத் தரும் பெருமையுடையது என்று எடுத்துக் கூறி, அச்செல்வம் தமக்கென மட்டும் பயன்படாது பிறர்க்கும் பயன்படும் பெருமையுடையதாக இருக்க வேண்டும் என்பதனை.

**"ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு."
"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயன்உடை யான்கண் படின்"
"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்"**

என்ற குறள்களால் சிறந்த உவமைகளைக் கொண்டு விளக்கிக் காட்டுவார்.

தகுதி மிக உடையவர் முயற்சியால் பெருஞ்செல்வம் ஈட்டினால் அப்பொருளைத் தமக்கு மட்டுமின்றிப் பிறர்க்கும் நலம் பயக்கும்படி பயன்படுத்துவர். ஓர் ஊரில் அமைந்திருக்கும் தண்ணீர் உண்ணும் குளம் நீரால் நிறைந்திருந்தால் அது எவ்வாறு ஊர் மக்களுக்கும், பறவையினங்களுக்கும், விலங்கினங்களுக்கும் நெடிது நின்று பாழாகாமல் தப்பாது பயன்மிகத் தருமோ அதுபோல், பேரறிவாளன் திரட்டிய பெருஞ் செல்வம் உலக நடைக்கேற்பப் பேரளவில் பெருஞ் சிறப்புடையதாகப் பயன் தரும்.

ஓர் ஊரில் பயன் மிகத்தரும் பழமரம் பழுத்து நிறைந்திருந்தால் அது அனைவருக்கும் எவ்வாறு எளிதில் பயன்பட்டு நலம் பயக்குமோ அது போல, நயனுடை யான் கண் செல்வம் தங்கிப் பெருகியிருக்குமாயின், பழமரம் தரும் பழங்களே போல் அனைவருக்கும் நலம் தந்து எளிதின் பயன்படும்.

செல்வம் ஒப்புரவு செய்யும் பெருமையுடைய - தகைமையாளனிடம், பெருந்தகையாளனிடம் நிறைந்திருக்குமாயின் ஊறு செய்யும் பிணிக்கு மருந்தாக நிற்கும் மருந்துமரம் போல் பயன்பட்டுச் சமுதாயத்தின் வறுமை நோய் நீங்கிட உறுதுணை செய்யும்.

ஆனால், நச்சப்படாதவன் செல்வம் நடுவூரில் நச்சுமரம் பழுத்த கனிகள் நிரம்பப் பெற்றிருந்தாலும், அது ஊருக்கு எவ்வித பயனையும் தராது உண்பார்க்குத் தீது பயக்குமோ அது போலச் சமுதாயத்திற்கு மிகுந்த தீமை விளைவித்து விடும் என்பர்.

**"நச்சப்படாதவன் செல்வம் நடுவூரில்
நச்சு மரம்பழுத் தற்று"**

மாட மாளிகையின் அகமெல்லாம் நிறைப்பதற்கு ஏதுவான பெரும் பொருளைத் திரட்டியும், அதனை ஈயாத குணத்தால் கருமியாக உண்ணாதவன் வாழ்க்கை நலத்திற்குப் பயன்படுத்தாதவன் வாழ்கின்றவன் ஆயினும் செத்தவன் ஆவான். இதனை,

**"வைத்தான் வாய்சான்ற பெரும் பொருள் அஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்தது இல்"**

என்ற குறளில் வள்ளுவப் பெருந்தகை கடுமையாய் அக்கருமியின் சிறுமையைச் சாடுவார்.

பொருள், வாழ்வை மகிழ்ச்சியாய் அமைப்பதற்குரிய ஒரு கருவி அல்லது துணை என்று அறியாமல், பணம்தான் எல்லாமே என்று அறிவுகெட்டு மயங்கி, ஈட்டிய பெருஞ் செல்வத்தைத் தானும் பயன்படுத்தாமல் பிறர்க்குத் தகுதியுடையார்க்கு மகிழ்ச்சியைத் தரும்படி கொடுக்காமல், தானும் துய்த்து அனுபவிக்காமல் பணம் சேர்ப்பது மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு பேய் போல் அவாக்கொண்டு பொருளைப் பயன் படுத்தாது வாழ்பவனுக்கு நிறைவில்லாத பேய்ப் பிறப்பு ஒன்றேகிடைக்கும்: இக்கருத்தினை,

**"பொருளானாம் எல்லாமென்று ஈயாது இவறும்
மருளானாம் மாணாப் பிறப்பு"**

என்ற குறளில் எடுத்துரைப்பர்.

இத்தகையோன் எதற்காகப் பொருள் சேர்க்கப் பாடுபட்டுத் துன்பமுறுகின்றான் என வியந்து காரணத்தையும் கண்டு எள்ளி நகையாடுகிறார். தான் பிறரைக் காட்டிலும் பொருள் ஈட்டுவதில் வல்லவன்; தனக்கு இணை வேறொருவர் இல்லை என்று பிறரால் பாராட்டப்பட வேண்டும் என்ற உணர்வால் உந்தி, பொருளீட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டு, உண்பதிலும் உடுப்பதிலும் கூடக் கருமியாக இருந்து, பிறர்க்கு முகமலர்ந்து கொடுத்து உபசரித்து அதனால் பெறும் மகிழ்ச்சியையும் புகழையும் அறியமாட்டான். இவன் எவ்வளவுதான் பெரிய செல்வன் ஆனாலும் செல்வத்தைத் தனக்கும் பிறர்க்கும் பயன்படுத்தாத் தன்மையினால் அவன் பிறப்பு, நிலைத்து நிற்கும் புகழை விரும்பா அந்தப் பிறப்பு, நிலத்திற்குப் பாரமாகும்.

**"ஈட்டம் இவறி இசை வேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை"
- எனச்சாடுகிறார்.**

தான் நுகர்வதும் பிறர்க்கு ஈவதும் ஆகிய இரண்டு தன்மைகளும் செய்கைகளும் இல்லாத ஒருவனுக்குப் பலவாகிய, அடுக்கிய கோடிப் பொருள் உண்டாயினும் ஒன்றும் பயனில்லை. அடுக்கிய கோடிப் பொருள் உண்டாயினும் பிறர்க்குக் கொடுத்தலும் துய்த்தலும் இல்லாதவன் செல்வம் இருந்தும் பொருளில்லா வறியவனே.

**"கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம்
இல்லார்க்கு அடுக்கிய
கோடி உண்டாயினும் இல்"**

தானும் அனுபவிக்காது, துய்க்காது, தகுதி உடையார்க்கும் வழங்காது, ஈகை நெஞ்சம் இல்லாதவன் பெருஞ் செல்வம் சமுதாயத்தின் கொடிய நோய் போன்றது. இதனை,

**"ஏதம் பெருஞ்செல்வம்
தான்துவ்வான் தக்கார்க்கு ஒன்று
ஈதல் இயல்பில்லா தான்"**

என்ற குறளால் விளக்குவர்.

மேலும் தன்னைச் சார்ந்தவர்களைக் கண்டால் மனதில் வெறுத்து, நெருக்கம் கொண்டால் பொருள் உதவியோ வேறு உதவியோ செய்திட வேண்டுமே என அன்பு காட்டாமை மட்டுமின்றி அவர்களிடம் கடுமையாக நடந்து, பெரும் பொருள் இருந்தும் தானும் துய்க்கார். அதுமட்டு மின்றித் தன்னையும் துன்புறுத்திக் கொண்டு, வருத்திக்கொண்டு தகுதியுள்ளோர்க்கும், வறியோர்க்கும் ஈதலும் விருந்தோம்பும் தன்மையும் இல்லாது வாழ்பவரது செல்வத்தை, பாடுபட்டு ஈட்டிய செல்வத்தைப் பிறர் பறித்து, அபகரித்து, பறித்தவர் பயன்பெற்று வாழ்வர் - பொருள் ஈட்டிய இக்கருமிக்குப் பெருந்துன்பமே கண்ட பயன் என்று இரங்குவார் என்கிறார் வள்ளுவர்.

**"அன்பொரீஇத் தற்செற்று அறம் நோக்காது ஈட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர்"**

ஆதலின் செல்வத்தின் பயன் ஈதல் என்றுணர்ந்து ஈதலால் வசையின்றி இசைபட வாழ்ந்திட வேண்டுமென வள்ளுவர் மிகவும் வலியுறுத்துவார். ஒரு சிறந்த பொதுநல அமைப்பிற்கு ஒவ்வொரு தனி மனிதனின் உயர் உள்ளமும், பரந்த மனமும், தன்னலமற்ற அருள் உணர்வும், பொதுநலம் பயக்கும் பணி செய்திடும் விருப்பும் இன்றியமையாதன ஆகும்.

உயர்ந்த தன்மைகள், பண்புகள் அமையப் பெறுவது அருமையாகத்தான் இருக்கும். எப்போதுமே பெருமையுள்ளவை அருமையுள்ளவைகளாக, சோதனைகளுக்கு உட்படுபவைகளாகத்தான் இருக்கும். இருப்பினும், அரியது என்று தளராது மக்கள் நற்பண்புகளை வளர்த்துக் கொண்டால், அதிலும் சிறப்பாகச் செல்வர்கள் உயர் பண்புகளை வளர்த்துத் தம்மைச் சான்றோர்களாக்கிக் கொண்டால் சமுதாயம் சீரும் சிறப்பும் நலனும் வளனும் பெற்றுத் திகழும். ●






# ஹரோ கவுன்சிலில் 8வது ஆண்டாக சுவையான தைப்பொங்கல் விழா

## லண்டன் பாபாவின் தொடரும் பணி

லண்டனில் வாழும் தமிழர்களின் உணர்வுகளையும், எண்ணங்களையும், ஆர்வத்தையும் எடுத்துக்காட்டுவது போல, ஹரோ கவுன்சில் சேம்பரில், எட்டாவது ஆண்டாவது தமிழர் தைப்பொங்கல் விழா *13.01.2018* அன்று நடைபெற்றது.

ஹரோ கவுன்சில் நகர முன்னாள் முதல்வராகவும், கவுன்சிலராகவும், தமிழ் உணர்வாளராகவும் இருந்து அளப்பரிய சேவையாற்றும் 'லண்டன் பாபா' சுரேஷ் கிருஷ்ணா தலைமையிலும், அவரது கடின உழைப்பாலும் இப்பகுதியில் இயங்கும் ஹரோ தமிழ் அமைப்புகள், பாடசாலைகள் ஒன்றிணைந்து, இந்தப் பொங்கல் விழாவை ஆடல் பாடலுடன் கொண்டாடி மகிழ்ந்தனர்.

தமிழர்களின் பொங்கல் விழாவை பல்லின மக்கள் உட்பட நம்மவர்களும் கூடி கொண்டாடினார்கள். பிரென்ற மேயர், ஹரோ லீடர், கவுன்சிலர்கள் என்றும், பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் ஹரோ பகுதியில் உள்ள தமிழ் சிறார்களின் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களித்து இன்புற்றனர். ஹரோ தமிழ் அமைப்புகளின் சங்க தலைவர் லண்டன் பாபா சுரேஷ் கிருஷ்ணா, கவுன்சிலர் சசிகலா சுரேஷ் கிருஷ்ணா ஆகியோருடன் கருணா குணாவின் மிகச் சிறந்த ஏற்பாட்டில் பொங்கல் விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

நாதஸ்வர மங்கள வாத்தியம் முழங்க பிரமுகர்கள் விழா அரங்கத்துக்கு அழைத்து வரப்பட்டனர். ஹரோ தமிழ் பைன் ஆர்ட்ஸ் பாடசாலை, மிடில்செக்ஸ் தமிழ் அகடமி, ஹெண்டன் தமிழ் பாடசாலை, பிரென்ட் தமிழ் பாடசாலை, நாவலர் தமிழ் பாடசாலை, ஹரோ தமிழ் பாடசாலை அமைப்பு, மற்றும் ஹரோ முதியோர் சென்ரர், காலா அஞ்சலி ஆர்ட்சேர்க்கிள் ஆகியன பல்வேறு கலை நிகழ்ச்சிகள் விழாவில் வழங்கினார்கள். பரதநாட்டிய நிகழ்ச்சிகளை 5 நடன அமைப்புகள் வழங்கின. MIDDLESEX தமிழ் விளையாட்டுக் கழக கிளப் (MTSSC), ஹரோ பிகொன் சென்ரர் பற்மன்ரன் கிளப், கோல்ட் ஸ்ரார் நெற்போல்கிளப், லோட்டஸ்கெரிங் கான்ட்ஸ் ஆகியனவும் இப்பொங்கல் விழாவில் பங்கு கொண்டு சிறப்பித்தனர். பொங்கல் கவிதையை டாக்டர் வி. சௌந்தராஜன் வழங்கினார். செல்வி கிருஷ்கா சிறீபாலகிருஷ்ணன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். தொடர்ந்து எட்டாண்டுகளாக ஒரு மாநகர சபையில் திறம்பட நடாத்துவது குறித்து முன்னாள் ஹரோ மேயர் லண்டன் பாபா சுரேஷ் கிருஷ்ணாவுக்கு பிரமுகர்கள், தமிழ் மக்கள் இதயபூர்வமான பாராட்டுக்களைத் தெரிவித்தார்கள். அரங்கத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் சுவையான பொங்கல் விருந்து பரிமாறப்பட்டன. இனிமையான பொங்கல் விழா நிகழ்ச்சிகளைப் பார்த்த அனைவரும் இனிப்பான பொங்கலையும் சுவைத்து மகிழ்ந்தனர்.

***- தமிழன்***







## விமல் பக்கத் தொடர்ச்சி...

பட்டம் பெறும் எங்கள் இளசுகள், பலர் இந்த நாட்டு கலாச்சாரத்தில் ஒரு விசித்திரத்தையும் சில சமயங்களில் கற்று அதில் ஒன்றுபட்டு விடுகிறார்கள். அது மேனாடுகளில் ஏற்றுக் கொள்ளப்படும் ஓரின உறவுக் கலாச்சாரம்.

இரண்டு ஆண்களோ, இரண்டு பெண்களோ கணவன் மனைவி போல ஒன்றாக வாழ, கணவன் - மனைவி உறவுகளையும் உரிமைகளையும் பரிமாற பிரிட்டிஷ் சட்டம் அனுமதிக்கிறது. எம்மவர்கள் 'என் மனைவி' என்று விபரிப்பது போல அவர்கள் 'மை பாட்னர் - என் பங்காளி' என்று விபரிக்கிறார்கள்.

எங்கள் இனத்தவர்கள் பலர் ஏற்கனவே இந்த உறவில் சட்டபூர்வமாக வாழ்ந்து வருகிறார்கள்.

"6 வருடங்கள் ரூம் மேட்டாக பல்கலைக்கழக விடுதியில் தங்கியிருந்து இப்போது ஒரே இடத்தில் வேலை செய்கிறோம். நான் திருமணம் செய்து வெளியேறிவிட்டால் அவள் தனித்துப் போய்விடுவாள். எனவே நானும் அவளும் இறுதிவரை ஒன்றாகவே ஒரே வீட்டில் வாழ முடிவு செய்திருக்கிறோம்" என்று ஒரு பட்டதாரி மாணவி தன் தோழி பற்றிக் குறிப்பிட்டிருக்கிறாள்.

ஓரின உறவில் வாழும் இரு பெண்கள், மருத்துவ ரீதியாக செயற்கைக் கருத்தரிக்கவும் குழந்தை பெறவும் பிரிட்டிஷ் சட்டம் இடமளிக்கிறது. எனவே 'நீ எப்படிக் கல்யாணம் செய்யப் போகிறாய்? நாங்கள் கொஞ்சுவதற்கு பேரன்-பேத்திகளை எப்ப பெத்துக் கொடுக்கப் போகிறாய்?' என்ற கேள்விக்கே இப்போது இடமில்லை. ஓர் ஈயாக நாங்கள் மாறி ஒரு பிரிட்டிஷ் இளம் பட்டதாரிப் பெண்ணின் தோளில் ரகசியமாய் உட்கார்ந்து அவளது வாழ்வை உற்று நோக்குவோம்:

வீட்டில் -

காலையில் எழுந்து உணவு தயாரித்து வீட்டு நிர்வாகத்தை ஆரம்பிக்கும் அம்மா

அவள் மீது சதா ஆணாதிக்க உரிமையைக் காட்டும் அப்பா

அம்மாவை அடிக்காவிட்டாலும் சதா வாயால் மிரட்டிக் கொண்டிருக்கும் அப்பா 'அன்பு' இல்லாத அவர்களின் வாழ்க்கை போன்ற ஒன்று எனக்குத் தேவையா? எனக்குத் தேடப்படும் மாப்பிள்ளை என் அப்பாவைப் போல ஆணாதிக்கவாதியாக இருந்தால் என் கதி என்ன?

வேலையில் -

என்னுடன் யூனியில் படித்த இரு தோழியரும் மூன்று தோழர்களும் ஒன்றாகப் பழகுகிறோம் - கவலைகள் மறந்து சிரிக்கிறோம் - எங்களுக்குள் ஒளிவு மறைவு இல்லை கரைச்சல்கள் இல்லை முத்தமிட்டுக் கொள்வோம் - அரவணைப்போம் - அந்த அணைப்பில் இதமான உணர்வு இருந்தது காம உணர்வு இல்லவே இல்லை! இவர்களைஎல்லாம் கைகழுவி விட்டு நான் ஒரு அடிமையாக, வேற்று மனிதனைச் சேர வேண்டுமா? அவனோடு வாழத் தொடங்க வேண்டுமா?

மூத்த தலைமுறைக்கும் இளைய தலைமுறைக்கும் இடையில் இன்று காணப்படும் மிகப்பெரும் அதல பாதாள இடைவெளியினால் உருவான மிக நியாயமான கேள்விதான் இது! ■

# பிஞ்சுகுழந்தை முதல் முதியோர்வரை

# ஆட்டிபடைக்கும் தமிழ் சினிமா

லண்டன் ராஜாத்தி



சினிமா சினிமா சினிமா.... பிஞ்சுக் குழந்தையில் இருந்து வயதுபோன முதியவர் வரை நம் எல்லோரையுமே ஆட்டிப் படைப்பது சினிமாதான். சினிமா என்பது மாதத்துக்கு ஒரு முறை என்று ஒரு பொழுதுபோக்காக இருந்தது அந்தக் காலம். இருபத்தி நான்கு மணிநேரமும் சினிமா என்பது மக்களின் வீட்டு வரவேற்பறையில் ஓடிக்கொண்டே இருப்பது இந்தக் காலம்.

ஒரு சில வாரங்களுக்கு முன்னர் ஒரு வீட்டுக்கு சென்றிருந்தேன். அவர்களின் வீட்டு தொலைக்காட்சியில் தமிழ் பாடல்கள் ஓடிக்கொண்டுஇருந்தது. நாங்கள் அமர்ந்து பேசிக்கொண்டு இருக்கும் போது அந்த தம்பதியினரின் மூன்று வயது சிறுமி ஒரு மூலையில் அமர்ந்து அந்தபாட்டுக்களை வைத்த கண் வாங்காமல் பார்த்த வண்ணம் இருந்தாள். அதில் காட்டிய அநேக பாடல்களில் அதிகமாய் ஆபாசமே இருந்தது. அரைகுறை ஆடை அணிந்த கதாநாயகி மிகவும் கவர்ச்சியாய் நடனம் ஆட அதை மிகவும் ரசித்துப் பார்த்தாள் இந்தச் சிறுமி. எனக்கு என்னவோபோல் இருந்தது. தூக்கம் வரவில்லையா என்று அந்தச் சிறுமியிடம் பேச்சுக் கொடுத்தேன். அவள் என் கேள்வியை செவிமடுக்காமால் பாடல்களை பார்ப்பதிலேயே மும்முரமாய் இருந்தாள்.

அவளின் தாயார் உங்களுக்கு தெரியுமா இவளுக்கு தமிழ் பாடல்கள் என்றால் மிகவும் பிடிக்கும். ஒரே பாட்டைப்போட்டு ஆடியபடியே இருப்பாள் என்று கூறியது மட்டும் இல்லாமல் எங்கே இந்த ஆன்ட்டிக்கு ஒரு டான்ஸ் ஆடிக்காட்டுமா என்று அந்த சிறுமியை வேறு கேட்டார். அவளுக்கு பிடித்த ஒரு பாடலை



அவர்கள் போடவும் அந்த மூன்று வயது சிறுமி வளைந்து நெளிந்து ஆடினாள். மிகவும் பிரசித்தி பெற்ற அந்தப் பாடல் கதாநாயகி தன்னை கண்டுகொள்ளாமல் இருக்கும் கணவரை படுக்கைக்கு அழைத்துக் கவர்ச்சியாய் நடனமாடும் ஒரு பாடல். இந்த பாடலுக்கு மூன்று வயது சிறுமி அந்தக் கதாநாயகி போல் ஆடுவது சரியா? இந்தச் சிறுமியின் மனதில் ஆபாசம் கவர்ச்சி என்பதை இந்த வயதிலேயே தூண்டிவிடும் சினிமா அவசியம்தானா?

அந்தக் கால ஞாபங்கள் என் மனதில் ஊசலாட நான் வளரும் போது சினிமா என் வாழ்கையில் வகித்த பங்கை சற்று நினைத்துப் பார்க்கிறேன். நான் ஊரில் வசித்த அந்த நாட்களில் என் மாமா கடையில் வீடியோவை வாடகைக்கு எடுத்து அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை எல்லாம் அழைத்து படம் பார்ப்போம். இது இரண்டு மாதத்துக்கு ஒருமுறை அப்படி நடக்கும்.

ஆனால், இப்போதோ நேரம் காலம் பார்க்காமல் எப்போதும் எங்கேயும் சினிமா பார்க்கலாம்! இது நல்லதா கெட்டதா?

அந்தக் காலத்து கவர்ச்சி நடிகைகளான சில்க் சுமிதா, அனுராதா மற்றும் டிஸ்கோ சாந்தி என்று இப்படிப்பட்ட நடிகைகளை நாம் அவ்வளவு சீக்கிரத்தில் மறந்து இருக்க முடியாது. இவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டமே கவர்ச்சி நடிகைகள் என்பதுதான். ஆனால், இப்போது இப்படி கவர்ச்சி நடிகைகள் என்ற பெயரில் யாருமே இல்லை. ஏனென்றால் கதாநாயகியில் இருந்து மற்ற நடிகைகள் எல்லோருமே கவர்ச்சியாய் நடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். நீச்சல் உடையில் ஒரு நடிகை நடித்தால் அது ஒரு பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது அந்தக் காலம். இப்போது அது ஒருசர்வசாதாரணமாக காணும் விடயம் ஆகி விட்டது.





சினிமா என்பது ஒரு பொழுதுபோக்கு. அது சமுதாயத்துக்கு நல்ல செய்திகளை எடுத்துச் செல்கிறது என்பது ஒரு வாதம். ஆனால், சினிமா தமிழ் மக்களின் மனதில் அல்ல இரத்தத்தில் ஊறி விட்டது என்பதுதான் உண்மை. சினிமா ஒரு நல்ல கருத்தைக் கூறினால் அத்தோடு பத்து தவறான கருத்துகளையும் பரப்புகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சின்ன துளி விஷம் போதுமே! சினிமா மக்களின் மனதில் ஆபாசம், சண்டை, போதைப் பொருட்களை பயன்படுத்தல், கொலை, கற்பழிப்பு இப்படி எத்தனையோ விதம்விதமான விஷங்களை ஊற்றி வளர்க்கிறது. இந்த விஷங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் சமுதாயத்தை அழித்துக் கொண்டே போகிறது.

சினிமாவில் சில நல்ல கருத்துக்களை எடுத்துக் காட்டுகிறார்கள். அதை மறுக்க முடியாது. ஆனால் அத்தோடு மக்களை கவர வேண்டும் என்பதற்காக ஆபாசம் கவர்ச்சி கிளுகிளுப்பு என்று பல விடயங்களை புகுத்தி விடுகிறார்கள். யாருமே சமுதாயத்தை மாற்றவேண்டும் என்று படம் தயாரிப்பது இல்லை. பணம் சம்பாதிக்கவே தயாரிக்கிறார்கள்.

நான் வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன். காதல் என்றால் என்ன என்று பத்து வயதுக்கு முன்னமே எனக்கு முதல் முதலாய் காட்டித் தந்தது சினிமா. கற்பழிப்பு என்றால் என்ன என்று எனக்கு காட்டியதும் சினிமாதான். படுக்கை அறையில் என்ன நடக்கும், முதல் இரவில் என்ன நடக்கும் என்பதை நான் கண்டு கொண்டதும் இந்தச் சினிமாவில்தான். குடிபோதை, கடத்தல், கொலை, போதைப் பொருட்களை பயன்படுத்தும் விதம் என்று இப்படி பலதையும் எனக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியதே இந்தத் தமிழ் திரைப்படங்கள்தான்!

குடும்பத்தோடு அமர்ந்து ஒரு படத்தைப் பார்ப்பது என்பது மிகவும் யோசிக்க வேண்டிய ஒரு விடயமாய் வந்து விட்டது. சில காட்சிகளைப் பார்க்கும் போது இருக்கையிலேயே சங்கடமாய் நெளிய வேண்டி உள்ளது. பிள்ளைகள், அம்மா அப்பா மாமி மாமனாரோடு அமர்ந்து ஒரு படத்தைப் பார்க்க முதல் அதில் உள்ள காட்சிகளைப் பற்றி நிறையவே விசாரிக்க வேண்டி உள்ளது.

ஆனால், என்ன இவை எல்லாவற்றையும் தாண்டி எங்களால் சினிமா பார்க்காமல் இருக்க முடியவில்லை. இது சீர்கேடு, நல்லது இல்லை என்று சொல்லிக் கொண்டே படம் பார்க்க உட்கார்ந்து விடுகிறோம். பச்சையாய்ச் சொன்னால் நாங்கள் சினிமாவுக்கு அடிமைகள்!அதுமட்டும் இல்லாது சினிமாவை வைத்துதான் வியாபாரங்கள் பல முன்னேறிக் கொண்டு செல்கின்றன.

திரை உலகில் மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு சில நடிகர்கள் தங்களின் பிள்ளைகளை சினிமா மட்டும் இல்லை டிவி பார்ப்பதற்குக் கூட அனுமதிப்பது இல்லையாம். இதை அறிந்து நான் அவர்களின் புத்திசாலித்தனத்தை மெச்சினேன். ஆனால், மக்களின் - எங்களின் முட்டாள்தனத்தை எண்ணி வெட்கினேன்.

இதற்கு என்னதான் முடிவு? இதற்கு முடிவை ஒவ்வொரு மனிதனும் தனிப்பட்ட விதத்தில் எடுக்க வேண்டும். இரத்தத்தில் ஊறி விட்ட ஒன்றை அவ்வளவு சீக்கிரத்தில் மாற்ற முடியுமா என்ன? அது எங்களின் கைகளின் உள்ளது. நாங்கள் மாறினால் எங்களின் குடும்பம் மாறும். எங்களின் குடும்பம் மாறினால் நாளை சமுதாயமே மாறக் கூடுமே! மாற நினைத்தால் மாறலாம் ●

# பிரித்தானியா நாடாளுமன்றத்தில் முதன் முதலாக நடந்த தைப் பொங்கல்







பிரித்தானிய நாடாளுமன்றில் தைப்பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. பிரித்தானிய நாடாளுமன்ற ஜூபிலி அரங்கில் முதன்முறையாக நடைபெற்றது.

தைப்பொங்கல் விழாவினை தமிழர்களுக்கான அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பிரித்தானிய தமிழர் பேரவை (BTF) இணைந்து ஒழுங்குபடுத்தியிருந்தது.

அகவணக்கம் மற்றும் தமிழ்த் தாய் வாழ்த்து, தமிழ் பாடசாலை சிறுவர்களின் பொங்கல் விழா உரை என்பனவற்றுடன் ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து உலகெங்கிலும் உள்ள தமிழர்களால் தைத்திருநாள் விழா கொண்டாடப்படும் முறையையும் அதன் சிறப்பையும் உணர்த்தும் காணொளித்தொகுப்பு ஒன்று காண்பிக்கப்பட்டது. அரங்கம் நிறைந்த இந்த நிகழ்வில் தமிழ் பாடசாலைகள், கோயில்கள், மதகுருமார்கள், சமூக ஆர்வலர்கள் , பெண்கள்,இளையோர்கள் மற்றும் அனைத்துக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்திருந்தனர். இவ் அரங்கம் தமிழ் மக்களின் செழுமையான கலாச்சார பாரம்பரியங்களை உணர்த்தும் வண்ணம்



அலங்கரிக்கப்பட்டிருந்தது

பிரித்தானிய பிரதமர் Theresa May தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தது போல் பிரித்தானிய தமிழர்கள் இந்த நாட்டின் வளர்ச்சியில் அளப்பரிய பங்களிப்பினைஆற்றி வருகின்றனர். எம் சாதனைகளையும், ஒரு புது வருட பிறப்பையும் வரவேற்று கொண்டாடும் இவ்வேளையில் இலங்கையின் வடகிழக்கில் வாழும் தமிழ்மக்களுக்கு நீதி கிடைப்பதையும் அவர்களின் அரசியல் அபிலாசைகளையும் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்துவதற்கு எமது அர்ப்பணிப்பை புதுப்பித்துக்கொள்வோம்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி பாராளுமன்ற குழு தலைவர் Paul Scully MP அவர்கள் உரையாற்றும் பொழுது உலகம் முழுவதும் உள்ள தமிழ் மக்கள் சூரியனுக்கு நன்றி செலுத்தும் இந்த நாளில் இலங்கை அரசு தேசிய இனப்பிரச்சனைக்கு சிறந்த அணுகுமுறையை முன்னெடுக்கவேண்டும் என தெரிவித்திருந்தார்.

வட அயர்லாந்துக்கான முன்னாள் அமைச்சர் Rt Hon Teresa Villiers MP தமிழ் மக்களின் செழுமையான கலாச்சார பங்களிப்பினை பாராட்டியதுடன் தமிழ் மக்களின் நீதிக்கும் நிரந்தர சமாதானத்துக்குமான தேடலுக்கு தனது ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தினார். பிரித்தானியா முழுவதிலும் உள்ள தமிழ் மக்களுடன் இணைந்து பணியாற்றுவதில் பெருமையடைகிறேன் எனவும் தெரிவித்திருந்தார்.

Rt.Hon. Stephen Timms MP அவர்கள் உரையாற்றுகையில் East Ham பிரதான வீதியில் மட்டும் 114க்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு தமிழர்கள் உரிமையாளராக உள்ளதுடன் வருடா வருடம் அதிகரித்துவரும் தமிழர்களின் இந்த நாட்டிற்கான பொருளாதார பங்களிப்பினை பாராட்டினார். அத்துடன் பிரதான எதிர்க்கட்சி தலைவரும் தொழில் கட்சி தலைவருமான Rt.Hon. Jeremy Corbyn இந் நிகழ்விற்கு வழங்கிய சிறப்பு செய்தியினை வாசித்தார்.

இலங்கையில் மனித உரிமை போராட்டங்களுக்காக தமிழ் மக்கள் மிகப் பெரும் தியாகங்களை புரிந்துள்ளனர். உள்ளாகி இலங்கை சுதந்திரம் அடைந்து 70ஆண்டுகள் நிறைவடையும் வேளையில் இலங்கை அரசு தமிழ் மக்களின் நீதிக்கும், நல்லிணக்கத்திற்கும் சரியான நடவடிக்கை எடுப்பதை உறுதிப்படுத்துவதில்எமது அரசாங்கம் தலைமை தாங்க வேண்டும்" என Rt.Hon. Jeremy Corbyn குறிப்பிட்டிருந்தார்.





Siobhain McDonagh MP தனது உரையில் நீதிக்காக உறுதி தளராது போராடும் தமிழ் மக்கள், உலகம் அவர்களின் உரிமையை ஏற்றுக்கொள்ள தொடர்ந்து பாடுபடுகின்றனர். தமிழ் மக்களின் நீதி, சமாதானம், விடுதலைக்கான போராடடத்தில் தமிழர்களுடன் ஒன்றாக கை கோர்ப்பதாக உறுதியளித்தார்.

Rt.Hon. Sir Ed Davey MP தமிழர்களுக்கான அனைத்துக்கட்சி குழுவின் பிரதி தலைவர் என்ற முறையில் பிரித்தானிய தமிழர் பேரவையுடன் செயற்பட்டுவருகின்றேன். ஐக்கிய நாடுகள் சபையில் சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றாத இலங்கை அரசுக்கு எமது அழுத்தங்களை அதிகரிக்கவேண்டும் என தெரிவித்திருந்தார். Mike Gapes MP எமது நாட்டின் பல் இன கலாச்சாரங்களில் பிரித்தானியாவில் வாழும் தமிழ் சமூகத்தின் பங்களிப்பு அளப்பரியது. மேலும் தமிழர்கள் கல்விக்கு கொடுக்கும் முன்னுரிமை காரணமாக தமிழ் இளையோர்கள் கல்வியில் சிறந்த முறையில்



விளங்குகின்றனர். நாம் ஒருபோதும் இலங்கையில் நடைபெற்ற கொடூரமான நிகழ்வினை மறக்கக் கூடாது என தெரிவித்திருந்தார்.

Bob Blackman MP முதலில் உலகம் எங்கும் வாழும் தமிழர்கள் நீதியை பெற்றுக்கொள்வதையும், இலங்கையில் போர் குற்றம் இளைத்தவர்கள் நீதியின் முன்நிறுத்தப்படுவதை நாம் உறுதிப்படுத்த வேண்டும். அடுத்து தமிழ் மக்கள் தம் தாயகத்தில் தம் நிலத்தில் விவசாயம், மீன் பிடி தொழில் மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்களையும் நாம் உறுதிப்படுத்த வேண்டும். உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்த பின் தமிழர்கள் நன்மை அடைவதை உறுதிப்படுத்த வேண்டும்

மேலும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் பிரித்தானியாவில் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகளின் தலைவர்களுக்கான மாநாட்டில் தமிழ் மக்களும் நாம்அனைவரும் இணைந்து போராடும் விடயங்களை முன் கொண்டு வர வேண்டும் என தெரிவித்திருந்தார்.

இந்த நிகழ்விற்கு பழமை வாத கட்சிக்கான பிரித்தானிய தமிழர் (BTC), தொழில் கட்சிக்கான தமிழர் (TfL) மற்றும் லிபரல் டெமோகிராட்க்கான தமிழ் நண்பர்கள்(TfLibDem) இணை ஆதரவு வழங்கி இருந்தனர். ●

மகாலிங்கம் கௌரீஸ்வரன்

# லண்டனில் தமிழ் நாடகத்தின் எதிர்காலம்



# அவைக்காற்று நாடகவிழா

## குறித்து ஒரு உரையாடல்





சிறுவர்களும் இளையோரும் இணைந்து நடத்திய தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தின் 2017 லண்டன் தமிழ் நாடக விழாவை முன்வைத்து ஒரு கலந்துரையாடல் 02/12/2017 அன்று நடைபெற்றது. "பரமார்த்த குருவும் சீடர்களும்", "புதிய பயணம்", "யுகதர்மம்" என்னும் நாடகங்களும்; "கான சாகரம்" இசை நிகழ்ச்சியும் இடம் பெற்ற நிகழ்வு குறித்து கலா ரசிகர்களும், இலக்கியவாதிகளும், அரங்கேறியவர்களும், அவர்களின் பெற்றோரும், ஆர்வலர்களும், அவைக்காற்று கலைக் கழகத்தினரும் அளவளாவிக் கொண்டனர். கருத்துக்கள், கேள்விகள், கேள்விகளிற்கான மறுமொழிகள், ஆலோசனைகள் என பயன் தரும் வகையில் உரையாடல்கள் நிகழ்ந்தன.

அனைவரும் வட்டமாக அமர்ந்திருந்து உரையாடல்களில் பங்கு கொண்டனர்.

"பரமார்த்த குருவும் சீடர்களும்" நாடகத்தை வயது மிகக் குறைந்த சிறுவர்களைக் கொண்டு மிக நேர்த்தியாக அரங்காடியமை குறித்து பலரும் பாராட்டினார்கள். அன்சா, மாசிலன், மறவன், விக்னேஸ்,கஸ்தூரி, சச்சின், அஜய், அவினாஷ், சிரேயா ஆகியோர் பங்கு பெற்றார்கள். பாதல் சர்க்காரின் மூன்றாம் அரங்கு வகையில் அரங்கப் பொருட்கள் எதுவும் இன்றி, ஏறி இறங்கும் திரைகள் எதுவும் இன்றி பரமார்த்த குருவும் அவர் தம் சீடர்களும் யானையிலே யாத்திரை போகும் காட்சிகளை ஒரே ஒரு யானை உருவைக் கொண்டு இளம் சிறார்கள் நையாண்டி நாடகமாக உருவகப்படுத்தி பார்வையாளர்களுடன் உரையாடினார்கள். நாடகம், தான் சொல்ல வந்த செய்தியை தெளிவாக சொல்லியிருக்கிறது என்பது கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்களின் வார்த்தைகளில் வெளிப்பட்டது.

தமிழ் அவைக்காற்று கலைக்கழகம் தொலைநோக்குப் பார்வையுடன் முன் வைக்கும் "இளையவர்களே எமது எதிர்காலம்" என்னும் முழக்கத்தினை தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தின் இளையவர்கள் எவ்வளவு கவனத்துடனும் பொறுப்புடனும் முன்னெடுக்கிறார்கள் என்பதை "புதிய பயணம்" நாடகத்தின் மூலம் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். தமிழ் அவைக்காற்று கலைக் கழகத்தின் இளையோர்கள் இந்த நாடகத்தை தாமே எழுதி, நெறியாள்கை செய்து அரங்கேற்றியதை ஒரு சாதனை என்றே குறிப்பிட வேண்டும். ஏனெனில் புலம்பெயர் நாடுகளில் பிறக்கும் இரண்டாம் தலைமுறையினர் எம் தாய்மொழியான தமிழ்மொழியை பேசவே சிரமப்படும் சூழலில் இவர்கள் தமிழில் ஒரு நாடகப்பிரதியை எழுதி இயக்கியிருக்கிறார்கள். பிரித்தானியாவில் வசிக்கும் ஒரு குடும்பம் யாழ்ப்பாணத்திற்கு விடுமுறையில் செல்வதை களமாக கொண்டு கதை சொல்லப்பட்டது.

தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் தொடர்ச்சி இந்த இளையவர்களால் தொய்வின்றி தொடரப்படும் என்று கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்கள் "புதிய பயணம்" நாடகத்தை முன் வைத்து நம்பிக்கை தெரிவித்தார்கள். சந்தோஷ், செல்வி, ஜனுசன், லுக்சியா, ஆதிசங்கர், சாருசன், சரிதா, மானசி, அனுசன், கிந்துசா,சிந்து ஆகிய புலம்பெயர் தமிழரின் இரண்டாம் தலைமுறையினர் இணைந்து எழுதி, இயக்கிய "புதிய பயணம்" தமிழர் நாடக வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை, புதிய நம்பிக்கையை தொடக்கி வைத்திருக்கிறது.

இதுவரை இருபத்தொன்பது வருடங்கள் மேடையேறிய "யுகதர்மம்" நாடகம் இந்த வருடம் புலம்பெயர் நாடுகளில் பிறந்து வளர்ந்த இளய தலைமுறையைச் சேர்ந்தவர்களின் நடிப்பில் திரு. பாலேந்திரா அவர்களின் இயக்கத்தில் மேடையேறியது. ஜேர்மானிய நாடகாசிரியர் பேர்டோல்ட் பிரெக்ட் ( Bertolt Brecht)எழுதிய " The Exception and the Rule" நாடகத்தின் தமிழாக்கமே "யுகதர்மம்" என்னும் நாடகம் என்பது இந்த நாடகத்தின் கனதியை எடுத்துச் சொல்கிறது. சந்தோஷ், மானசி, ஜனுசன், அனுசன், சாருசன், லக்கியா,ஆதிசங்கர், சிந்து, சரிதா, செல்வி என்னும் இளையோர்கள் இந்த நாடகத்தில் பங்குபற்றினார்கள்.

ஏழைகளிற்கும், பணக்காரர்களிற்கும் உள்ள வர்க்க முரண்பாடுகளையும்; முதலாளித்துவ சமுதாய அமைப்பில் எப்பொழுதும் ஏழைகளே பாதிக்கப்படுபவர்களாகவும், குற்றவாளிகளாகவும் உள்ள அவல நிலையையும் பேர்டோல்ட் பிரெக்ட் யுகதர்மம் நாடகத்தில் அடையாளப்படுத்துகிறார். உலகம் முழுவதற்கான முதன்மையான முரண்பாடாக இது இருப்பதனால் "யுகதர்மம்" நாடகம் தமிழ் பார்வையாளர்களின் மனங்களிலும் அவர்களிற்கான நாடகமாக பதிந்து விட்டிருக்கிறது என்று கலந்துரையாடல்களில் கலந்து கொண்டவர்களில் ஒருவர் தெரிவித்தார்.இப்படி ஒரு கனதியான நாடகத்தை புலம்பெயர் இளையோர் நடிப்பது ஒரு சாதனையாகும்.

சத்தியமூர்த்தி அவர்களின் ஓங்கி ஒலித்த குரலும், விஜயகுமாரி, தர்சினி, குகனேஸ்வரி, பவனுஜா,ஆனந்தராணி ஆகியோரின் கண்ணீரும், களிப்பும், எழுச்சியும் குழைந்த குரல்களும் இசைவாணர் யாழ் கண்ணனின் சுரமும், சுருதியும், சந்தமும் சேர்ந்த மெல்லிசை என்னும் இன்னிசையும் காற்றுவெளியிடை எங்கும் கவிஞர்களின் வரிகளை எழுதிச் சென்றதும் , தபேலா, ஆர்மோனியம், வயலின் என்னும் மூன்றே மூன்று இசைக் கருவிகளையும் ஒரு பாடசாலையின் அரங்கினில் இருக்கக் கூடிய மிகக் குறைந்த ஒலிப்பதிவு வசதிகளையும் வைத்துக் கொண்டு நிகழ்த்திய "கானசாகரம்" என்னும் இசைமழை மனங்களில் மண்வாசனையையும், மகரந்தத் தேனையும் சொட்டுச் சொட்டாக ஊற்றியதும் கலந்துரையாடலில் பதிவு செய்யப்பட்டது.

தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தின் நாடகங்களை எழுத்தாளர் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் பாராட்டிப் பேசினார். மேலும் நாடகங்களும், நடிப்புப் பயிற்சிகளும் தமிழ் மொழியையும், நடிப்புக் கலையையும் மட்டும் கற்பிக்கவில்லை என்றும் சிறுவர்களிற்கும், இளையவர்களிற்கும் உளவலிமையையும் அவை அளிக்கின்றன என்று மருத்துவத் துறையிலும், நாடகத் துறையிலும் தமக்கிருக்கும் கல்வியையும், அனுபவத்தையும் வைத்து அவர் கருத்து தெரிவித்தார்.

தமிழ் அவைக்காற்றுக் கழகத்தில் பயிலும் இளையோர்கள் தமது வாழ்வில் நாடகமும் தமிழ் அவைக்காற்று கழகமும் அளித்த வளங்களைக் குறிப்பிட்டு பேசினர். நடிப்பு பயிற்சி; தமிழ் மொழியை பேசவே சிரமப்பட்டவர்கள் கவிதைகளை பேசி நடிக்கும் அளவிற்கு மொழி ஆளுமை கொண்டவர்களாக உருவாகியமை; பல்கலைக்கழக அனுமதிக்கான நேர்முகத்தேர்வுகளை எதிர்கொள்ள மேடைப்பயிற்சி அளித்த தன்னம்பிக்கை; தமிழ் அவைக்காற்றுக் கழகத்தில் நடிப்புப்பயிற்சிக்கு சென்றபோது அறிமுகமானவர்கள் நெருங்கிய நண்பர்களாக,தோழர்களாக கிடைத்தது என்று தங்களது வாழ்வில் தமிழ் அவைக்காற்றுக் கழகம் அளித்த கொடைகளை விதந்து பேசினர்.

தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகத்தின் நாடகப்பள்ளிக்கு தமது பிள்ளைகள் வந்து பயிற்சிகள் பெற்றதையும், நாடகங்களில் நடித்ததையும் தாய் ஒருவர் பெருமிதத்துடன் குறிப்பிட்டுப் பேசினார். மேலும் அவர்கள் இன்று மேற்படிப்பு, தொழில் என்று வேறிடங்களிற்கு சென்று விட்டாலும் தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தின் நாடகங்களை தான் தொடர்ந்து பார்த்து வருவதாகவும் நவீன நாடகங்கள் குறித்த பார்வையும், விளக்கத்தையும், கலை அனுபவத்தையும் அவை தமக்கு தருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் பெரும்பாலான நாடகங்கள் மொழிபெயர்ப்பு நாடகங்களாக இருப்பதாக ஒரு பார்வை இருப்பதாக கலந்து கொண்டவர்களில் ஒருவர் விமர்சனம் ஒன்றை முன் வைத்தார். "அது தவறான கணிப்பு" என்றும், "தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் நாடகங்களில் பெரும்பாலானவை தமிழ்பிரதிகளையே மூலங்களாகக் கொண்டவை" என்றும் திரு.பாலேந்திரா அவர்கள் விடையளித்தார்கள். மூன்றாந்தர தமிழ்ச் சினிமாக்களின் பாதிப்பினால் தமிழ் நாடகங்களும் அவை போலவே கேலிக் கூத்துகளாகவே இருக்கும் சூழலில் நல்ல நாடகங்கள், நவீன நாடகங்கள் குறித்த பயிற்சிகள், புரிதல்கள் இல்லாமல் இருப்பதினாலேயே விளங்கவில்லை என்றும் மொழிபெயர்ப்பு நாடகங்கள் என்பதனால் ஒன்றிப் போகமுடியவில்லை என்னும் விமர்சனங்கள் வைக்கப்படுகின்றன என்றும் மறுமொழிகள் வழங்கப்பட்டன.

"இளையவர்களே எமது எதிர்காலம்", "தொடர்ந்த மேடையேற்றங்களே தீவிர நாடக இயக்கத்தை வலுப்படுத்தும்" என்ற தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தின் செயற்பாடுகளை அடுத்த தலைமுறையினர் கொண்டு செல்வார்கள் என்ற நம்பிக்கையையும்; அதற்கு இயக்குனர்கள், நடிப்புக் கலைஞர்கள்,எழுத்தாளர்கள், கவிஞர்கள், பாடகர்கள், இசைக் கலைஞர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் எனப் பலரின் அயராத உழைப்பும்; தமிழ் நாடக ஆர்வலர்களின் ஆதரவும் உறுதுணையாக இருக்கும் என்பதனை இக்கருத்தரங்கு உறுதிப்படுத்தியது என்று உரத்துச் சொல்லலாம். ●

# LycaFly

## The most popular travel agent for Sri Lanka

# COLOMBO fr £382

Special deals for July/August 2018 Travel

## Book now! Save up to 40%

**COME TO THE BEST IGNORE THE REST!**

**£20 FREE LYCAMOBILE CREDIT WHEN YOU BOOK WITH US**

Terms & Conditions apply. Applicable only for selected bookings

### WORLDWIDE FLIGHTS

| | | | |
|---|---|---|---|
| Chennai | fr £370 | Melbourne | fr £539 |
| Trichy | fr £507 | Los Angeles | fr £328 |
| Kochi | fr £363 | Toronto | fr £283 |
| Mumbai | fr £319 | Bangkok | fr £368 |
| Delhi | fr £319 | Singapore | fr £369 |
| Goa | fr £408 | Kuala Lumpur | fr £364 |

Fares are from and include taxes. T&Cs apply.

### BUDDHIST PILGRIMAGE TOURS TO INDIA



- 9 days Tour full board basis
- Including return & internal flights
- Air Conditioned coaches
- Sightseeing
- Boat ride at river Ganges
- Also available on school holidays

For more details please contact
Priyantha on 07528055417

Fly Now Pay Later

**FAST, FLEXIBLE, FINANCE FOR TRAVEL**

Easy instalments from 3 – 10 months to pay your travel cost.

**CALL 0207 132 32 32** lines open **24x7**

IATA

**WEMBLEY**
14 Ealing Road, Wembley,
London HA0 4TL · 0207 132 0055

**EAST HAM**
180 High Street North,
East Ham E6 2JA · 0207 132 0056

**CANARY WHARF**
Walbrook Building, 195 Marsh Wall
London E14 9SG · 020 7132 0100

9624 ATOL PROTECTED

All fares shown above are subject to availability. The Lycamobile credit offer applies for fully paid adult return tickets and excludes Jet Airways and Emirates bookings. Top up must be redeemed within 30 days of booking. Not to be used in conjunction with any other offer. Full terms are available on our website. LycaFly reserves the right to withdraw this offer before the expiry date, without notice.

Lycaremit
Send money home for less

£5 FREE
LYCAMOBILE CREDIT
when you transfer over £300*

உலகின் எந்த நாட்டிற்கும்
மிகக் குறைந்த கட்டணத்தில்

மிகக் கூடிய பணமாற்று வீதத்தில்
அதி விரைவாக பணம் அனுப்ப...

Visit **www.lycaremit.com**
or
**one of our branches**



**Our branches**

**Coventry**
543 Foleshill Road
Coventry, CV6 5AU

**East Ham (Lycafly)**
180 High Street North,
London, E6 2JA,

**East Ham (Shakthi)**
245-247 High Street North
London, E12 6SJ

**Gants Hill**
639 - 643 Cranbrook Road,
Ilford, IG2 6SX

**Mitcham (Food world)**
117 - 119 London road,
Mitcham CR4 2JA

**Wembley**
14 Ealing Road,
Wembley HA0 4TL

Visit
**lycaremit.com**

For more info call
**0207 132 0015**

Or FREE from your Lycamobile
**305**

*Free £5 Lycamobile credit is available for customers who send £300 per single transaction or more with Lycaremit during the calendar month. When you register for Lycaremit, you will need to provide us with your Lycamobile number. You will receive the £5 Credit on your Lycamobile number within 3 weeks from the date of your transaction. Offer available until 30/04/2018 and available only once per month per customer. Lycaremit is a trading name of Lycamoney Financial Services Limited, and is authorised and regulated by the Financial Conduct Authority (registration number: 900153). Registered office: Walbrook Building, 195 Marsh Wall, London, E14 9SG. Company Registration number: 08662355.

LMFS
Lycamoney Financial Services Ltd